26

மதுரை [illegible]

[illegible] அரசு. [illegible]

நாடகம்.

T.D.R.S. - 32-99.

R.R.No. 188 - 1 - 1894

O-7 892 M,N
M96
116804

அநாதிசப்ஸ்து.

நூதன

# அர்ச். இஸ்தாக்கியார் நாடகம்.

இஃது

மிகவுந் சங்கிக்கத்தக்க அப்போஸ்தலிக்குருவாகிய
கனியர் ஆண்டவர் உத்தரவின்படி.
முன் பதிப்பித்த பிரதியுடன்,
ம-ள-ள-ஸ்ரீ, தஞ்சை, சமாதானம் தானியேல்
சுவிசேடக்கிராயரவர்கள்
மாணாக்கருளொருவராகிய
ம. ஜோ. ஞானப்பிரகாசபிள்ளையவர்கள்
இயற்றிய
வேறு சில நாதனாவளி வர்ணமெட்டுகளைச்சேர்த்து
சம்புவங்கபுரம்
நி. மதுரைமுத்துப்பிள்ளை
அவர்களாற் பார்வையிட்டு
தங்கோலம்

## ந. இராமசாமிநாயுடு

அவர்கள் முயற்சியால்

சென்னை குனா,
ஸ்ரீ லட்சுமி நாராயண விலாச அச்சியந்திர
பதிப்பிக்கப்பட்டது.
1896.

விலை

OFFICE OF THE REGISTR[AR] 19 MAR 96 MADRAS

116804

O-3892-M, 9
M96

# முகவுரை.

இந்நாடகத்தை எழுதிப்பதால் உண்டாகும் பயன் யாதோவென்னில் உரோமாபுரி முதலிய இராச்சியங்களைத் தொன்றுதொட்டு இராச்சிய பரிபாலனஞ்செய்துவந்த அஞ்ஞானவிராயர்கள் சத்தியவேதத்தின் வெளிச்சங்களைக் கெடுத்து வேரோடறுக்கும்பொருட்டு அக்காலத்தில் அருள்வேதத்தைப் பிரசங்கித்துவந்த அனுவிருந்த பக்தர்களையும் கன்னியாஸ்திரிகளையும் சொல்லிடங்காத பற்பலவிதமான உபத்திரவஞ்செய்தார்களென்று அவரவர்களின் சரித்திரத்தினாலறியக்கிடக்கின்றதல்லவா? ஆயினும், பொன்னைப் புடமிடப் புடமிட மாற்றுயர்வது குறைவுபடாது உயர்வதுபோல, சர்வேசுரன் தமது அடியார்கள்மூலமாக அநேக அற்புதாதிசயங்களைச் செய்வித்ததினால் இப்பூவுலகின்கண் சூரியனுடைய கதிர்படாதவிடம் இருந்தபோதினும் சத்யவேதம் பரம்பாதவிடம் எத்திசையிலுமில்லையென்று உச்சிப்பகலினும் விளக்கமாயுள்ள விருத்தாந்தத்தால் ஒத்துக்கொள்வார்கள். ஆகவே, இந்நாடகப்பெயர்க்குரிய தலைவராகிய அர்ச். இஸ்தாக்கியாரின் திவ்விய புண்ணிய சரிதையை ம-ள-ள-ஸ்ரீ ஆ. தா. மிக்கேல் பிள்ளையவர்கள் இதனை அச்சிற்றிப் பிரசுரிக்கவேண்டுமென முக்கிய கருத்துள்ளவராய்க் கேட்டுக்கொண்டதின்பேரில் யாம் பெரு முயற்சியோடு சீர்தூக்கி ஆராயுங்கால் ஆதினை வித்வசிரோன்மணிகளால் எழுதப்பட்டிருந்த கையெழுத்துப் பிரதிகளில் இந்நாடக ஆக்கியோன்பெயர் காணாது விடுத்திருக்கிறது. யான் அநேக கை. எட்டுப்பிரதிகளில் கண்ணோக்கியும் பன்முறை எனக்குள்ளிருந்த பெரும் அவாவினால் பெரியோரை வினவியும் கை ஆசிரியரின் பெயர் அகப்படவில்லை. ஆகவே பண்டையக்காலங்களில் கூறியிருக்கப்பட்ட அநேக நாடகப்பிரதிகளில் ஆக்கியோன்பெயர் அட்டாதிருப்பது ஏற்கனவே பார்க்குங்கால் முற்காலத்திலுள்ள நாடகத் தமிழ்ப்புலவர்கள் பற்பலர்களால் பயில்வுற்றுப் புட்கள் செய்து ஒரு நாடகத்தை உருவாக்கிச்சொல்வது அவர்களினது குறைவுபடுமென்று ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. இயாக இந்நாடகத்தை அச்சிற்றிவைத்தபடியே 1879 – ளு ம-ள-ள-ஸ்ரீ. ஆ. தா. மிக்கேல் பிள்ளையவர்களின் பொருளுதவி

வைக்கொண்டு எனது நன்முயற்சியினால், ஏட்டுப்பிரதியாயிருந்த அர்ச். இஸ்தாக்கியாரின் திவ்ய நாடகத்தை எனது சிற்றறிவுக்கேற்ப எழுத்தாலுளவாகிய வழுக்களைக் களைந்து தற்காலத்தின் பெரும்பான்மை செவிக்கின்பமாய் புகழ்பெற்றுவரும் சங்கீர்த்தனரூபமாகிய சிங்காரமாவளி, இந்திரசபா முதலிய நூல்களிலுளவாகிய இராக வண்ணமாய் இசை தாள வழுவிலலாமல் சில நூதன செய்யுட்கள் செய்து முன்னிருந்த செய்யுட்கருத்திற்கிணங்க சிற்சில விடங்களில் இந்நாடகத்தில் அமைக்கப்பட்டு கேட்பவர் மனதை ஆனந்தப்பரவசஞ்செய்யுமாறும் பாடுவோர் மனது உற்சாகமாகும்படியாயும் சத்யவேத உண்மை எளிதிற் தெளிதற்பொருட்டும், இச்சிறிய நாடகத்தை அச்சிட்டு முடித்தனம். இஃது இப்படியிருக்கக்கொள்ள முதன் அமைச்சனுக்குப்பிலாகரன் என்கிறப் பெயரைச் சூட்டினோம். அவர் மனைவிக்கு மதிபூஷணியென்கிற பெயரை நவமாகத்தரித்தும் ஞானசிகை பெற்றபின்னர் ஒப்பிலது என்பதற்குரியதாய் ஒப்பிலாமதியென்கிற இடப்பெயரையும் நாட்டினோம். ஆக்கினைப் பிரிவில் அரசன் மந்திரிமார்களிடம் நான்குமுறையும் நான்குமுறை மந்திராலோசனைச் செய்கிறதாக நூதன ஏற்பாடுசெய்தும், இராஜனுக்கு குரு இருப்பதாக ஓர் பிராமணனை ஏற்படுத்தியும் என்னுடையன்றவரையில் இந்நாடகத்தில் நூதனப்பிரயோகஞ்செய்து பிரகடித்தும் இப்புத்தகம் அச்சிட்டுப் பதிப்புவருவும் சென்றமையால் இச்சரிதையினருசி தெரிந்துள்ள புண்ய புருடர் சிலரினவும் இந்நூல் வேண்டுமென கேட்டுக்கொண்டமையால் அவர்களினது விருப்பிற்கிணங்கி இரண்டாமுறையும் சில மாற்றங்கள் அச்சிட்டு வெளியாக்கினேம். இதனுள் சேர்க்கப்பட்டிருக்கும் செய்யுட்களிலும் [illegible]ரிய வசன நடையிலும் என்றும் அச்சுக்கோர்ப்பவர்களாலும் சேர்ந்தபிழைகளைக் கண்டு [illegible]ரும் [illegible]தறிதப் பெரியோரை மன்னிக்கக் கோருகிறேன்.

இங்ஙனம்,

ந. ஆ. முத்துசாமிதாசன்,



சர்வேஸ்வராயநம ?

இஃது புதுவை மகா-ஸ்ரீ சி. அருளப்பகவிராஜப்
பண்டிதரவர்கள் கூறிய
காப்புத்தெண்சீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

சீர்பெற்றரோமைநக ராளுமக ராசனின்
 திருச்சமுகமுதன்மந்திரியாய்
ஜெகமெலாந் திரைகவர்ந்து வரியெற்றும்போதினிற்
 றிவ்யகா யகனருளினால்
தேசமதில் வாழ்குடிகள் பயிரெலாம் விலங்கினம்
 சேதஞ்செய் கின்ற தென்று
செம்மல்திறை யாளிடம்முறையிட அன்னவன்
 சித்தமிக வேகலங்கி
சீறிமிகச்சினந்துமே முதன்மந்திரி தனைநோக்கி
 சேனையுட னேசென்றுநீ
செந்நெற்பயி ரானதை யழிக்குமிருகங்களைச்
 சிதறவடித்தே நொடியினில்
ஜெயங்கூறி வருதியென அன்னவுரைதனைக்கேட்டு
 திருவுளமீதிட்டது
சேனைநாற்பண்டையுடன் வேடர்வில்லியரோடு
 திரள்கொண்ட வேகமுடனே
போர்பற்று தற்களைய கோபமுத்த காசறுப்பு
 புலிகரடி யாளி சிங்கம்
பூரிமான் கவரிநிறை மான்பன்றி யானையும்
 பூமிநிறத் திடையடித்த
போகுமக்காலையினி லடவிதனிலே பதிகம்
 புகலரிய திருச்சொரூபமாய்ப்
பொற்குருசுடன் அதிக காந்தியுமாய்க்கா[illegible]
 பொன்மானிடத்திற் றோன
பூரிசையி லிவைபோல விசயங்கண்டு மேல்
 பூரணனந்த பொருளே

புத்திபடை பெரைக்குள் னருள்தாருமென்றுவாய்ப்
பொறாமைக்கூடப்பிறக்கும்
புரவலன் றனைநோக்கி நீதிசத் தியநூல்ப்
பிரதவமுறைப் புகட்டி
புகருமில்லைப் பெய்மதந் தனையொழித் தெம்பரனை
போற்றிமெய் ஞானதீட்சை
பேர்பெற்று மீண்டும் நீ இவ்வழிவகதரும்
பிரா பரம வஸ்து காட்சி
பெருமையுட னுறவிழி யரத்கரனைலாமென்று
பிரியமக் கலமொழிப்படிப்
பேரானந் தந்திறெடு பில்லிட மடைந்து தன்
பிறவுருமில லானுந் தானுமாய்
போகப சத்யபறை ஞானதீட்சைப்பெற்று
பின்னுமங் கானகத்தில்
பெரியோன் மொழிக்கபடி அரியஞானத்தனாய்
பேருலகில் வாழு நாளில்
பெருமையாய்த் தான்தேடி வைத்தப்பொற் பணிதிகள்
பெட்டிபே ழைகள்முதலாய்
பேதமா யுணவுதா னியவிலைக் குறைத்தவன்
பிடுக ளழிந்தவண்ணம்
பிரிவகி விட்டதால் தக்கதனை விட்டுப்
புறப்படுங்கா லேதன்னில்
கார்பெற்றயனிவிளைய மாக்கல னிடத்திலே
காவல் கூலிக் கீடதாய்
கல்வியிரு பாலனைக் காணுதலைக்கு
காடிபெல் தூர் அடைந்த
கானில் திவ்யானாச ஜல்ரோமை காட்டினில்
கன்னிவார்ழ்ந்திட வாசன்
கவிருக்கிடு மனதமைச்சனே காணக்கு
கைவேத்திபஞ்சு செய்யென
காணத்திசைவழில் பொன்னும்மொழிசொல்
கல்லாறு வதைகள் பெற்ற
கிறசதனை யானை காட்டருபமாய்
...றேன் செய்த வண்ணம்
...விர்த்தினன் முத்துசாமி
...ன்மனையரோ.



கடவுள் துணை.

கோகுலாபுரம் வித்துவான் அருணாசலமுதலியார்
மாணாக்கரிலொருவராகிய
ம-ள-ள-ஸ்ரீ, திருமணலூர்
முனிசாமி முதலியாராலியற்றிய
சாற்றுக்கவி.

மதிமேவுகதிரோடு குணப்பாதவளமேவு
மண்டலமெலாம்புகழவே
மறைபாதிரிபோல நிறைகொண்டுலகாண்ட
மன்னனிஸ்தாக்கியார் தன்
சரிதைமேவுசரிதையின் னிலைமேவுமன்னற்கு
துணைமேவுமினையில்மோட்சத்
துரைமேவுகரையெனத் துயருத்திடுவின்ப
தூண்டுகோலவென்போற்
பதிமேவுமாந்தர்கட் பரமேவண்டிசுற
பதமேவுதமிழ்கடையினால்
பணமேவுகரியமாலினை மேவுகுலமுனான
பன்றிமேவுசெரியான்
நீடிமேவு தக்கோலமென்னுமாபதிமேவு
நெறியெலாமேவுமுதியோன்
நிலமெலாம்புகழுமின் னால்மசாமிவேள்
நிறைவேற்றிதந்தனரோ.

இதுவுமது.

திருமணலூர் முனிசாமி முதலியாரா லியற்றப்பட்டது,
சீர்வளரும் இஸ்தாக்கிநாடகத்தை முன்னாள்
சிறப்பித்தியப்
பேர்வளருந்தக்கோல மென்னுநகர்ப்பெற்றே வாழ்
பெருமைமிக்கத்
தார்வளரும்நரசிம்ம நாயுடெனும் திறமிக்கோ
ரவைத்தால்வந்து
சேர்வளருங்குணராம் சாமிவள்ளைக்குறு
நிலைத்தான்மாதோ.

## அர்ச். மிக்கேல் சம்மனசு துதி.

கட்டளைக்கலிப்பா

வேதநாதனை விண்ணதில் வாழ்த்திடுமே
விளங்கிடு நவகண விண்ணோர்களில்
நீதமகமு தன்மய தானைகல்
திருபனே மிக்கேலென்று நற்போதனே
காதலாகவே இஸ்தாக்கி யாரினல்
கதையானதைப் பாடிட வெண்ணினேன்
திறலொன்று மனுகாது காப்பாயுன்
திருக்கழலதற் கென்றென்றும் தோத்ரமே.

## அவையடக்கம்.

விருத்தம்

கஞ்சமலர் இதழ்விரித்து சொரிசெங் தேனைக்
கண்டெறும் பெடுத்தருந்தும் ரோமை நாட்டில்
தஞ்சமுறு தருமனிஸ் தாக்கிக் கதை
தனையெடுத்து நாடகமாய்த் தமிழாற் பாட
பிஞ்சுவளர்ச் சிறுமதியே பெருது சொன்னாலும்
பெற்றதக்கை பிள்ளைபிழை பொறுப்பார் போல
மிஞ்சுகவி புலவர்பிழை பொறுப்பீருங்கள்
மென்பதத்தை பென்றலையின் மேற்கொண்டேனே.

---

## விக்டோரியா இராணியம்மாளவர்கள்மீது வாழ்த்து.

ஸ்ரீ சாம ராஜ இந்திர உனைப்போற்றிடுவோம்

என்ற வர்ணமெட்டு.

பல்லவி

சுப மாகவே வாழ்ந்திட வேணுமே

சரணங்கள்

எங்கும்புகழ் மகிழ்ந்திலங்கும் விக்டோரியா
இராணியம்மாள் செங்கோல் நீடியே,— சுப
பிரின்ஸ்ஆப்வேல்ஸ் என்னும் பெருமானவர்களும்
பெருமைமிகு மனைவி சேவரும்,— சுப



சீர்பெற்றிலங்கிடும் டியூக்ஆப் எடின்பரோ
செம்மல் ஸ்ரீமான் கனவானுமே,— சுப
டியூக்ஆப் கன்னட்ப்ரபு திகழ்மன்னவானும்
தேசமதில் புகழ் நீடியே—, சுப
சொல்லுமிக்லீஷ் கொடி.இலங்கும் பார்லிமென்ற்
துகளில்லா மெம்பர்களும் ஓங்கியே,— சுப
கற்றபுலவோர்முதல் காசினி மாந்தரும்
கழறுமிவ் தாக்யார் நாடகமும்,— சுப

தரு, தோடையம்-சாட்டை-ஜம்பை-தாளம்.

சீர்சிறந்த ரோமைதன்னில் சிறந்தாசு செலுத்துகின்ற
இறையானின் வாசலுக்கு முதலமைச்சனை ஆ-ஆ
பேர்சிறந்த பிலாசுவென்போன் பெருவனத்திற் கலைமருப்பின்
பேசரிய நவகாட்சி ஆச்சரியமாக ஜெய-ஜெய
கண்டெசத்ய வேதமதை கவர்ந்திடு மிஸ்தாக்கி யென்போன்
காதைதனை நாடகமாய் ஆதரையில்பாட ஆ-ஆ
பண்டிலக வினாந்தபொங்கி பாயுங்... சமுத்திரத்தில்
பாதையென கடந்தசதம் காதாரபதந்துணையே. ஜெய-ஜெய



வாழ்த்துக்காரர்கள் ஆரம்ப விருத்தம்.

ஆதிதிருப்பரம் பொருளைப் புகழ்க்க ஏற்றி
அவனிதனில் மும்மாரி பொழிந்தே மிக்க
மேதினியெலாஞ் செழித்து விளங்கவோங்கி
மிக்கதவமுனிவோர்கள் வேள்வியோங்க

மாதவத்தோ னிஸ்தாக்கி மனைவிமைந்தர்
வருத்தமுற்ற சரித்திரத்தை வழுத்தவேண்டி
காதலுடன் முன்னவனைத் துதித்து வாழ்த்தற்
காரிருபேர்கள் சபை வருகின்ருரே.

தரு, இ-ம்-எமுனு கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி

வந்தனத்தோடு துதிபேசவே ஞான
வாழ்த்தற்காரர் சபையில் தோன்றினார்.

அநுபல்லவி

சுந்தரமணி பொன்மாலை துலங்குஞ் சரிகைசேலை
விந்தையுடனே மேலே விளங்க சபைமுன்னாலே-வந்த

சரணங்கள்

அண்டர்மகிழ்ந்து மலர்மாரி விட இந்த
அதனையோர் கனி[illegible] மேவிட
தண்டாமரை மலருந்[illegible] தங்கப்பணியலருன்
கொண்டேசபை யேவருங் கூறித்துதிபுரியும்-வந்த

வேதபாரகர் மேற்றிராணிகள் குரு
வேந்தர் கன்னிகை சன்னி யாசிகள்
நீதிநெறி பெரியோர் நீடூழி வாழ்கவென்று[illegible]
நிதொன்றனுகாதிரு சிறந்தசபையின்[illegible]

பத்திநெறி முறைத்தவறிடா சனப்
பாவலர்கள் செழித்துத் தேறிட
முத்திவழியறிந்து முதானையோர் சிறந்து
சுத்தப்பணி நிறைந்த சுகிர்தமொழிப்பகர்ந்து-வந்த

வாழ்த்தற்காரர்சொல் கட்டளைக்கலிப்பா.

ஆதிபாவந் நீக்க மனுவாய்வந்து
அறையுண்டச் சிலுவையுடை யாளத்தால்
நீதிசெய் புஞ்சத்ரு வினைப்போக்கியே
நீணரெங்மை ரட்சைசெய்ய வேணுமே
ஓதும்ஆதிப் பிதாச்சுத னிஸ்பிரித்து
உயர்சர்வ திருநாமத்தைப் போற்றிநல்
பூதலம்புகழ் மாமரி ருசைகரும்
புகழ்திருச் சபைகளென்றென்றும் தோத்ரமே.



திபதை. இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சீர்சிறந்தபிதாச்சுத னிஸ்பிரித்து சேசுவைத்துதித்து ஆதி
செய்தபாவமறவந்த மாமரி அம்மனைப்பணிந்தோம்.

கோர்நிறைந்தசம்மிக்கே லொன்பது நேர்ந்தசபைகளுடன் மோக்ஷ
நிலைபெற்றோங்கிய அர்ச்சயசிஷ்டர்க ளிருபதம் பணிந்தோம்.

முந்திநிர்க்கத்தரிசி தபோதனர் முனிவராகமத்தோர் சகல
மோக்ஷவாசிகளானவர் தம்மை முழுதுந் தோத்தரித்தோம்.

சிந்துதேசத்தினி லுபதேசங்கள் செய்யத்திரண்டுவந்த வெகு
சேனைக்குந் தீட்சைதந்த சவேரியார் திருப்பதம்பணிந்தோம்.

கஞ்சமாமலர்வாவிகள்சோலை கதித்தச் சண்பகமும் செழுங்
காவுலாவுங்கிரி கோரிகமெங் கனம்பெற்றோங்கிடவே.

கோர்நிறைந்த திருச்சபைக்கு முதல் சீதனும் விளங்குஞ் சத்ய
நெறிபெற்றோங்கிமேர்ச்சியபாப்புவைத்தியமும்பணிவோம்.

தங்கும்புகழ்கொண்ட தாரணிமீது தழைத்துமே விளங்கும் வெகு
சங்கையோங்கிய மேற்றிராணிமார்களின் றுளிணைபணிந்தோம்.

சத்யமாமறை நெறியில்நிலைத்துமே சற்குணராய் விளங்கும் வெகு
பத்தியோங்கியிலங்கு மங்ஞானியர் பதமே பணிந்தோம்.

பாக்யஞான மிகுந்ததவத்தில் படிந்துசெழித்திருக்கும் நல்ல
வாக்யான அருளப்பனைத்தினம் வாழ்த்தியேபணிவோம்.

எந்தையாதி பராபரனைத்துதித் தென்றும் பேர்சிறந்த அருள்
தந்துகாதநிடு ஞானபாதாசரின் றுளிணை பணிந்தோம்.

புலசந்தோர் ஆரம்ப விருத்தம்.

தலம்புகழு மன்னர் செங்கோற் செலுத்திவீர
தமிரியமும் பலவிருதுந் தழைத்திட் டோங்கி
அலங்கிர்தமா யிலங்குகின்ற ரோமை நாட்டில்
அறிந்துமுன்னே செழுதியவா சகத்தை யிப்போ
நலந்திகழு நாடகமாய் கவிக்கு தந்தே
நாடுபுகழ் கீர்த்தியொன்று நடந்த யாவுந்
துலங்களிக்கக் கதையிலுள்ள வரலா றெல்லாஞ்
சொல்ல வெண்ணி கதைக்காரர் தோன்றினாரே.

திபதை-இராகம்-தோடி-ஆதிதாளம்.

கண்ணிகள்

ஆதிசெய் வினையதை தீரவே திவ்ய
அன்னை மரிவயற்றில் மனுவதாய்வந்த
நீதிசேர்பரன்றன்னைப் போற்றியே கனத
கீழ்த்திடும் புலசந்தோர் தோன்றினர்.

கனகமாமுடியணி இறையவன் வாசல்
காத்திடு மாமுத லமைச்சனும்
வனமதில்காட்சி பெற்றிடுங்கதை தன்னை
வகுத்திட புலசந்தோர் தோன்றினர்.

சிரமதில் மகுடமுந் தலக்கவே கையில்
திருபான் குருசதை இலங்கவே நல்ல
வரம்பெற்றச் சரிதையை வழுத்தவே சந்தோர
வாகுடன சபைதனிற் றோன்றினர்.

மாதனமந்தருட னிஸ்தாக்கியும் திவ்ய
வல்லவன் மறை தனக்காசிரவிட்டுசெல்ல
சோதிபதமதிற் சேர்த்திடுங் கனத
சொல்லிட புலசந்தோர் தோன்றினர்.

௧-ம். பிரிவு புலசந்தோர் சொல்-விருத்தம்.

அத்தியந்தத்திருச்சிலுவை யடையாளத்தால்
அசடானசத்துருக்க ளெனுமிடாமல்
நித்தியமுங்காத்தாட்கொள செய்விரெங்கள்
நிமலசருநீ வல்லபரா நீ டுழிக்காலம்
சத்தியமெய்ப்பொருளான பிதாவினுக்குந்
தமதரியசுதனை சேசுவுக்கும்
கர்த்தமையை இஸ்பிரித்து சாந்துவுக்கும்
காலசற்பகாலமட்டும் காப்பதாமே.

திபதை இராகம்-ஆகிரி-அடதாளம் கண்ணிகள்.

பரிசுத்த தெரிபுற்ற மரிபெற்ற பாலகன் போற்றிபோற்றி என்றும்
பாலோக நரலோகஞ் சுரலோகம் படைத்தவா போற்றி போற்றி
பக்ஷமுற்ற வரம்பெற்ற குருபானருள் பற்ற போற்றி போற்றி ஆவ
லும்பெற்ற பொருமேதன் னிருசெம்பொற்பதமலர் போற்றிபோற்றி



வருமிடிபொழிந்தெமை மனம்வைத்துக்காத்தவா போற்றிபோற்றி
மோட்ச, வானோர்கள்தாளினை நாளுமெந்நாளுமே போற்றிபோற்றி
செகின்றுன்முடிதைத்து சிலுவையிலிறந்தவா போற்றிபோற்றி இந்த
செகத்தோரை ரட்சிக்க சிலுவை புகுந்தவா போற்றிபோற்றி
அனியாயபூதங்கை அடியுண்டுபொறுத்தவா போற்றிபோற்றி அன்று
அல்லல்முழுதுமவர் தொல்லையுதவித்தாய் போற்றிபோற்றி
தனியுன்டவினை தீர மனிசனுமாய்ப்பிறந்தவா போற்றி போற்றி உத்தன்
காத்தனிற் குருதுடன் வரந்தந்தசோதியே போற்றி போற்றி
மன்னையர்க்கரியாய்மண்ணில்வந்துதித்தாயே போற்றிபோற்றி எங்கள்
வரத்திலிருந்து நல்லவரந்தந்த அண்ணலே போற்றிபோற்றி
சன்னசேர்புதல்வனே செங்காந்தணைத்திட்டாய் போற்றிபோற்றி என்
தாய்மரியம்மணி தன்கமலப்பாதம் போற்றி போற்றி (கண்

௨-ம் பிரிவு. புலசந்தோர் சொல்-விருத்தம்.

சீர்பெருகுஞ்சுருபிலக னிறைந்துவானிற்
திங்கண்முமா திப்பொழியும் ரோமைநாட்டில்
ஏருடனேதிரையா னு மன்னென்சென்றோர்
கிசழ்த்தியாசனம்வேரும் ரோமைநகரில்
பேர்பெறதிக்காவிதனி லுதித்து வாழ்ந்த
பிலாசுவென்போனாசன் முதலமைச்சனுதி
கூறிய ராசாங்கம் தனைக்கைக்கொண்டு
குவலயத்திற்நடத்தினதைக் கூறுவோமே.

திபதை-ஜம்பை-கண்ணிகள்.

கூரியரோமைநகர் குடிதன் வனமிருக்கும் வந்து
தொல்லைகளை யழிக்குமென்று கூவியுரைத்தனரே
உரைத்தமொழிதனைக்கேட்டு உயர்த்தனந்தனிலேறி
ஒப்பரியவேட்டைசெய்து வனங்களிக்குமேரம்
திக்கைமகிழ்ந் திருக்கையிற்பொற் சிலைபோலெதிர்யானவாதுந்
தெரியவர்த்துரத்தியிலே சிலுவையடையாளம்
அக்கமுள்ளமான்தலையில் அதிகடாயிருப்பதனை
அதிக்குமுழுங்காளினின்று வருந்தி அதித்தவரே
நதித்தலைவாய் நிறைந்துசேர்பிரானன்மறையை
சொல்லியபின் னேவனுஞ் சொருபியதைதுருவின

கற்பனையின்படி ஞானஸ்நானமதுபெற்றிடவே
காதலியும்பாலருடன் களிப்புடன்சென்றனரே
சென்றுஞான ஸ்நானமது சிறப்புடனேபெற்ற பின்பு
தேடிவைத்த தனங்களெல்லாஞ் சிதறியழிந்ததுவே
அழிந்தபின்புமறுவூருக் கவர்களுடனே போக
ஆற்றின்கரையதனைக்கண்டு அயர்ந்தவர்நின்றனரே.

௩-ம் பிரிவு வேறு-கண்ணிகள்.

நின்றவர்கள் தியங்குகையில் மரக்கலந்தான்
நேரில்வரக்கண்டவர்க ளருகிற்சென்று
சென்றபின்பு அலைகையதுவங்கத்தோனை
தேடிவந்தசேதிபல தெளிவாய்ச்சொல்லக்
கேட்டுமரக்கலமுடையோன் குணங்களைப்போற்றி
கிருபையுள்ளோன் போலவரைக்கிட்டிச்சென்று
கடிமரக்கலமேற வாங்களென்றான்
நங்கையரு மிஸ்தாக்கி மைந்தரோடும்
வங்கமதிலேறியந்தக் கரையைச்சேர்ந்தார்
வாதுசெய்தேபெண்ணாளை வழிமறித்தான்
பைங்கிளியை மருப்பில்வைத்துத் துயராகி
பாலகரை கரம்பிடித்து மறுவூர் சென்றார்
போகும் வழிதனி லாறு தடுத்ததாலே
பிள்ளையிருவரையிழந்து புலம்பியேதான்
எலியெஸ்தூர் மாநகரைச்சேர்ந்தபின்னால்
ஏவல்தொழிற்குடியானே னிடத்திற்செய்தான்.

௪-ம் பிரிவு-ஐம்பை-திபதை-கண்ணிகள்.

ஆதிதிருபொருளை நிதமனுசரித்துதொழுதுவரும்
அமைச்சனுமிஸ்தாக்கி அரியமனையாளை
நீதியில்லா மாக்கையனும் நிந்தையவமானஞ்செய்ய
நினைந்துமனங்கொதித்தெழுந்து நேர்மையுடனவனும்
எனைமருகவேணுமென்று இடும்புகள்தான்மிகப்பேசி
எதிர்த்துக்கைப்பிடிக்க அவளேகன்றனைநினைந்து
புனலதுபோல்துயர்பெருகப் பொங்கியலறியழுதலறி
பொற்குருசோன்றனை வேண்டி புலம்பியேநின்றனளே
புலம்புசத்தந்தனைகேட்டு பொங்கிசருவேசனவன்
புலையனதுகண்கெடவே புதுமையுஞ்செய்தனரே



தலம்புகழுமாதரசி தவமதுதான்பெரிதெனவே
சாற்றியவன்பதம்பணிந்தாள் [illegible]
பதம்பணியமாதவள்தான் பாசபந்தைத் தறித்தெழுந்து
பாதகனின்கண்கெடுத்துப் பரிவுடன்சென்றனளே
திக்கற்றிருக்குந்தேவ [illegible]
நீபெரிவிடைகள்செய்து நினைத்தங்கிருந்தனளே.

௫-ம். பிரிவு.

மருட்டமுடி புனைந்த திரேயானுமன்னன்
மாற்றலர்கள் திரைகள் வாரததனைக்கண்டு
விசாரமுள்ளோர்தனைச்செயிக்க முதல்மந்திரி
வேண்டுமென்று அழைத்தவர் வினைவாய்ச்சொல்ல
அத்தனைபேர [illegible]
அழைத்துவந்தார் பிஸ்தாக்கி மந்திரிதன்னை
மிக்கமுடி மன்னனுந்தா னெதிரிற்சென்று
வேண்டியனல் வரிசைபுட னழைத்தவர்க்கு
மறுமன்னர்தன்னிடம்போய் கப்பம்வாங்கி
வலுமையுடனே வாவே வரிசையிந்து
வரிசைதான் பெற்று மறுமன்னரோடே
வாருடனே சென்று மகாவலுமையாக
போர்களது புரிந்திடவே அழைத்தாரப்போ
பூவலரு மறுமன்னன் எதிர்த்துவந்தே
போர்பெறவேசண்டைசெய்து பின்னிட்டோட
நிலாசதன்பாதமலர்ப் பிடித்தானன்றே.

௬-ம், பிரிவு, பாயிரப்-ஐம்பை-கண்ணிகள்-தியானது.

திறைகளதுகொடுக்கமந்திரி தீவிரமாய்வாங்கிச்சென்று
திரும்பிவரும்போதங்கி தேவனருட்கூர்ந்து
மறைந்திருந்ததேனையும் மக்களிருபேர்களுடன்
மனமுவக்கக்கண்டுமந்த மாதிருமையாளன்
கண்டுகளிகூர்ந்திவர்கள் கடிதிரோமைதனக்குச்செல்லும்
காலமதிலேதிரையான் காவலனுந்தானும்
மண்டலத்திலவர் மடிந்தவரலாறதானுரைக்க
மனத்துயராமிமந்திரி வருந்துமந்நாளில்
பிரபலமாய்ஆதிரியான் போர்பெறவேமுடியாக
பெற்றபின்பு திரைவாங்கி மீள்கவருவதனை
அறிந்துஅவரெதிர்ச்சென்று அழைத்துமிகுவரிசைதந்து
அன்புடனே இருவருமாய் அரண்மனைவந்தனரே.
வந்தபின்பு அலையதுமன்னனிடந் தூற்றுசொல்ல
வாருடனேபதவியை வணங்கச்சொன்னாரசன்

அந்தமொழிதனைக்கேட்டு அமைச்ச னிஸ்தாக்கியரும்
அலகைதனை வணங்கோமென்று ரிவையுமைந்தர்களும்.

எ-ம் பிரிவு, பாயிரங்-கூறல்-இபதை-கண்ணிகள்.

செய்யோமென்றவுட னரசன்வெகுண்டெழுந்து
செப்பெருதின் வயற்றினுக்குள் நால்வர்தம்மை.

ஐயமற சுட்டெரித்து வதைக்கவேண்டி
அனலெழுப்பி வுயிர்வாங்க அறைந்தானங்கே.

சொன்னவுடன் தரியலர்கள் சூழ்ந்தன்றோரை
சுருக்குடனே அனலெழுப்பிச் சுட்டெரித்தார்.

பின்னமில்லா மடிந்தவர்க ளாத்துமத்தை
பேர்பெரிய வானவர்கள் வந்தழைத்து.

உன்னதமங்கள சோபனங்கள் பாடி
உம்பர்கள்வாழ் மோக்ஷதலமுடனே சேர்த்தார்.

மன்னவர்கள் புகழுமணி மகுடஞ்சூட்டி
மகிமையுடன் இருத்திவிட்டார் மகிழ்ந்துதானே.

இங்கிதனை முன்னோர்கள் ஐயந்தீர்த்து
எழுதினோர் படிப்போர்க்குங் கேட்போருக்குங்.

துங்கான்மை யுண்டாகித நிமைநீக்கிச்
சுகித்தலகி லெங்காளும் வாழிமாதோ.

## வெட்டியான் ஆரம்ப விருத்தம்.

கவரிய முகத்திநில்வெண் ணீறு பூசி
கள்ளுடன் சாராயமுண்டுக் களைத்தே வீரி
உவரியது உறறுபோல் வாய் நீராட
உருப்பிய வாய்குளறியவ னேப்ப மிட்டு
தவறிவிழுந் தேகடைதள் ளாடி னின்று
தாரணிமா னகாரூந் திரையான் வேந்தன்
பவனிவரு வதைபினிதாய்க்கூற வேண்டி
பறையடிக்குஞ் சாம்புவனும் வருகின்றனே.

இபதை, இ-ம்-ஆபி-ஏகதாளம்,
கண்ணிகள்.

அலங்காரபெட்டிட்டு அங்காடிதெருவெங்கும்போய்
தலங்காவல்செய்யும் வீர சாம்புவன் வந்தானே.



தென்னங்கள்ளுஞ் கள்ளுந்தேக்கிய வயிற்றுடன்புகைசூடியும்
மெத்தவு மொய்யாரத்தோடு வீரசாம்புவன் தோன்றினனே.
எட்டினட்டி கட்டு ஏப்பமிட்டு கூப்பிட்டு
வட்டதனில் தாக்கிக்கொண்டு வசூருவன்வந்தானே.
வட்டத்திரு நீறும் மார்பினிற் சந்தனமுஞ்
சட்டமாயணிந்து வீர சாம்புவன்வந்தானே.

## வெட்டியான் சொல்-வேறு-இபதை-உசேனி.

நேர்மேவுசோழமகாநகர் தனிச்செங்கோல்செலுத்துந்திறையான்மன்னன்
வாழூர்பவனிபிதோ சொல்லவந்திடும் வல்லுவனுன்காணும்
சான்பேர்வளமைதனை யாவென்த் துரைப்பேன்கேள் ஜகத்தோரே
முன்பாயுலகமதில் வந்து முக்தி பிறந்தவன் நான்காணும்
வள்ளலெனுமினிய சுப்ரமணிய னென்னிடமைத்துனன்காண்
வெள்ளானையீதேறிவேதருப்புரி யாலணித்திட்டவனுன்
வாதசக்கரளியுடன் இருவம்பலவாணர் நடம்புரிய
ஆதாகவெற்றிகொள்ள உரைசொல்லிய சாம்புவனுன்காணும்
இலங்காபுரிதனிலே ராமனிந்த்ராஜித்துடன் போர்கள்செய்து
கலங்கிவிழுசோம கல்லைகண்டசஞ்சீவி சொன்னவனுன்
விஜயனைசர்ச்சனையான் அந்தவீர தாரதரன்தேவியர்தான்
வசையாவழிதவறி அவள்வந்திடும்போ தாதரித்தவன்காண்
ஆலந்தனையுமுண்ட சிவனவ் புளசம்மந்தி நான்காணும்
தாலந்தனிலெனது புகழ்சாற்றிட வென்றுல்முடியாதே
ஊருபிடாரியர்க்கு யானும் உற்றதுணை வனென்றிருக்க
சீருடன்கங்கைக்கட்டி வெகுசிறப்புடன்வாழ்ந்தவனானும்
மானகரையோத்தி ஆண்ட மன்னன் அரிச்சந்திரன்றனையே
தானே அடிமையதாய்செம்பொனூட்டமுடன் தந்துகொண்டவன்கா[ண]
சங்கர்தனையழித்தே ஆறுனாண்டிரமெல்லாம் வருத்தவனுன்
சிங்கக்கொடிபடைத்து அன்று தேவர்களுக்கு விருந்தளித்தேன்.

## உ-ம-வெட்டியான் ஆரம்பவிருத்தம்

இப்படிவெட்டியான்றன் இயம்பிவெளமைகேட்டு
செப்பொண்ணுகோபங்கொண்டு திடுதிடென்றோடிவந்தே
ஒப்பனையெங்கள்சாட்டி துரைப்பவரீரென்று
கொப்பெனவெதிரேநின்று கூறுவான் சேவனே.

முதல் வெட்டியானுக்கு உ-ம்-வெட்டியான் சொல்

விருத்தம்.

எனக்குமேனதிகமென்றே இயம்புராய்வளமைதன்னை
உனக்கிசகிசெர்வடவேண்டாம் உதைக்கட்டா பயலேயெத்தன்
தனக்குச்சரிசயோப்பாமோ தாணியிலெனைப்போலுண்டோ
கனகமாதிதியெற்றேங்குல் காவலன் குலம்தான்கண்டாய்.

முதல்வெட்டியான் சொல்-விருத்தம்.

குலக்கனி யாபர்க்கோவென்று கூறுவதேதடாசீ
பிலத்தவ வசிஷ்டனுக்கு பெண்கொடுத்தவனாரும்
புலத்தனை அறிந்திடாமல் புலப்புருப் புழுக்கை பையா
கலத்திக மெனுதிக்கு கவிலவே செறிநியுங்கேடா.

உ-ம்-வெட்டியான் சொல்-விருத்தம்.

கவிலவேறுண்டோவென்று நாற்றிசைபோர்கள்மெச்ச
செவிதனக்கேறுவார்த்தை செப்பவுந்தகுமோ போடா
கவிக்குதுயிரம்பொன்னீக்கு கம்பர்தக்காபிழைக்கொண்டேன்
புவிக்குவென்சமர்த்தென்ன் பூகலவோவன்னுவோடா.

முதல்வெட்டியான் சொல்-விருத்தம்.

புனருர்ப்பும்சென்றடானும் புலீபோகுக்கண்டாய்
அகமாய்சொல்லுறைக்க ஞானமயான நிவேன்போடா
ஜெகத்தனிலென்னைப்போலச் செங்கமிர்குலவீயானுல்
சகலருமியவுந்தன் சரித்திரஞ்சாற்றுவாயே.

உ-ம்-வெட்டியான் சொல்-தெபதை-இ-ம்-செளகிக மிசாகாளம்

மலையானசேர்ந்தியுஞ் செஞ்சாமூனையுமதுரைபுரியையாண்டபாண்டிய [illegible] நாயும், அடடா பாண்டியனையும் கலமாகவாவழைத்து நான்விருத்திட் டு, நாற்றிசையும் போகொண்டவ ஞானியாரும் அடடா நாவேயாரும் [illegible] வஞ்சிகையாரும் எமதியமுர்ச்சையாகி, விழுந்தோம் அடடா விழுந்தோம்பாழு [illegible] தான்சொன்ன தென்கள்பாட்ட [illegible] பாட்டக்காரடா அடடா பாட்டக்காரடா ஆரூர் திபா ரூடனே வெள்ளைகிர ஆனையின மேலேறி அலங்காரமாகவே அடடா [illegible] மூச்சாநந்து கூறிய மெய்க்கு [illegible] வந்ததெக்தன் மைத்து னடா அடடா திருநிமிர்தி வேனவே தேவர்கள் திருப்பாற் கடல [illegible] அடடா வெற்றியுடன் மறையமறந்த வீரனாரு [illegible] முத்தலனடா அ[illegible] வெற்றிரன் [illegible]



வீர கர்த்தனென்றுதிருக்கலியாணமது செய்யும்போது அடடா பூவேந்தி ரர்மெழ பறையடித்தது பூமியில் மிருத்தபெயர் பெற்றவனடா அடடா வசிஷ்ட மகாமுனிதான் அருந்ததியை வையத்திலவர்மணஞ்செய்யு ம்போது அடடா பதஷ்டமா பறையறைந்தோன் என்னுடையபத்தப் பனிலவனொரு சித்தப்பனடா அடடா சகல்லாமெனக்கு வைத் தோராகா எத்திசையும் விளங்கவே வெற்றியுடனே அடடா நாடல் லாமொரு குடைக்கீழ் கர்த்தனென்று காட்டையாகாண்டதெங்கள்பா ட்டன்தானடா அடடா விசையாகர் வீர நாங்கான் வேந்தனுர்மனைவி யர்க்கு விடுகொடுத்து திசையெங்க மறிந்திடவே ஆதரித்து சித்தம் வைத்து ரக்ஷித்ததென்அத்தைமகனடா அடடா மத்தகமேலாவிருந்து கவண்கல் வாங்கிய எதிக்து அரமாணியர்தான அடடா சத்தியரிச் சந்திரனுக்கு தர்த்தடிமை சம்பிரமாய் கொண்ட தெந்தன் தம்பிதானடா அடடா சுத்திசுரானதிலே வலங்கையர் சுருதும் விருதும்மகைக ண்டியயேவ அடடா உச்சித செப்பேட்டிலெழுதி வைத்த தெந்தன் உத்தமனு மென்னைபெற்ற வித்தகனடா அடடா இப்படியாக யென்கு லத்தான் பெருகிய எழில் பெறு வளமையை அறியாமல் ஓப்பனையா பெருத்துரைத்தாய் மட்டிராயே வதைக்கட்டா அடபோடா உனதுரை நாரலே. அடடா.

முதல் வெட்டியான் சொல்-விருத்தம்.

அம்மே நீ சொன்னதெல்லா மறிந்தேன் கேட்டேன்
எண்ணிலா கமனுகோத்த மெத்தனைச் செய்துமுண்டு
மண்ணுலகத்திலேயென் வம்சமுடையோயாம்
இன்னமுன்வழியிலேயோ விருத்ததெல்லாஞ் சொல்வாயே.

உ-ம்-வெட்டியான்-சொல்-பாணி-சிந்து.

சொல்லுகிறேன் கேளுதம்பி செம்மண்டலத்திலொரு
வல்லுவிதுஞ்சனி வந்த மதவல்லியுடன் கூடி
அல்லும் பகலுமெந்தன் அணிமணிகளனைத்தெல்லாம்

சிந்து.

கல்வமுருநகரான் காப்பு கவிக்கேயும்
கன்னிபர்க்கு தகொடுத்து சலத்திருந்தேன்டா தம்பி
வல்லுவிபர்ப்புகுவான் மெய்மி விலவுக்கென்றே
வேணுமென்ன அவைனியில் விரட்டிவிட்டானே தம்பி

பாணி

விட்டாள் களிவலசிவேசியின் மேலாசைவிட்டு
மெட்டாளதேசமெல்லா மசாணுடனே ரிடம்
மெட்டா யிருப்பேமென்று மெங்களுர்விட்டுசென்னே

சிந்து

பட்டணத்தன்னில்வந்து எட்டுநாளின்பின்னொரு
பலனதிரிகையிலொருவன் பட்டுநொண்டேனே தம்பி
ஒட்டாரக்காரிக்கு நானிட்டபணிதிவெல்லாம்
உரைக்கக்கூடாதடா தம்பி நானென்னசொல்வேன்

பாணி

என்னசொல்லப்போறேன் தம்பி ஏமாத்தியுள்ளசெல்வ
மின்னமின்னக் காணுமென் றவிட்டவள்கைவசப்படுத்தி
இன்னவிளக்காரி யொரு ஙிப்பாய்ப்பயலுடன்

சிந்து

தென்னைசார்க்கேவிட்டாள் யாதுமேமலையாள
தேசத்தில்சென்றிருந்தே னொத்தியாயங்கையொரு
அன்னரதிபோலொரு கன்னியவள் வளவில்
அழைத்தெனைக்கொண்டுபோனாள் காணடக்துசென்றேன்

பாணி

சென்றேன் அசனமிட்டாள் சொயிருந்து வுண்டேன்
அன்றே அவள்புருஷன் ஆறுதக் கோபமுடன்
இன்றே பார்த்தோடிவந்து நீயாருசொல்லு மென்றான்

சிந்து

அன்றவனைத் தூவி அப்பா வுன்மனைவி என்னை
அழைத்துவைத்தாளடா வென்றே னனைத்த மின்றாள்
கன்றல்லவிவனை நீ கைதொடலாமோவென்று
வைத்தென்னை வெளியில் விட்டாள் நான் ஓடிவந்தேன்

உ-ம்.வெட்டியான்-விருத்தம்.

ஓடிவேனிப்பினிமேலொரு காளிருந்தாக்கால்
தேடிவருவாளென்று சீக்கிரத்தில்நம்மூர்க்கு
ஈடிமலையாளம் விட்டு நான்வந்தேன் ஒன்பதுகோள்
கோடிசெய்யாதே தம்பி மூத்தவனும் நானலவோ.



முதல் வெட்டியான் சொல்-விருத்தம்.

மூத்தவ னென்றானென்று முறைமைகள்சொன்னதாலே
ஏற்றவழியேயாகும் மென்னுடையண்ணையுக்கன்
கோத்திரந்தனிலோர் பெண்ணுள் குமரியாயிருக்கிறாளாம்
பார்த்துநான்மணஞ்செய்விப்பேன் பயப்படவேண்டாமண்ணு,

உ-ம்-வெட்டியான்சொல்-விருத்தம்.

ஏதுக்குக்கவலையில்லை யினியெந்தன்தம்பிகேளாய்
வாதுக்கஞ்சாதரோமை மன்னவன்பவனிவாறூர்
வீதிக்குவீதிசென்று விளக்கமாய்ப்பறையடித்து
போதிக்கவேண்டும்தம்பி புகழ்பெறவருகுவாயே.

வெட்டியான் பறை கூறல்-விருத்தம்.

பாருள்ளோர்கேளீரோமை பார்த்திபனாயான்றின்வேந்தன்
வீரியமாகவாறார் வீதிகளலங்கரித்து
தோரணவாழைகன்றும் தூங்கிடவிருத்தியன்பாய்
வாரமன்னவன்முன்பாக மலர்மழைச்சொரிகுவீரே.



கட்டிய ஆரம்ப விருத்தம்

தேவராயகனுர்தய்யத் திருப்பாதங்கனைமெச்சாளும்
மேவியர்க்கித்து போற்றி விளங்கியரோமைநாட்டில்
ஏவல்கூர்த்திடுமேலான விறையவன்றினியான்வாசல்
காவல்காத்திருக்குந்தீர கட்டியக்காரன்வந்தான்.

திபதை-கன்னிகள்-இம்-சாவேரி-தாளம்-மிசாம்.

சென்னியற்குல்லாவுஞ் சித்ரவர்ணபணியும்
பொன்னின்மணிமாலை வெகு பொங்கமாகவணிந்து
கன்னற்றனுமாரன் எங்கட் குலதீரன்
காவலன் வாசற் கட்டியக்காரரும் வந்தாரே

பாதசிலம்பொலிகள் திசைதிசை புலம்ப
பன்னூறு கமிழ் மலருன்னிதமாய் வீச
காதினிற் குண்டலமுங் கைவளையோதிரமுங்
கட்டுமெட்டுடனே கட்டியக்காரரும் வந்தாரே

கொம்புதம்பூர் வீணை குச்சடிபேரிகையும்
பம்பைநாகசின்ன மொரு பக்கமுமின்றிறைய
கம்பமதக்கரி சூழ் காவலனூர்வார
காரியஞ்சொல் வீர கட்டியக்காரரும்வந்தாரே

இத்தலத்தோர்புகழும் சுத்தரோமாபுரியில்
வெற்றியாயரசாளும் வேந்தன்றிருவாசல்
சித்தமுங் காத்திருந்து மெத்தவூழியங்கள்செய்
கற்றறிவுற்ற கட்டியக்காரரு காமாகும்

தங்கமணிமார்பன் எங்கள் குலதீபன்
மங்களயோகத்திரையான மன்னவனிப்போதே
சங்கமேவுஞ்சபையில் பொங்கமதாய்வாரார்
இங்குமோர்விதி யலங்காரமேசெய்வீரே

சந்த்ரோதயம் விளங்குஞ் சுந்த்ரரோமை நகரை
சிந்தையாயரசாளும் வேந்தன் திரையானும்
சந்தோஷக்கொலுவில் வந்தருட்புரிந்திட
இந்தமாநகாலங்காரமே செய்வீரே



13



## இராஜன் ஆரம்பவிருத்தம்.

குண்டலங்க ளசைந்தாட க்ரீடமின்ன
    கோர்வைமணி மார்புரளக் குடைகவிழ்க்க
மண்டலாதிபர் நெருங்க வமைச்சர்சூழ
    மாதர்வெண் சாமரைவீச மறையோர்வாழ்த்த
கண்டகர்கள் மனங்கலங்கப் பகைவரேங்க
    கட்டியஞ்சொல் லோசைதிசை எட்டுங்கேட்க
எண்டிசையும் புகழ்பாவுந் திரையானென்னும்
    எமதுபிரான் சபைநாடி யிதோவந்தானே.

தரு-இராகம்-ஜம்பை-தாளம்-ரூபகம்.

சிறிலங்கும் ரத்னமுடி சென்னிதனிலே துலங்க
செம்பொன்மணி பூஷணங்கள் செங்கதிர் போலிலங்க
வாரிலகு மிருசெவியில் மாமணிகள் தானிலங்க
வளர்சபையிற் திரையானெனு மன்னனிதோ வந்தார்.

கட்டியன்-விருத்தம்.

கடலொலிகள் குமுறியிடி யடவுடனே படபடென
    கரிபரிகள் சூழ்ந்துவரவே
கண்டவர் பயந்துதிறை கொண்டுவந் தடிபணிய
    காவலர்கள் புடைசூழவே

அடல்முரசு டுடுடுடென பேரிகை டமாரங்கள்
அதிர்ந்துமே திமுதிமென்வே
அணவரத சோபன கீர்த்திப் பாசகுரை
அதிவுக்கிரம தாகவே
எட்டணமும் தெரிவையர்க ளடவுடனே ஜெயவென
நாதகீதம் முழங்க
நாகரீத ப்ரபல ராஜர்மகிழ் தியாகனே
நவரத்ன மணிமகுடனே
திடமுடைய பராக்ரம விஜய உத்தண்டனே
தீரனே உபகாரனே
திவ்யமெனும் மன்னனே ரோமைவளர் கன்னனே
தென்னனே வெகுபாக்கு.

நாட்டியப்பெண்கள், தரு-இராகம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

மகாராஜ ராஜசேகரா - உலகந்தில் மாதர் மகிழ் குணகரா
மறையவர் புகழ்திரா திவ்யமெனும் மெய்யரா
திறைராஜர் தருங் கோலா தனாராஜர் திறை சீலா
ஜெய நய வயமிகு மய விஜய இந்திர
தய வுறு மியல் குண புய பல சுந்திர, மகாராஜ

இராஜன் தரு.

கொம்புடனே மேள வொலி குழலினைகள் குமுகுமென
கூறிய நாக சின்னம் நாதவிசை நீட
பம்பை தம்பூர் பேரிகைடம் மாரமதிர்க் கிடு கிடென்ன
பார்த்திபனற் றிவ்யாஜுனும் பண்புடன் வந்தனரே.

கட்டியன் கூறல்-விருத்தம்.

சீர்கொண்ட கயிலாச வாசனிரு பொன்னடியை
சிந்தைதனி லயராமலே
சேவித்துத் திருவிழா பூசை யபிஷேகமுஞ்
செப்பமுடனே புரிகுவோன்.
போர்கொண்ட தரியலர்கள் அலறியே கைகூப்பி
போற்றியென் றடிபணியவே
புகலரிய சற்றிசை யெலாங்கீர்த்தி பரவுவோன்
புஜபலபராக்ரம உதாரன்
பேர்கொண்ட கெடிவீர ஜெகம்ப வீரனே
பெருமைசேர் கொடைகர்ணனே
பிழையிலா மாரீச கீர்த்தவெழி லாளனே
பேசரிய புகழ்திரனே
மார்கொண்ட மாலையணி மார்பனே யெதிரான
வைரியர்கள் குலகாலனே,



மகாராஜ ராஜனே ரோமைநகர் போஜனே
மன்னவா வெகுபராக்கு.

நாட்டிய பெண்கள்-தரு.

சங்கைசேர் இந்திர தீரனே தாணிதனில்
சகல சம்ப்ரம உதாரனே அழகிலுயர்
மங்கையர்க்குகந்தமாரனே அதிகமதி
மங்களவதி கெம்பீரனே நாலுதிசையும்
அங்கவங்க கலிங்கர் எங்குகிறை தெலுங்கர்
அங்கமணிமகுட அங்கஜன் றனேகர்
வடதிசைகளவு மடவுடனே வுமது
கொடிகள் கிடுகிடென திடமுடைய வெமது மகாராஜ

இராஜன்-தரு.

காவலர்களடி தொழுத கவிவாணரிசைபாட
கருதரியமடமாத ரிருகவரிவீச
ஏவலர்கள்புடைசூழ எந்தல்திவ்யானராசன்
இனியகரிபரி செருக்கபிறையவன் வந்தனனே

கட்டியன்-கூறல்-விருத்தம்.

வெற்றிபெறுமரசர் மாற்றலர்களடிதொழுத விஜயதுந்துமிகுமுறவே, மெல்லியர்கள் சுபசோபனங்களதுபாடவே வெண்சாமரைகள் வீசவே, சுற்றிலுந்திறைகொண்டு மருவலர்கள் சூழவே சொற்புலவரிசைபாடவே, சொல்லரிய புயவலிமை வல்லவர்களதிங்கவே சுவாமி நின் சரணமெனவே, பற்றிலா கொடியர்களை அரசனது கொலுசமுகபடியில் வாதைகள்புரியவே, பாவலர்களைப்பழித்திடு தீசமுடர்களைபற்களை தகர்த்துவிடவே, மற்றினிய திருமாலின் மலரடியை மறவாத மகாராஜ ராஜேஸ்வரா, மானில மெலாம்பரவு ரோமை நகரண்ணலே மன்னவா வெகுபராக்கு.

நாட்டிய பெண்கள்-தரு.

சந்திரமுகவஜீரனே பளபளென்னுக
தங்கமேருவ உதாரனே திரண்டமேரு
மந்தரபுயசுந்திரனே கொங்குவங்காளர்
வணங்குந்திரு பொற்றீரனே மதிவிஸ்தார
வந்துவந்தரசர்கள் எந்தைசரணமவே
இந்திரனெனவளர் அந்தமிகுமுல்லாசு
மதிப திகிதமிகு மதிமனுநதிசெய
நதிபாவிபவவ ரதிபனேயதிசய-மகாராஜ

ராஜன் - தரு

இங்களணிச்சடையோனே திணமுமறவா திரன்
தேசமதிலசகெதி செலுத்துமதிவீரன்
மங்களசங்கீதமிகு ரோமைநகரான் திரையான்
மன்னனெனும் எமதுபிரான் வந்துதோன் றினரே

கட்டியன் கூறல் - விருத்தம்.

தாணிகிடுகிடுகிடெனவேமணிமகுட மண்டலீகர் தார்வேந்தரடிதாழவே, சண்டைவெங்கேவென்று தடவிகட கொடிபடைகள் தத்தளித்திடத்துள்ளவே, திரணியுறுபடைசூர சேவகர் அடிக்கவே தெரிவையர்கள் நடனமிடவே, தேசதேசத்து மறுமன்னவர்கள் திறைகொண்டுதெண்டமிட்டடி தாழவே, கருணைபொரு மறையவர்களாசி மிகக்கூறவே கவிவாணர் தாம்பாடவே, கடலிடுஒலி மடமடென பேரிகைடமாரங்கள் ககனமண்டலமதிரவே, அருணவொளிமவுலிபுனை திரையான்மகாராசன் அரசெய்வதொருவருகிறார், ஆதலாயிரோமை நகரானகுடிமாணிடர்களானவர்க ளெச்சரிக்கை.

நாட்டிய பெண்கள் - தரு.

சிங்கார மிருயோகனே ஜகமுழுதுந்
ஜெயவிஜயப்ரதாபனே மருவலர்கள்
எங்குபுகழ்திபாகனே தெரிவையருந்
இன்பமருளுமோகனே திருமதனே

இங்கிதமாய்தினமுங் கங்கையணி சிவனின்
அங்கதிருவடியை சங்கையுடன் பணியும்

தலைவல்மிலகிய கொலுவினிலழகொடு
பலசிலமருவலாருலினி வினியொடு மகாராஜ

இராஜன் சொல் போற்றிக் கவி.

ஆதிசங்கரனே ஆலமுண்டவனே
அரிவையை சிரமணிந்தவனே
பாதிவெண்பிறையை சடைதரித்தவனே
பாவையர்தூது சென்றவனே
சோதிமுப்புரத்தை யெரித்தமுக்கணனே
கடலைவெண்ணி ரணிந்தவனே
நீதில்லாதென்னை யாண்டிடுஞ்சிவனே
திருவடிகளைப்பணிந்தேனே.

உ-ம்-மந்திரி பிலாதன் சொல் போற்றி கவி

வாரிதிற்றுயின்றுயர் மாலை பயின்றுய் மாதலட்சுமி தனைமணந்தாய், சிரிய எதிர்த்தவசானை வதைத்தாய் இராவணை ஜயித்துடித்தாய், சாரதியாகிபாண்டவர்க்குழைத்தாய்சமரினிற்கோதண்டமெடுத்தாய், ஆரியனுகிய புலகினை யளந்த ஆதிநாராயணுபோற்றி.



உ-ம் மந்திரி சேதுபத்திரன் சொல் போற்றிக் கவி

மலைமகள்பாகா மவுனசய்யோகா வரிபுலி யுடையணிதேகா
விலைமகள்நாதா விண்ணவர்நாதா விஜயனை தீர்த்திடும்வாதா
சிலையடியுண்டாய்செய்பழிகொண்டாய் சித்தஜனுடனையெரித்திட்டாய்
கலைமதியணிந்த சங்காரா உனது கழலினைபோற்றிசெய்தேனே.

ந-ம் மந்திரி பருதிபத்திரன் சொல் போற்றிக் கவி

மாணில மெலாமளந்தமாலே போற்றி வாரிதனிலே துயின்றவனுபோற்றி, கானகமெலாந் திரிந்து கலையைவாட்டிக்கனைத்துவந்த செங்கமல கண்ணுபோற்றி, வானரங்களைத்துணையா யடுத்தேலங்கை மன்னவனை சேனையுடன் மடித்துச்சிறை, யானமனைவியையழைத்துநகரில்வந்த ஹரிஹரி கோவிந்தா வுன்னடியே போற்றி.

சேனுபதி நாகபத்திரன் சொல் போற்றிக் கவி

கறைமிடற்றவனே தேவிகங்கை நாயகனே போற்றி
மறைமுதலவனே யாதிம யேஸ்வரிபாகா போற்றி
அரவினை யணிந்தே கொல்லும் ஆலமுண்டவனே போற்றி
திருவுற வென்னை யாளுஞ் சிவசிவா போற்றி போற்றி.

இராசன் சிம்மாசனத்திலிருந்து சொல் கட்டளைக்கலிப்பா.

அன்னை யம்பிகை நாயகனே யெந்தன்
றன்னையாண்டிட வேணுடியேவுன் திரு
பூேன்னடிகளைப் போற்றிபதாதினம்
வன்னமான சிம்மாசனமேவினேன்.

உ-ம் மந்திரி சொல் கட்டளைக் கலிப்பா.

வேற்றரசர் பகைவரில்லாமதி
தோற்றமே திகழ் ரோமைபதியினில்
மாற்றலர்க ளடங்கித்திறைதர
சீற்றமின்றி யெங்காளுஞ் செழிக்கவே.

ந-ம் மந்திரி சொல விருத்தம்

கஞ்சமலர் நிறைந்து வளர்வாவி சூழும்
எஞ்சலில்லா ரோமைபதியிறையோனுங்
கொஞ்சமெனுங் கோதுனையா துனது செங்கோல்
தஞ்சமென சிவனருளால் தழைக்குந்தானே.

சு-ம் மந்திரி சொல் விருத்தம்

தேங்குபுன்னை தேனொழுகு மாமலர்கள் சூழ
ஓங்குதிருசோமைசை ராஜகுவேந்தே
சாமகயிது முனதரச செழித்து காரூக்
திக்கறிவே சிவணருளால் சிறக்குந்தானே.

சேனுபதிசொல் விருத்தம்.

கன்னவிசைத் தொடக்குத்தென்திசைகள் தோறும்
வுன்னதமாய் பெருகி வரும் மெனுசாட்டில்
கன்னிலேயாய் செழித்தாசு செய்யுங்கோவே
உன்னரும் செங்கோற் சிறந்து ஓங்குந்தானே.

இராசன் மந்திரிக்கு சொல் விருத்தம்

வாழுறவே யெனது வருகினி லெல்லாரும்
வசித்திருக்கு மந்திரிகளே வழுத்தக்கேளீர்
காழினிற் குடிகளெல்லாம் ளறியவேண்டும்
மேனு சமூகத் தனிலே நன்மாயின்று
ஊழியங்கள் செய்துவரும் வீராளேர்
உங்களுக்கு பகைவருண்டோ வுலகிலேதான்
ஏழிலொரு கடமைகளுங்குடிகளுக்கோர்
இடர்களுண்டோ வகைதியனக்குயியம்புவீரே

உ-ம் மந்திரி இராசனுக்கு சொல் விருத்தம்

இயல்மிகுத்த மன்னவனே குறையொன்றில்லை
யெப்பொழுது மேற்ற வன்மை முனது நாட்டில்
நயமிகுத்த செந்நெல் பல்விளை வுண்டாகி
நலமாகச் செழிக்குதெக்காருமிங்கே
வயமி த்த பகைவர்களுங்குலைக்கஞ்சாத
வன்கணர்கள் கொடிய அடிமிடியோரில்லை
ஜெயமிகுக்க யெம்பிரதோ ராசேயுந்தன்
செங்கோலின் வளமையதை செப்புவேனே.

இராசன் உ-ம் மந்திரியிடத்தில் தேசவிசாரணை தரு

வண்ணம் தோடி ஆதிதாளம்.

மதிசேர் மன்னர்கள் மகிழ்வுருமந்திரி யெனதிடமனமதுமகிழவே
பதியானதின் சிறப்பு மதினி டசெழிப்புமதுது துலக்கமாகவே
பகரிய மணியின சுடர்கள் மிகபெருகி
தகதகவெனவொளியாகுமோ சொல்வாய்.



உ-ம் மந்திரி சொல் வண்ணம்

மணிசேர்த்தொளி வீசிடுபொற் குமிழமைத்த கோபுரசிகரமதனி லொரு, பணிபோலதில் விளங்கிதோன்றிடும்பதித்த முதநினிழைத்த ரத்தினம், பளபளென்றொளிய்து பதங்கள் சுடரென
பகலுமிரவுமிலாதிகழுதுன்றுடு.

இராசன் வண்ணம்.

திறமேமிகுமன்னர்கள்பகையதுதிருக்தமின்றியேவருத்தமானதோ
வரமேவிய மேதினியானவர் வாழ்வதும் புகழ்கூர்வதுமதி
மனமுடனே திகழ்வாழை பலவாசு
புலனுடனேவிளையும் புகழ்ச்சிகளுண்டோ

உ-ம் மந்திரி வண்ணம்.

அகமேமகிழ்ராசேவுன் பெருமையைஅறிந்துவெகுநெறியாய்புகழ்ந்திட
ஜெகமீதினிலே யொருகுறையில்லை திரனேஅதிகாரனேயிது
சகுணதிதுனதிட வகைதுகை யினதென
தெளிவுறபுகலுவே னரசனேகேளீர்

இராசன் சொல் வண்ணம்

முகில்சேர் தொருமாதமும்மாரிமுழங்கிபொழிவது விளங்கியிரது
வகையோடது வளர்ந்துவருவதில் குறைந்ததோபதிநிறைந்ததோயிது
குவலயமதிலென தரியகுடிபடைகள்
கவலையறவேயுறுங்காரண முண்டோ

உ-ம் மந்திரிசொல் வண்ணம்

மேகமதுபொழிந்து செந்நெலு மிகுந்தவயலது செழிக்குதரசனே
பாகந்தருமருவலர் நிறையது பகுத்துண்பதமது மகிழ்ந்துதொழுகிற
படையொடு கரிபரி ரதமதினுடனிறை
அடைவுடனிருக்குதென் னரசனே அறிவீர்

இராசன்சொல் வண்ணம்,

வெற்றிமிகசெய்திடும் வாட்களுநீராகள் கைபிடிவேலதுமிட்டியுஞ்
சுற்றிவளைக்தோரை முறித்திடும் சுழலுஞ் சக்கரஞ் சூலங்கதையுடன்
துடிவெடி கருமருந்துடனே அடல்புரியுங்
கொடியுளவயவர்களிடரிலா துண்டோ

உ-ம் மந்திரிசொல் வண்ணம்

கதிரோன் சுடர்போலவிளங்கிடுங்கதித்தவாட்களுந்தொகுத்தசக்கரஞ்
சதிராகியவல்லயவேற்களுஞ் சத்தமிட வலிபிடித்தகதையுடன்
தனைமிகரிலையெண சமர்புரிந்திடவல
கனமிகுமுனதெழில்காவலிதாசே

இராசன் சொல்-விருத்தம்.

பேர்பெறும் நாட்டின் பிரபலவளமையாவுஞ்
சீர்பெறச் சொல்லக்கேட்டுச் சிந்தையில் மகிழ்ச்சியானேன்
தேர்வீதிமூன்றும் வாசல் சேதுபத்திரனேயித்த
ஊர் அதிசயமேதுண்டோ ஒளித்திடாதுரைசெய்வாயே.

க-ம் மந்திரி இராசனுக்குச் சொல்-விருத்தம்

ஒளித்திடாதும நாட்டில் ஒழுங்குறுவளமையாவும்
களித்தகமகிழ்வாயின்றே கழறுவேன் தடையொன்றில்லை
செழித்திடும் விளைவுண்டாகி திங்கண்மும்மாரிபெய்து
தழைத்திருக்கின்றபாவுஞ் சாற்றுவேனதிந்திடமே.

இராசன் தேசவிசாரணை-வண்ணம்-தரு-புன்னாகவராளி-ரூபகதாளம்.

வட்டவாருதி யுலகில்லெனதரும் இட்டாகிய தேசமருவலர்
கட்டிவருதிறைபணம தனிலொரு அட்டியானதுடங்காலனத
அறிந்தாக்கணை சொரிந்துச்சமர் புரிந்துத்தசை பருந்துக்கிறை
யாகத்தருவேனே ஆகத்தருவேனே ஆகத்தருவேனே

க-ம் மந்திரிசொல்-தரு

பட்டணத்தி னருமையாகிய இட்டமுற்றிடு வளமைமருளுவேன்
கட்டளைப்படி யரசே வுனதிரு சட்டமதிலொரு குறையுறாமலே
படித்துப்படை யடங்குக்கொடி சிறந்துத்துதி புரிந்துத்திரு
வருளானதுதானே அருளானதுதானே அருளானதுதானே

இராசன்சொல்-வண்ணத்-தரு

மைக்கடற் சூழ்புவியி லளவருதக்கபயிரிடு குடிகளட்வுடன்
சக்கரத்தற செறிவிசையுற துக்கமுற்றவறெளிமை யாகவுந்
துவண்டிடத்தரை மெலிந்தக் குடியருண் டெப்படி சிறந்துப்பிய
துயரானவருண்டோ துயரானவருண்டோ துயரானவருண்டோ

க-ம் மந்திரிசொல் தரு

திக்கனைத்துங் கொடையின் புகழ்நிறைமிக்க ரத்தினமகுடவாசனே
நற்குலத்தின் குடிகளிடுபயிர் சர்க்கரைக்கடல் மதுவுமடையென
தழைத்துப் பயிர்செழித்துக் கதிர்கொழித்துக் கிளைதளிர்த்துக்குறை
தானுனதே யில்லை தானுனதே யில்லை தானுனதே யில்லை

இராசன் தரு.

அத்திரத்தின் வலுமைதனிலுயர் சத்திசித்திர வொளிவுதிகழூரு
மத்தகத்தை சிர்த்தகெடிபெனவெற்றி பதியவீரானவர்
[illegible] குழிலடுத்துத்தனு கொடுத்துஞ்சார மிடுக்கச்செயும்
விதமானவருண்டோ விதமானவருண்டோ விதமானவருண்டோ



க-ம் மந்திரி தரு.

வெற்றிபெற்றிடும் ரோமை நகரினில் சத்தியுற்றிடு மாசே யடலுற
பத்துலசஷம் படைகளுளியுடன் தத்திடுயத்தி யதிகபுஜபல
தானைதந்தாளானைப் பரிசேனைக் கட்டேலாடிச்சிதக்
தானுனதுகோடி தானுனதுகோடி தானுனதுகோடி

இராசன் தரு.

உச்சிதத்திரு பரமனுலய வார்ச்சனை செய்யுமதிக புகழோடு
இச்சையுற்றிடு மேது நகரினில் துற்சனத்துடன் மறுசமயமதை
அடுத்தெடுத்தனை சடுத்தத்துட னொறிதப்பிய மதிக்கெட்டவ
ராராகிலுமுண்டோ ஆராகிலுமுண்டோ ஆராகிலுமுண்டோ

க-ம் மந்திரி தரு.

பச்சைநவமணியிலகு சுடர்முடியெச்ச அதிகாலுஜிதவாசனே
அச்சுதனையுரி பரமசிவாலய கச்சிதத்துட னிரவுபகலுமே
அருக்கக்கனி திருத்தூட்டினி வினித்தச்சுனை வருக்கத்துடன்
அபிஷேகமேபுரிய அபிஷேகமேபுரிய அபிஷேகமேபுரிய

இராசன்-உ-ம் மந்திரிக்குச்சொல் விருத்தம்

கட்டளைப் படியே சொன்னக் கருதரு வளமை யாவும்
இட்டமுற் றிடவே கேட்டு எனமனங் குளிரலானேன்
இட்டமாம் நான்காம் வாசல் சிறக்குமக் திரியேயித்த
பட்டண நிலைமை யாவும் பகருவா யெனக்கிப்போதே.

உ-ம் மந்திரி இராசனுக்குச்சொல் விருத்தம்

உன்னுநற் றேசந்தன்னில் ஒருவரும் பிசகில்லாமல்
நன்னிதத்துடனே வாழ்ந்து நயந்தொரு மொழியீறாது
பின்னவர்கள் யாதொன்றில்லை பேசரும் புகழ்கொண்ட
மன்னவனே நுமநாட்டின் வளமையை வசனிப்பேனே.

உ-ம் மந்திரி நாட்டுவளங்கூறல்.

இதயால்வேணுவானிதோறு

என்கிறஜாவளி வர்ணமெட்டு
பல்லவி.

மன்னவனே கேளுமையா
மாநகர்வளமையைப் பகர்ந்திடுவேன்

சரணங்கள்.

பொன்னொளிசெய் கோபுரங்கள்-மிகப்
பொலிந்துமின்னலை மிகர்க்குதையா.

தன்னிகரில் லாவேந்தே-நகர்ச்
சார்ந்தமதில்களில் பழுதில்லையே

வில்லொளிதோரணஞ் சாவடி-அதி
நல்லதோர்சித்திரம் குறைவில்லையே

திங்கள்மூன்று மழைபெய்து-தேசம்
செழித்துப்பயிர்களும் விளைகின்றதே

நமதாளின் குடிகள்புகழ்-என்னால்
நவின்றிடப்போகுமோ மகிபதியே

சதுரங்கசே னைச்சிறப்பை-என்னால்
சாற்றிடாவெழு வில்லையையா

இரத்னசிம்மா சனமதிற்கு-மன்னர்
இளைஞ்சிதிறைக்கட்டி வருகின்றாரோ

தன்னிகரில்லாவேந்தே செங்கோல்
தழைத்துகுறையின்றி வாழ்வீரையா

இராசன் சேனைபதிக்குச் சொல் விருத்தம்.

நெருக்கமே யணுகிடாமல் நிறைகொலு சமூகந்தன்னில்
இருக்குஞ்சே னைகளுக்கெல்லா மெழிற்சேனை பதியேகேளாய்
வருக்கமாய் நமதுநாட்டின் வளமைக ளறியவேண்டும்
சுருக்கமாயெனக்கிப்போது சொல்லுவா யறியத்தானே.

சேனைபதி இராசனுக்குச் சொல் விருத்தம்.

அவனியா ரைசரெல்லா மடங்கியே திறைகொணர்ந்து
கவனமுற் றெந்நாளும் கைகட்டி சபைமுன்னாக
நவநிதி யளித்துமேவும் நம்மிட பதிவளத்தை
சுவமாய் சொல்வேனீரும் களிப்புடன் அறிந்திடீரே.

சேனைபதி நாட்டுவளங்கூறல்.

☞ சாமிக்கியாப்போய் சொல்லுவார்

என்கிற வர்ணமெட்டு.

பல்லவி

தேச வளமை கேளையா
சித்தமகிழ சொல்லுவேன்

சரணங்கள்.

அணிபெரும் யானை சேனைகள் சூழும்
அரசனே குறைகளில் லாது இப்போது தேச



மாற்றலர் யாரும் வாராமுன் வேவு
மார்க்கமதைபறிந்து காத்து படைசேர்த்து வருகிறேன் தேச

தாக்கமுக மன்னர் ஓட்டமிட் டலற
தாக்கிடும்பீரங்கி குண்டால் இருத்துண்டாய் செய்குவேன் தேச

எங்கெங்கும் பாரா கொடுத்துக் காவலர்கள்
எதிரிகளைப்பார்த்திருக்கின்றார் மிகநன்றாய்-கேளையா தேச

துப்பாக்கிக் குண்டு பீரங்கி மருந்தும்
தாத்திடும் வேல்அம்பு மற்றும் குறையில்லையே-இறையே தேச

மன்னவா உனது செங்கோலுக் கடங்கி
மருவலர் தினம் பணிகின்றார் மிக நன்றாய்-கேளையா தேச

ஒட்டகம் யானை குதிரைகள் முஸ்திப்பும்
ஒதிடகுறையொன்று மில்லையே எந்தன் இறையே-கேளையா தேச

நாற்றிசை மன்னர் பகுதிக் கட்டுவதால்
கலமுடன் பொக்கிஷங்கள் நிறைந்தே மிகப் பரிந்தே-கேளையா

அகமிக மகிழும் அண்ணலே உந்தன்
அடியிணைப் பணிந்தேனே மிகவாய் மிகக் கனிவாய்-கேளையா

சேனைபதிசொல் விருத்தம்.

மன்னனே நின்தேசத்தின் வளமைகள் முழுதுமாய்ந்து
தன்னிகர் அடனுமக்கு நாடியா னுரைத்தேனையா
பின்னமொன் றணுகிடாமல் பெருமைசெங்கோல்தழைத்து
உன்னிய ரோமைநாட்டிற் கொருகுறை யில்லைவேந்தே.

இராசன் மந்திரிக்குச்சொல் விருத்தம்.

எனதுகொலு வருகினிலே மதிகளோதி யிருக்குமதி மந்திரியே இப்பக்கேளாய், கனிகள்பல தருவினிதாய் சூழ்ந்தேமிக்க கருதரிய ரோமைநகரிற் களிப்புற்றோங்கி, தினமுமடனமபுரிந்து வாழாநின்ற தெரிவையவளாகமது சிம்மாசனமுன்னாக, மனமதுராமாக வரவழைத்து நீயும் வரிசையுடனடனமிட வசனிப்பாயே.

உ-ம் மந்திரி ௨-ம் மந்திரிக்குச்சொல் விருத்தம்

நாற்றிசை புகழுங்கீர்த்தி நரபதி இறையான்பக்கம்
வீற்றிருந் தேவல்கேட்கும் வீரமந்திரியே கேளாய்
பார்த்திபன் சபைமுன்னாக பாதநாட் டியங்கள்செய்ய
தேற்றமேவிலவிழிநளாச் சீக்கிரம் வரச்செய்வாயே.

௨-ம் மந்திரி ௩-ம் மந்திரிக்கு சொல் விருத்தம்.

மாற்றமில்லாத நான்காம் வாசல் மந்திரியே கேளாய்
ஏற்ற மில்லாத வேந்தன் திருச்சமுகத்தின் முன்பாய்

தேற்றமாய் நடனஞ் செய்ய சேயிழை யார்கள் தம்மை
தோற்றமாயழைத்துக் கொண்டு சுறுக்கினில் வருகுவாயே

அம்மந்திரி சேனாபதிக்கு சொல் விருத்தம்

தேடரும் புகழின் மிக்கச் சேனைகாவலனே கேளாய்
நாடவர் புகழ்ந்து போற்றும் ராஜிபன் சபைக்கிப்போது
நடில்லா நடனஞ்செய்யும் ஏந்திழை மார்கள் தம்மை
ஓடியோர் கொடிக்குள்ளாக உடனவர வுணர்த்துவாயே.

சேனாபதி கட்டியனுக்குச் சொல் விருத்தம்

வேல்கரத்தேந்தி நிற்கும் வீரகட்டியனே வாடா
மால்மகனறங்க ரிகாத்த மன்னன கட்டளையிதாகும்
கோலொடு நடனஞ்செய்யும் கோதைமார் தன்னையிப்போது
காலதாமதமின்றியோடிக சுருக்கவே யழைத்திடாயே

கட்டியன் சொல் கவி,

சுருக்கவே யோடி மடந்தையா தம்மை
திட்முட னழைத்து அடவுடன் வாரோம்

கட்டியன் நாட்டியப்பெண்களுக்கு சொல் விருத்தம்.

இலங்கியகிரீடஞ்சூடும் ஏந்தல் எம்பிரதோர் வேந்தன்
நலம்புரி நடனஞ் செய்யுந் தையலே நீவனிப்போ
அலங்கார வேர்இமுடையாக அழகுடன் நடனஞ்செய்ய
துலங்கியபணிகள பூண்டு சுறுக்கினில் வருகுவீரே.

நடனப்பெண்கள் கட்டியனுக்குச்சொல் விருத்தம்.

திங்கள் மாவதனம் போன்ற செங்கதிர்க்குலத்துவேந்தன்
எங்களை யழைத்தாரென்று விளியொரு தடைசொல்வோமோ
மங்கள சபையிலிப்போ மாண்புட னடிப்பதற்கு
சங்கையா யுங்கள் பின்னே தகமையாய் வருவோமப்பா

## நாட்டியப்பெண்கள் ஆரம்பவிருத்தம்.

சங்கைசேர் திரையான்வேந்தன் நறைத்திடு பிரோமைநாட்டில்
பொங்கமாகிய மன்னர்கள் புகழ்பெற நடனஞ்செய்ய
செங்கதிரெனவே மின்ன சிறந்திடும் பணிகள் பூண்டு
மங்கள சபையைநாடி வனிதையர் வருகின்றோமே.





நாட்டியப்பெண்கள் தரு.

கூடுமுன்னே கோழி கூவுதே

என்கிற ஜாவளி வர்ணமெட்டு.

பல்லவி.

சுந்தர மாதர்கள் வந்தாரே நாட்டியஞ்செய்ய

சரணங்கள்.

இந்திரசபை நடிக்கும் இரம்பை மேனகையைப்போல
சந்திர முகங்கள் மின்னவே சங்கீதம்பாடி சுந்

கந்த களபம்பூசி கன்னியர் கைகளை வீசி
இந்தரை யாடவர் மயங்க இன்பமதாக சுந்

கூந்தல் பிறையைச்சூடி கொங்குமிழ் மலர்கள்சூடி
ஏந்தல் கொலுவதன்னை நாடியே இன்னிசைப்பாடி சுந்

முத்துத்தர் வடம்பதக்கம் மோதிரம் வளையில் மின்ன
சதங்கைசெய் பிலிக்கொஞ்சவே சபையை நாடி சுந்

கம்பல் ஜிமிக்கிகொப்பு கர்ணப்பூ மயிர்மாட்டியும்
காந்திசேர் தந்து மூக்குத்தி புலாக்குடனே சுந்

சித்திர வர்ணச்சேலை திகழ்பட்டு ரவிக்கையும்
தீதலவு வொட்டியாணமும் இடைவிளங்க சுந்

மண்டலத்தி லிவர்களைப்போல் மாதர்கள் இல்லையென
கண்டவர் வியப்படையவே கண்களைக் காட்டி சுந்

சேலொத்த விழிகளின் மைதீட்டி பிறைநோடித்து
திங்கள் வதனம் கண்டுமே திகைத்திடவே சுந்

நாட்டியப்பெண்கள்சொல் கட்டளைக்கலிப்பா.

மண்டலத்தவர் போற்றும்ப்ரகாசனே
மங்கையர்மதரூப வுல்லாசனே
செண்டுதாமரை யின்புயத்திரனே
திருவடிக்கென்று மெங்கள்சரணமே.

இராசன்சொல் விருத்தம்.

அரியதோர் கமதுநாட்டில் அணிசிறந் திலகிமேவுந்
தெரிவைகல் லாரேநீங்கள் திறமுடன் கொலுமுன்பாக
பரதசாத்திரந் தப்பாமல் பலவிதநடனஞ் செய்தால்
சரிகைசேலையுமுத்தாரந் தருகுவேன் பரிசுத்தானே

நாட்டிய பெண்கள்சொல் கட்டளைக்கலிப்பா.

வண்டுலாவு மலரணிமார்பனே
மன்னர் மன்னவர் சூழுஞ் சபைதனில்
கண்டுகண் களிகூர்ந்திடவே திரு
காக்ஷியாய் நடனஞ்செயக் காண்பீரே.

நாட்டியப்பெண்கள் நாட்டியமாடுகிற தரு.

☞ நின்னு நம்மி நன்னு நிறை ஜாலையா

என்கிற வர்ணமெட்டு.

பல்லவி.

சுந்திர ஒய்யார சொருகுகள்ள மார
வந்தன முனக்கே மன்னவர் பூபனே

சரணங்கள்.

மையல் மெத்தமீறி வாடுகிறோம் துரையே
தையலர் மேல்வர்மம் தகுமோ ஓ சாமி-காம

கொவ்வை கனிப்போன்ற யிதழூறு தோடா
இவ்வேளை வந்து யின்ப சுகந்தாராய்-கோராய்

கண்கள்ரெண்டும் சோர்ந்து கால்கள் தடுமாறி
என்னை மாகுதேடா இறையே உனைச்சேர-வாராய்

கொங்கைகள் ரெண்டுமே விம்மிநிமிர்பாராய்
பொங்கும் காமவெள்ளம் புரண் டோடுதேடா-வாடா

தென்றல் காற் றீசி தேகமும் வசுதே
நின்ற மொழிதடுமாறி போகுதடா-வாடா



பஞ்சணைமேல் சேர்ந்து படுத்துமுத்தந் தந்து
கொஞ்சி விளையாடி கூடிமையல் தீராய்சோராய சுக

தாமத மென்னடா சாமிமிக காமி
காமன் கணையாலே கலங்க லாகிறேமே-காம சுக

வண்டுவிழி சோர்ந்து வாடலானேம் துரையே
தெண்டனிட்டோம் மையல் தீர்க்க என்னஜாலம்-பால சுக

இராசன் நாட்டியப்பெண்களுக்குச்சொல் விருத்தம்.

என்னருஞ் சமுசமுன்பாய் எழிலுடன் நடனஞ்செய்த
பன்னருங் குணத்தின்மிக்க பைங்கிளிமா ருங்கட்கு
மின்னியபணி பொன்னுடை மேன்மையாய் பரிசுதந்தேன்
மன்னுமிச்சபையை நீங்கிமனை தனக் கேகுவீரே

நாட்டியப்பெண்கள் சொல் விருத்தம்

நன்று மன்னவனே நீர்தான் நவின்ற சொற்படிக்குத்தானே
இன்று மாநடனஞ்செய்தோம் நிகரிலா சரிகைசேலை
பொன்திரு மணிமுத்தாரம் பொருந்திய பரிசுதந்தீர்
என்றுஞ்செங்கோற் றழைக்க வினியசோபனஞ் சொல்வோமே.

நாட்டிய பெண்கள் இராசனை வாழ்த்துதல்

☞ ரம்மன வே சாமி நீ

என்கிற ஜாவளி வர்ணமெட்டு.

பல்லவி.

நித்திய மங்களமே

அநுபல்லவி.

சத்தியநிறை யாசே-தகைசெங்கோல்வாழ்க. நித்திய

சரணங்கள்.

பூமிசையுனது அரசிடர் நீங்கி
புகழாகவேமைந்தர் மாதும்வாழ்கவே நித்திய
தேசதேசமன்னர் திறையதுக்கட்டி
தினமுமுனது பொன்னடியை வாழ்த்திட நித்திய
நவரத்ன சிம்மாசன மிகத்துலங்கி
நாட்டின்குடிபடைகள் நலகுரவின்றிவாழ்க நித்திய
தேசமதில்நல்ல செழிப்புமிடிகளற
திங்கள்மூன்று மழைபெய்து சுகம்நீட நித்திய
வரும்பொருளுரைக்கும் மந்திரிமாரொடு
மங்களமாகவே சேனுபதியும்வாழ்க நித்திய

இராசன் உ-ம் மந்திரிக்கு சொல் விருத்தம்.

ஏர்க்கமுடன் எனது சிம்மாசன முன்பாக
இருக்கு மதிமந்திரியே இயம்பக்கேளாய்
பார்க்கு முவந்தினிய புத்தியுரைக்குவல்ல
வதிகாயகுண மிகுத்து வழிவும் றேங்கி
பாரக்குளினி தானசங்கைப் பெருமாவீரன்
பார்த்திபர்கள் மனது மெய்க்கும்படிப்பில்மிக்கோன்
தீர்க்கமிகு முதலமைச்சன் பிலாசுதன்னை
சீக்கிரத்திலிவிடம் வரச்செப்புவாயே,

உ-ம் மந்திரி சொல் விருத்தம்.

பாரினிலரசர் தங்கட் படைமுகத்தலைவனான
சீரிய வலுமிகுந்த சேநுபத்திரனே கேளாய்
பேரினி துயர்ந்த மந்திரி பிலாசுரன் றனையிப்போது
தேரிய கொலுமுன்பாக சீக்கிரம் வரச்செய்வாயே

ங-ம் மந்திரி சொல் விருத்தம்.

மாவலுறு பருதிபத்திரனே கேளாய்
காவலனுருரைத்த மொழி கடந்திடாமல்
ஆவலுடன் முதலமைச்சன் பிலாசுதன்னை
கூவியழைத் தோடிவாக் கூறுவாயே

ச-ம் மந்திரி சொல் விருத்தம்

பட்டயங் கரத்திலேந்தி படபடத்தோரை வாட்டி
கட்ட மற்றிடவேசெய்யும் நாகபத்திரனே கேளாய்
திட்டமா முதலமைச்சன் திறமிகு பிலாசுதன்னை
மட்டில்லா கீர்த்திமேவும் மன்னர்முன் வரச்செய்வாயே

சேனுபதி சொல் விருத்தம்.

எதிகவுண்டு ஆயுதங்க ளேந்தி நிற்கும்
உரியவலு கட்டியனே ஓதக்கேளாய்
பிரியமுறு முதலமைச்சன் பிலாசுதன்னை
அரிய திருச்சபையிலிப்போ தழைத்து வாராய்

கட்டியன் சேனுபதிக்கு சொல் விருத்தம்,

சாற்றியப்படியே யொன்றுந் தாமசஞ் செய்திடாமல்
மாற்றலர் தமைஜெயிக்கும் மந்திரி பிலாசுதன்னை
காற்றெனப் பறந்தேயோடி கையுட னழைத்து வாரேன்
தேற்றறிவுடைய வெங்கட் சேனைகாவலனே போற்றி.



கட்டியன் முதல்மந்திரியைக்கண்டுசொல்-விருத்தம்.

பன்னரும் புகழின்மிக்க பார்த்திபன் திரையானெங்கள்
மன்னவன் மகிழுங்கீர்த்தி மந்திரிதலைவா போற்றி
தென்னவ னுரைத்த வண்ணந் தேவரீர் தமையிப்போது
பொன்னணி கொலுமுன்பாக புகழ்பெற வரச்சொன்னாரே

முதல்மந்திரி கட்டியனுக்கு சொல்-விருத்தம்

புகழ்பெறவரவேபோதும் புயபலவீரரேகேள்
சகலரும்புகழும்வேந்தன் றன்மொழிக்கெதிருண்டாமோ
அகமகிழ்வாகவிப்போ தலங்கிர்தகொலுமுன்பாக
திகழுறவருவேனீங்கள் சீருடனெம்மின்வாரீர்.



முதல்மந்திரி பிலாசுரன் ஆரம்ப விருத்தம்.

நெறிமுறை தவறிடாமல் நிகழ்த்தரு மூலகோர் போற்றுங்
குறைவிலாரோமை நாட்டிற் கொள்கையா வரசபூண்ட
இறையவன் திரையான் வாசலெழில்பெறு சமூகமாடி.
பிரபலத்துடனே மந்திரி பிலாசுரன் வருகின்றானே,

தரு-இ-ம்-தோடி-அடதாளசாப்பு.

மன்னன் திரையான் வாசல்மந்த்ரி பிலாசுரன்
வளர் சபையில வந்தானே

தன்னே ரிணையில்லாத சாதுசற்குண சீலன்
பன்னரும் புகழ்கொண்ட பக்தி விநய லோலன்
பாலவையைச்சடைமீதணிந்திடுந்
தேவனைத் தினமும் பணிந்திடும் மன்னன்

அத்திவண்ணனை நினைந்து வெண்ணீறணிந்து
ஐந்தெழுத்தைப் பணிந்து
செந்தூரத்திலக மிட்டு சிரசில்சரிகை கட்டு
கந்தா பதக்கமிரு காதிற் கவச மிட்டு
காந்திரத்தினமே விலங்கிடுஞ்
சாந்த சற்குணமாய் விளங்கிடும் மன்னன்

அரியலர்களை யடக்கி திறைகவர்ந்து
நாட்டிகத்துடன் முடுக்கி
அரசன் சொல்லுக்கடங்கா அசடர்களைப் பிடித்து
அருஞ்சிறையிலடைத்து அறிவுமிகப் படித்து
ஆதரைத்தனி லேதமற்றவன
மாதுரத்தன மீதிலுற்றவன் மன்னன்

சித்தஜன்றனை நிகர்த்த முகவதன
சிதச்சந்தனைப் பழித்த
அஸ்தகடக மார்பில் வாரமணித் துலங்க
சொத்து முத்துமணிகள் கோர்வைச்சர மிலங்க
கூறுமானலமே நிறைந்தவன
தேறுநற்கலையுந் தெறிந்தவன் மன்னன்

முதல்மந்திரி-சொல்-போற்றிக் கவி.

சங்கரனே மறைமுதலேசருவயீசா சதாசிவனேசந்திரசேகரனே போற்றி, ஐங்கரனை யின்று மழுவேந்தி நின்ற ஹராகரா புரமெரித்தவா னேபோற்றி, பொங்கமதாய் காளியுடனடனமாடி புகழ்பெறவே வெற்றிகொண்ட பொருளேபோற்றி, திங்களைச்செஞ் சடையணிந்தசிவனே யுன்றன் செங்கமலத்தாளிணையைச் சேவித்தேனே.

முதல் மந்திரி-இராசனை-கண்டு சொல்-விருத்தம்.

கரியணிதிரள்கள்கோடி கனபரிதளங்கள்கோடி
சரியிணை நிகரொவ்வாத சதுரங்கசேனை கோடி
விருதுநால்வகைசேனைக்கு மிகுத்தவெகம்பிரனேயுன்
திருவுசேர்பாதமெந்தன் சிரசினிலணிந்திட்டேனே.

இராசன்-முதல்மந்திரிக்கு சொல்-விருத்தம்.

வந்தபிலாசுரனெனும் மந்திரியேவாழி
நந்தவில்லாதமதுலகின் மறுமன்னோர்கள்
தந்துவருந்திறைநிருபந் தானதிபுண்டோ
எந்தன்மனங்குளிர யிப்போதியம்புவாயே

முதல்மந்திரி-இராசனுக்குச் சொல்-விருத்தம்.
உபகாரத்திடுவேலையா உத்தமகுணத்தின் மிக்க
[illegible] தாந்தரவழி நின்மாரா



தரையில்வாழ்மனுவோர் போற்றுந்தாஷ்டிகபுரனே இந்நாள்
வரையின்மேலாங்கணக்கின் வகையெலாமுரை செய்வேனே

திரையான் மன்னன் முதல் மந்திரியை
நாட்டுவளம் விசாரித்தல்.

ஆரண்யந்தில் ஓராசன்றித்திரை செய்யவே
என்கிற வர்ணமெட்டு.

இராசன்சொல்லல்

மன்னர்புகழ் உன்னிதஞ்சேர் மதிமந்திரியே-என்
மனமகிழ நகர்வளமை வழுத்திடுவாயே

மந்திரி சொல்.

மின்முடிசேர் என்னரசே நின்மொழிபோலே-நம்
மேன்மையுறும் பதிவளமை நிகழ்த்த கேட்பாயே

இராசன் சொல்லல்.

நாட்டினிலே மழுவலர்கள் போட்டிகளுண்டோ-பயிர்
நல்லவிளைவுண்டாய் குடிகள் நாட்டில்வாழ்கின்றாரா

மந்திரி சொல்.

மறுவலர்கள் திறைகட்டியே வருகின்றாரரசே-மழை
மாதமதில் மூன்றுபெய்து நடி மகிழ்ந்திருக்கின்றாரே

இராசன் சொல்லல்.

அந்தணர்கள் அனுதினமும் பூசைகள்செய்து-நமது
ஆலயங்கள் தேர்திருவிழா அட்டிகளுண்டோ

மந்திரி சொல்.

நாள்தோறும் பொற்கோவில்விழா நடத்திவருகின்றார்-நம்
நாட்டின்புகழ் எடுத்துநானும் நவிலப்போகுமோ

இராசன்சொல்லல்

அன்னசத்திரசாலைகளில் குறைகள்வுண்டாகி-மிக்க
அந்தணர்கள் பிணியாது அறைந்ததுண்டோமோ

மந்திரி சொல்.

நிதிநிறை எமதரசே நிகழ்த்தகேளுமே-அன்னம்
நிதியமும் தான தர்மம்குறைகளில்லையே

இராசன் சொல்லல்,

பொல்லாதகள்வர் துஷ்டர்பொ றுமைகளுண்டோ-புது
மார்க்கங்க ளேதாவதுண்டோ புகலுவாய் மந்திரி

மந்திரி சொல்.

வல்லடிக்காரர்களில்லை மாற்றலரில்லை-மற்ற
மார்க்கமதால் குழப்பமுண்டாய் மடிவாரில்லையே

இராசன் சொல்லல்,

கன்னியர்கள் கற்புநிலை தவறாமல்நாளும்-தன்னை
காத்துவருகின்றாரோநீவிர்கழறுவாயறிய

மந்திரி சொல்,

ஓதகேளும் மாதர் கற்புக்கொருகுறைவின்றி-புகழ்
ஓங்கிவரும் புதுமையென்றால் உரைக்கத்தரமோ

இராசன் சொல்-விருத்தம்,

அறிந்தெனக்குரைத்தகீர்த்தி அமைச்சனேமைதுநாட்டின்
வரிசைசேர்வளமைகேட்டு மனதுசந்தோஷமானேன்
சிரசில்சந்திரனைவைத்த சிவனருளாலெந்நாளும்
மருவிலாதினிநாமிங்கே மகிழ்ச்சியோடிருக்கலாமே.



குடிகள் தோற்றம் விருத்தம்

விள்ளரியகதலி பழுக்குதிர்ச்செந்தேனும் விரிமலர்களிதழுடை
தவிர்ந்தேயோடி, கொல்லையெங்கு நிறைந்து வழிக்கொருவாய்க்கால
ற் கோடி வருசோமைநகர்க் குடியானோர்கள், எல்லைவிளைந்திடும் பயி
கள்பலுங்கெடாம லிடுவருத்தி விலங்கினங்க ளழிப்பதாலே, சொல்லுதற
குந் திரவ்சருண்டு சொலுவைவாடி துரையெனும் பிலாசுரன் முன
தோன்றினரே.

தரு-இ-ம்-தன்யாசி-ரூபகதாளம்.

குடிகள்வந்தாரே     சோமைநகர்க்     குடிகள்வந்தாரே
அடவிமிருகம்புனத்தை     நெருங்கி
அழிக்குதென்றமைமயர்ந்துக்     கலங்கி



கொல்லையிலிடும் பயிரைத்     துடந்து
கூடியேபலமிருக     மடந்து
சல்லியஞ்செயுமிடத்தைக்     கடந்து
சமூகமன்னவன் சபையில்     நடந்து     குடி-

கலப்பை யாயுதங் காத்தி     யெடுத்து
காவிச்சோமனுமிடையிற்     றொடுத்து
நலத்தைந்தழிழந்தோ மெனவே     கடுத்து
நாடியமைச்ச னிடத்தி     லடுத்து     குடி-

சிறுத்தை யாளியுங்கரியு     மேய்ந்த
தீங்குசெய்யுதே     சிதாரணந்த
வருத்தமகற்றி காருமென்றே     அந்த
வார்த்தைமன்னவனிடஞ்சொல்ல     கொந்த     குடி-

குடிகள்-உ-ம்-மந்திரிக்குச்சொல்-விருத்தம்

செல்வமும புகழுங்கீர்த்தி திறங்களும் வரம்பெற்றோங்கும்
கல்விகர்புயனேவாசல் காக்குமந்திரியே போற்றி
வல்விலங்கினமேயாமல் வந்தங்கே நாங்கள்செய்த
கொல்லையின் பயிர்களெல்லாம் குறைபடவழிக்குதையா

உ-ம்-மந்திரி-முதல்மந்திரிக்குச் சொல்-விருத்தம்

மதிமிகுதிரையான்மன்னன் மனதுமெய்த்திடுகெம்பீர
அதிமிகுமமைச்சேயானோர்சேதியும்மிடத்திற்சொல்வேன்
பதியினில் பயிர்தன்றன்னை பலமிருகங்கள்வந்து
சதிபுரிந்தழிக்குதென்று சாற்றினார்குடிகள்தானே

முதல் மந்திரி-இராசனுக்குச்சொல்-விருத்தம்.

பொன்னிலும் பொன்னாய்த்தோற்றும் புயபலாஉமதுநாட்டில்
கன்னலுஞ்செந்நெல்மற்ற கனியுடன்கிழங்குயாவும்
மின்னமாய்மிருகம்வந்தே பிசகறவழிக்குதென்று
மன்னனேகுடியானோர்கள் வழுத்தினாரிந்நிலமே

இராசன் முதல்மந்திரிக்குச்சொல்-விருத்தம்

என்னுடைய கட்டளையை மகிழ்ந்துகேட்கு மினியகுணமந்திரி
யேவியம்பக்கேளாய், வன்னமிகு பயிர்களெல்லாம் பாழாயச்செய்யும்
மதமிகுந்தவிலங்கினத்தை வதைக்கவேண்டும், கன்னயமாயிட்டியம்பு
சத்திவேலும் நவிலரியபலபல வாயுதங்கொண்டு, கன்னிமைக்குள்சங்
காரஞ்செய்து நீ நான் கடுதெபாருதொடியில்வந்து கழறுவாயே,

முதல்மந்திரி-குடிகளுக்குச்சொல்-விருத்தம்.

குறைப்படவழிக்குதென்று கூறியக்குடியானோரே
உறைப்படுத்திரிசைவேலும் உரத்தவாயுதத்தினாலே

கறைப்படமிருகமெல்லாங் கதறிடச்சிதறச்செய்வேன்
முறையொழிக்தேநீருங்கள் முதுமனைக்கேகுவீரே

குடிகள்-சொல்-விருத்தம்.

மனைதனக்கேகுமென்று வழுத்துமந் திரியேபோற்றி
எனைமுகம்பார்த்துகாத்திட் டிரக்கமுற்றவரேசீர்தான்
கனதிரள்மிருகமெல்லாங் கண்டித்துவருவீராகுல்
உனையினிமறவோமெங்க ளுயிருளவரைக்குந்தானே

முதல்மந்திரி-உ-ம்-மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

ஏவல்கேட்டிருந்தெந்நாளு மிறையவன்றினையானேவல்
மேவியசமுகங்காக்கும் வீரமந்திரியேகேளாய்
தாவியமிருகமெல்லாஞ் சதைத்திடமிகுத்தவேட்டை
காவலர்தமையிப்போது கடுகியேஅழைத்துவாராய்

உ-ம்-மந்திரிசொல்-விருத்தம்

சொலுமொழிதவறாதத் தூயமந்திரியேகேளாய்
வலுமைசேர்மிருகமெல்லாம் வதைத்திடவேட்டையாடும்
பலமுளவில்லுவாளி பகர்ந்தவாயுதங்கள்கொண்டு
இலகியவேடர்தம்மை இக்ஷணம்வரச்சொல்வாயே

௩-ம்-மந்திரி சொல்-விருத்தம்

வீரியசேனைக்கெல்லா மிகும்படையமைச்சேகேளாய்
ஊருளகுடிகளெல்லா மொருமிக்கசபையில்வந்தே
சீருளப்பயிர்களெல்லாஞ் சேதமாயழிக்குதென்றார்
கேருளவேடர்தம்மை கிமிஷத்திலழைத்துவாராய்

௪-ம்-மந்திரிச்சொல்-விருத்தம்.

எதிர்த்தமாற்றலரைவாட்டு மெழிற்சேனபதியேகேளாய்
விதித்தகட்டளைப்படிக்கு வில்வியர்மறவரோடு
குதித்திடுஞ்செக்காயடேனை கொடிவலை தடிகள்கொண்டு
துதித்திடுங்கொலுமுன்பாக துரிதமாய்வரச்செய்வாயே.

சேனபதிச்சொல்-விருத்தம்.

கட்டியவடிபோர்க்கரம விறையவனகொலுமுன்பாக
நட்டிமீசையைமுறுக்கித் தாட்டிகத்துடனேநிற்கும்
[illegible]லும் நாம் அதை வாசிப்பதும் அறிவதுமே [illegible]மன்று எண்ணாமல் [illegible]டைய நடக்கைக்குப் பிரமாணமும் ஆக்கிக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவினுடைய பாடுகளையும் மரணத்தையுங்குறித்து எழுதியிருக்கும் [illegible]தியானமாகிய இந்தப் புத்தகத்தை நாம் படிப்பவர்க[illegible]த்திரமிராமல் அவைகளினால் உண்டாகும் பாக்கியங்களில் பங்குள்ளவர்களாக[illegible]சப்படவேண்டும். இயேசுவானவர் தம்மைப் பார்த்து அழுத ஸ்திரீகளை நோக்கி, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுதுகொள்ளுங்கள் என்று சொன்னார். அவ்வேளையிலே வேதனைகளினால் சூழப்பட்டிருந்த அவர் அருகே நாமே நின்று அழுததாகவும், அவ்வாக்கியத்தை அவர் நம்மை நோக்கியே சொன்னதாகவும் எண்ணிக்கொள்வதுமன்றி, அவர், நான் இந்தத் துன்பங்களைச் சகிக்கிறதற்கு உங்கள் பாவங்களே காரணமாயிருந்தன என்றும், [illegible]பாடுகள் உங்கள் பாவங்களை நீக்குகின்றவைகளாயிருக்கின்றன என்றும் சொன்னதாகவும் நினைக்கக்கடவோம். இப்படி அவரை நாம் ந[illegible]ஆத்தும இரட்சிப்புக்கேற்ற கிரியைகளை முடித்தவராய் [illegible] பரிபூரண அன்பும் விசுவாசமும் வைத்துத் தமக்கு முன் [illegible]வைத்திருந்த சந்தோஷத்திற்காக அவலட்சணப்படுதலை எண்ணாமல் சிலுவையின் மரணத்தைச் சகித்துக்கொண்டு விசுவாசத்தைத் துவக்கினவராய் நடத்துகிறவராயும் முடிக்கிறவராயும் இருக்கிற இயேசுவை நோக்கி, அவருடைய பரிசுத்த மாதிரிக்கு ஒப்பாக நடந்து, மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரிகளானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காலங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்த்தியானாலும், தாழ்த்தியானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் விளங்கிய தேவனுடைய அன்பைவிட்டுப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன் என்று பவுல் அப்போஸ்தலனுடன் சொல்லக்கடவோம்.

மேலும் நம்முடைய தேவன் பொல்லாதவர்களைப் பட்சிக்கும் அக்கினியாயிருக்கிறபடியினாலே நாம் வணக்கத்தோடும் தேவபக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனைசெய்யத்தக்க கிருபையுள்ளவைப் பற்றிக்கொண்டு இந்தப் புத்தகத்தில் அடங்கிய தியானங்களை மிகுந்த கவனத்தோடும் பக்தியோடும் வாசித்து அவைகளை மனதில் வைத்து யோசித்து அவைகளால் நம்முடைய நடக்கைகளைத் திருத்தி நாம் இனி இருக்கும் ஜீவியகாலத்தைத் தேவனுக்கு மகிமையாகக் கழித்துப் பாக்கியமான மரணமடைந்து இயேசு தமது விலையேறப்பெற்ற திவ்விய இரத்தத்தைச் சிந்தினதினாலும், தாம் சகித்த கொடிய உபாதைகளினாலும் மரணத்தினாலும் நம்மைப் பற்றிக்கொள்ளும் விசுவாசிகளுக்குச் சம்பாதித்த மோட்சவாழ்வைப் பெற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களாய்ப் பரிசுத்த ஆவியைக்கொண்டு ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே நம்மைக் காத்துக்கொண்டு மாம்ச இச்சைகளால் அசுசிப்பட்டிருக்கிற அங்கியை வெறுத்துப்போட்டு நித்திய ஜீவனுக்கு ஏதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கம் வரக் காத்திருக்கக்கடவோம். நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மைத் தமது இராஜ்யத்தாராகவும் ஆசாரியராகவும் செய்திருக்கிற அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருக்கக்கடவது!

# முகவுரை

கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினால் உண்டாகிய இரட்சிப்பின் சுவிசேஷத்தை முக்கியமாய் அஞ்ஞானிகளுக்குப் போதித்த அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதின முதலாம் நிருபம் இரண்டாம் அதிகாரம் இரண்டாம் வாக்கியத்திலே சிலுவையிலே அறையுண்ட இயேசுகிறிஸ்துவையே அன்றி வேறொன்றையும் உங்களுக்கு அறிவிக்க [illegible] எண்ணியிருக்கிறேன். சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அறிந்திருப்பதே நாம் இவ்வுலகத்தில் அடையத்தக்க ஞானங்களில் எல்லாவற்றிலும் அருமையும் மேன்மையுமான ஞானமாயிருக்கிறது. கிறிஸ்துவானவரின் தன்மையானது நம்முடைய புத்தியினால் கிரகித்தறிந்து [illegible] வதற்கு அரிதாயிருக்[illegible] பவுல் என்னப்பட்டவர் உலகத்திலுள்ள அநேகம் [illegible] சாஸ்திரங்களையும் கலைக்கியானங்களையும் அறிந்திருப்பது மேன்மையென்[illegible] எண்ணாமல் சரீரம் முழுவதும் இரத்தப்பிரவாகத்தினால் [illegible] பட்டு [illegible] ர்தவராகிய கிறிஸ்துவானவரை அறிந்திருப்பதே மேன்மையென்று எண்ணி மற்றவர்களும் அந்த அறிவையே [illegible] யும்படி முக்கியமாய்ப் போதித்து அவர்களை வருந்தி அழைத்தார். மேலும் இயேசுவின் அப்போஸ்தலர்களில் பிரதான அப்போஸ்தலனாகிய பேதுரு தாம் எழுதின [illegible] வான முதலாம் நிருபம் முதலாம் அதிகாரத்தில் (கிறிஸ்துவினால்) உங்களுக்கு உண்டான இந்தக்கிருபையைக்குறித்து முன் பேசின தீர்க்கதரிசிகள் தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவின் பாடுகளையும் அவைகளின் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபொழுது, எந்தக் காலத்தை எப்படிப்பட்ட காலத்தைக் குறித்திருக்கிறார் என்று சோதனைபண்ணி, இப்படி இந்த இரட்சிப்பைக் குறித்து மிகவும் ஆராய்ந்துபார்த்தார்கள் என்றும், அவைகளுக்குள்ளே தேவதூதர்களும் உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிறார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். இவைகளினால் கிறிஸ்துவின் பிரசங்கினாலும் மரணத்தினாலும் உண்டாக்கப்பட்ட இரட்சிப்பின் மேன்மை விளங்குகின்றது.

நாம் ஒரு பாஷையைப் படிக்கவும் ஒரு சாஸ்திரத்தை அறியவும் [illegible] றும் நாற்பல கல்விகளைக் கற்கவும் [illegible] களையும் [illegible] ரங்களையும்

[illegible]

வேண்டியவர் தைசூண்ட வேசதர்களைக்குகையாய்
ஆணதேகுரண்டு நீங்கள் அடைந்திருக்கிறே



தாண்டியதிசைகளெல்லாஞ் சமதுயிக்கனே தாரத்தின்
தாண்டியேவந்ததாலே தப்பிதம்பொறுத்தேன்கண்டாய்

மறுபத்திரன் சொல் விருத்தம்.

எழுந்தவந்திணக்கமாக இன்றுமைக்கண்ணுற்கண்டு
வளம்பெறுஞ்சமாதானத்தின் வரிசையும்பெற்றுக்கொண்டோம்
களங்கமற்றெழுந்தாரங்கள், காக்குகம்பதிக்குப்போக
விளம்புகல்மதுரமாக விடைதரவேண்டுமையா.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

ஐயமற்றெழுந்தநீங்கள் அவரவர்கெருவம்நீங்கி
பொய்மொழிபகராவண்ணம் பொருந்திநீரொன்றும்போலே
வையகந்தனிலேநீங்கள் மனமகிழ்ந்திருங்கள்சற்றும்
வெய்யவெஞ்சினமில்லாமல் விடைதகதேன்பதிசெல்வீரே.

மறுபத்திரன் சொல் விருத்தம்.

பதிதனக்கேகுமென்று பகருமந்திரியேபோற்றி
கதிபெற்றேறுமைகண்டு கவலைகளொன்றுமில்லை
அதிவிரரோமைக்கேகரன் அன்புடன்போயநீர்வாரும்
பதியினிலுயர்ந்தநல்ல மன்னவாசரணம்போற்றி.

இஸ்தாக்கியார்சொல் விருத்தம்.

எங்கிடாதிருந்தேங்காளும் எதிர்த்தமாற்றலர்கள்தன்னை
இங்குதல்புரியவல்லத் திரசேவுகரேகேளீர்
பரங்குடன்திசைகளெல்லாம் பலுகவேகுறைவில்லாமல்
வரங்கிறேனும்ரோமைக்கேக வருகுவீர்வலிவுள்ளோரே.

சேவகப்பிள்ளைகள் சொல் தரு.

மன்னன் திராயானின் மணிவாசலில் நிற்கும் மதி
மந்திரியுடனே கூடி சிந்தை மகிழ்வாய்
தென்னவுடனெடுத்து சென்னிகொய்யவே வெகு
திட்டாட்டமாக நல்ல சேவகஞ்செய்தோம்
ஒந்தரமென வந்து இறைதந்த மன்னவர்க ளுடன்
தாட்டிகமதாக வில்லை மெட்டிமையுடன்
சுந்தரமிலகாடு கடந்திட வண்ணம் வெகு
கட்டுமெட்டுடன் கடந்துகல்லூரில்வந்தோம்

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

வெந்திரப்போர்கள்செய்யும் வீரசேவுகரேகேளீர்
பொங்குநற்கதிரோன்மேற்கு புகுந்திருள்பொலிந்ததாச்சு
தங்கியேஇவிடந்தன்னில் தகமையாய்சகலபேரும்
பொங்கியுண்டுறங்கிகாலைப் போலாம்வருகுவீரே.

இஸ்தாக்கியார் சொல் கொச்சகம்.

ஒன்றுபடவேதிரண்டு உண்மையுடனேகூடி
வென்றியுடன்திறைதிருப்பம் விரைவுடனேவாங்கிவந்த
மன்றினியசேவுகரில் வலுவுடையமைந்தர்களே
என்றும்போலசனமிட என்னுடன்வருகுவீரே.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

மண்புவிதனிலென்னோடு வந்தகமகிழ்ச்சியாக
முன்புபோலசனம்பண்ணி முடிந்தநேர்முதன்மையாக
பண்புடனெழுந்துநீங்கள் யாருமோர்விடுதிதேடி
கண்துயின்றெழுந்துகாலைக் காலையில்வருகுவீரே.

சேவுகப்பிள்ளை சொல் இடைக்கண்ணிகள்.

தலமெங்கும் புகழ்கொண்ட துரையவ ருடன்
தரியலரொடுபடைபொருதியே வந்து
பலசங்கை புரிகின்ற தோழனே நாமும்
பசிதீரும்படி சேனாபதி நம்மை
விதமாக ரசங்களும் பழங்களும் பானு
மிகுசீனியவல்தேன் சக்கரைகளும்
இதமாகநறுநெய் சிற்றுண்டிகள் கண்டு
இவைதேடி மனதாற சுவையுடன்
விடுத்தருந்தியே யிங்கு முடிந்ததிந இன்று
மிகயினைப்பாறியே வெளியிலே மறு
படியாதி காலையிலாகவே இங்கே
வாவேணுமிது இடமிருவாய்
வணங்குமெய்புகழ் கொண்ட துரையுமே சொன்ன
வார்த்தையின்படி வழுவாமலே இங்கு
இணங்கியோர் மனையிடந்தேடியே நா
மிருபேருந் துயினுவோம் வருகுவீர்



கப்பிஸன் சொல் விருத்தம்.

ஆற்றலா எங்களைத்தா னனுசரிப்பவர்களில்லை
மாற்றமில்லாக்கல்லூரில் வாழுமானிடரேகேளீர்
தேற்றரும்பிலாசுமந்திரி சேவுகர்நாங்களாகும்
ஏற்றஉம்மனையில்யாங்க ளிருப்பதற்கிடந்தாரீரோ.

ஔவையார் சொல் விருத்தம்.

இங்கிருந்தேகநீங்க ளிடந்தரவேண்டுமென்று
சங்கையோடென்னைக்கேட்ட சவுரியபாலரோநீ
ரெங்கிருந்தெங்கேபோநீ ரெந்தனுக்குரைத்திரானல்
தங்கிநீரிருந்துபோகத் தடம்துதருவேனப்பா.

ஒப்பிஸன் சொல் விருத்தம்.

பெருந்தயவுடனேகீர்த்தி பெற்றவன்னையரேகேளீர்
வருந்திமாற்றலர்கள்கப்பம் வாங்கினோம்ரோமைக்கேக
திருந்தியகதிரோன்மேற்குச் சென்றதால்நாங்கள்வந்தோம்
இருந்திளப்பாறவிங்கே இடந்தரவேண்டுந்தாயே.

ஔவையார் சொல் கலித்துறை.

அடுத்தார்க்குதவியில்லாம லிந்நேரத்திலந்தரமாய்
தொடுத்தாதரவின்றிஎன்னிடமே வந்ததோன்றர்களே
தடுத்தாவசீரதுபுறங்காணு மென்னதுசாலையிலே
படுத்தேயிருந்தேகுவீர்களப்பா திருபாலர்களே.

கப்பிஸன் சொல் விருத்தம்.

சிந்தையில்மகிழ்வாய்ரோமை சேனைகாவலர்களோடே
வந்தொன்றுய்பசிதானுறி வரிவிழித்துயிலுமுன்னே
எந்தஊர்பிறப்புமுன்னை யீன்றதாய்தந்தைபேரும்
உந்தன்பேர்குலநான்கேட்க உகந்தெனக்குரைசெய்வாயே.

ஔவிஸன் சொல் அகவல்.

உரைபகர்ந்திடுக்கே ளுருகுந்த என் நேசாதரைதனில் மூத்த—தமை
யனுண்டெனக்கு பெயரோ கப்பிஸன்தான் பெற்றவன்னையர்க்கு—
ஓர்பெருந்திருபேர் ஒப்பிலாமாதியே—அப்பரெஸ்தாக்கி அடியனௌ
விஸன்தான்—உய்துநாம் வாழும் உரோமைமாநகரோ—வளர்நகரா
ளும்மன்னவன் திரையான் தனதுவா சலுக்குதலமையதான—வரி

சையாய் முதலாமந்திரியாக—பெருகும்மென் தந்தைபிரபலத்துடனே அதிகபாக்கியங்கள் ஆண்டனுபவித்துக்குறைகளில்லாமல் இருக்கின்ற நாளினில்—அனைத்தையும் படைத்த ஆதிசோதனையால் தினமுள்ள செல்வஞ் சீரழிந்ததனால்—எங்களைத்தந்தைஇடுக்கியே பிறவூர்அங்கு போம் வழியின் அலைகடல் மறிக்க—ஓடுகுமே திரைமேலுருவங்கத் தேறி நீங்கவக் கரையில் நின்றபின் பிறகு—வந்துசேரப்போன் மரக் கலன் கூலி தந்துபோமென்று தடையதாய் மறிக்க—இன்னதென்றெங்களை இடமில்லாததனால அன்னையர் தன்னை—யீடாகவேநிறுத்தி அத்தனு எங்களுருவனம் புகுந்து மற்றுமோராறு வழிமறித்ததினால்—

இதுவுமது விருத்தம்.

வரும்வழியில்மற்றோராறடுத்ததாலே
மனங்கலங்கிஎனை யெடுத்தக்கரையேசேர்த்து
கருதியவென்தமையனை வந்தெடுக்கத்தந்தை
கரைநோக்கிவரும்போது கடுவாயென்னை
துரையினில்வந்தெடுத் தேகும்போதுவங்கோர்
துணிவுடையபுண்ணியவா னெனைபறித்து
அருளுடனேஎனைவளர்த்தான் தமையன்தந்தை
அகன்றவிடமின்னதென்று அறியேனண்ணா.

கப்பிஸன் சொல் விருத்தம்.

தேற்றுதல்புரியுந்தேவத் திருபரனருள்கொண்டேநான்
ஆற்றலாயிருந்துயிர்நா ளளவுமேஅருள்பெற்றேநான்
மாற்றமொன்றில்லாதுநதன் வளமையைத்துயரமாக
சாற்றிடக்கேட்டேனெந்தன் சகோதரத்தம்பிநீயே.

கப்பிஸன் சொல் தரு இராகம் ஆஹிரி ஆதிதாளம்.

ஐயையோ எந்தனருமை சகோதர தம்பியாரோ இந்த
தரையினில் மகாபாதகஞ்செய்தோமோ தம்பியாரோ
பொய்யானலோகப்பொருட்களழிந்தாலும் தம்பியாரோ மெத்த
பொறுமையாய்மறுதேசம்போவோமென்றார் தந்தைதம்பியாரோ
மாதாபிதாவுடன் வனத்தில்வரும்போது தம்பியாரோ ஆறு
மறித்திடும்போது வழியற்றுநின்றோமே தம்பியாரோ



ஆதரவில்லாமல் அன்னை தந்தையுடன் தம்பியாரோ அன்று
அலைவாக்கரையில்நின்று நிலையில்லாதேங்கினோம்தம்பியாரோ
கடற்தனில்மாபாவி கப்பலிலேறியே தம்பியாரோ அந்த
கரைசேர்ந்ததே கூலித்தரவேணுமென்றானே தம்பியாரோ
அடவாய்கூலிகொடுக்க அரைக்காசுமில்லாமல் தம்பியாரோ பெற்ற
அன்னையைக்காவலில் பின்னப்படவைத்தோம் தம்பியாரோ
மறிப்புறுந்தாயுரைப்படியே நாமையரும் தம்பியாரோ இருள்
வனத்தில்வரும்போது மனத்துயராகினோம் தம்பியாரோ
பெருகிவேறாறு மறித்ததினாலங்கே தம்பியாரோ மனம்
பேதகமாய் தந்தை மாதுயராகினார் தம்பியாரோ
ஆற்றின்கரைதனில் ஐயரெனைவைத்து தம்பியாரோ உன்னை
அக்கரைதனில்வைத்து இக்கரைவருகையில் தம்பியாரே
காத்திருந்தெனைக் கானிலோநாய் கொண்டேகிடதம்பியாரோ அது
கடியாமுன்னேதுடர்ந்துகுடியானோன்காத்திட்டான்தம்பியாரோ
உழவர்மனையில்வெகுபிரியமாய்வளர்நதிட்டேன் தம்பியாரோ உன்னை
உரிமையாகவேசேர்க்ககிருபைசெய்தார் அத்தன் தம்பியாரோ
அழுதலறியே நம்தைய ரெங்குசென்றாரோ தம்பியாரோ பெற்ற
அன்னைமறுப்பிருந்து என்ன துயரானதோ தம்பியாரோ
உயிருக்குதவியான அருமைத் துணையேஎந்தன் தம்பியாரோ என்னை
ஒன்றுகொடுபோகவே தானுபலதிகன்றாய் தம்பியாரோ
தைரியமதுகுன்றி தந்தையெங்கு சென்றாரோ தம்பியாரோ இருள்
தனிவனந்தனிலெங்கு தவித்து நின்றாரோ என் தம்பியாரோ
இறந்தமனிதர்கள் எழுந்து வந்தாற்போல தம்பியாரோ உன்னை
எனது கண்ணாற்கண்டு மனதுகவலை தீர்ந்தேன் தம்பியாரோ
நிறைந்தபுவியனைத்தும் நிறைந்தகடவுள் தானே தம்பியாரோ கிருபை
செய்துஒன்றாய்சேர்க்க வையமீதுதவினார். தம்பியாரோ.

ஒவ்விஸன் தன்தமையனுக்குச்சொல் விருத்தம்.

தந்தையைப்பிரிந்துநாமுந் தயங்கியேதனிமையானோம்
எந்தையெம்பரனுருன்னை எனதிடமாகச்சேர்த்தார்
சிந்தையில் துயரம்வேண்டாம் யேசுநாதருமேநம்மை
தந்தைதாயுடனேசேர்ப்பார் தமையனேரஞ்சவேண்டாம்.

ஒப்பிலாமதி துயரப்படுகிற கொச்சகம்.

உன்னியிநதபாலகர்க ளூர்முறைமைபேசுகிறார்
என்னுடையபிள்ளைகள்போ லிருக்குதடையாளமெலலாம்

பின்னும்வனத்தில்மிருகம் பிடித்தென்றபேசினதால்
இன்னமனம்பேதலிப்பா யிருக்குதென்னசெய்வேனையோ.

ஒப்பிலாமதி ஔவையாருக்குச் சொல் விருத்தம்,

நன்னயத்துடனேநாவில் நவிலுதற்குறையில்லாமல்
என்னைஇந்நாளுவகாத்திட்டிருந்த அம்மணியேபோற்றி
பொன்னகரோமைநாடி போரவரிவர்களாகும்
அன்னவருடனேனக அருளதுபுரியும்அம்மா.

ஔவையார் ஒப்பிலாமதிக்குச்சொல் விருத்தம்.

காணரிதானஎந்தன் கண்மணியானசோதி
வானுலானேநல்ல மதியுள்ளமகளேநீதான்
பூணுதுபடைக்குமுன்னே போகநீவேண்டாம்மா
நாணமாய்படைக்குப்பின்னே நடந்துபோய்வருகுவாயே.

ஒப்பிலாமதி ரோமைக்குப்போகிற திபதை கண்ணிகள்.

மதிமுகங்கறுமைகூந்தலவிழகூந்தலவிழ, வாயிதவெளுப்பமாயவ, வுந்தளர வடிவுந்தளர, கொதிகொண்டு மனதில் வியாகுலமிகுந்து, கோட்டூரவுடன் துக்கங்காட்டியேதான், கரித்துயிலுடுத்துடல் பொதிந்தசென்னி, கவிழ்ந்துகொண்டுடல் மிகக்கலங்கியேதான் அருந்துயர் மிகுந்துமா தனிமையாக, அழுதிருகண்ணில்நீராராயோட, விளம்புநன்னகரந்த ரோமைக்கேக, வேனுமென் றெழிமையாய் மிகுத்தசேனை, தளங்களுக் கரசன் முன்முதலி கேழ்க்க, தனிமையொப்பிலாமதி தான் வந்தனளே, தான்வந்தனளே.

ஒப்பிலாமதி சேவகருக்குச் சொல் விருத்தம்.

மாற்றலர்தம்மைவென்று வலியவெதிரைகவர்ந்து
கீர்த்திபெற்றவரோயும்மை கேட்டிடுமொழியேதென்றால்
ஆற்றலாயும்மையாளும் அரசனைக்காணவந்தேன்
தோற்றமாயிதனையுங்கள் துரையிடஞ்சொல்லுவீரோ.

கப்பிலன் இஸ்தாக்கியாருக்கு சொல் விருத்தம்.

நீடியதிறையான்மன்ன விறைகொலுசமுகந்தன்னில்
நாடியபுகழின்மிக்க நல்லமகளிரியேபோற்றி



தேடியும்மிடத்திலேநோர் சேதிகள்பேசவேண்டி
வாடியமுகத்திநேடு வந்தனளொருமாதையா.

இஸ்தாக்கியார் சேவுகர்களுக்குச்சொல் விருத்தம்.

விந்தையாம்புதியசேதி விளக்கமாய்சொல்லவந்த
தொந்தபுத்தத்துக்கஞ்சா சூரசேவுகரேகேளீர்
எந்தனுரைந்தமாது யாரெனவறியவேண்டும்
வந்திடுமாதையெந்தன் வாசல்முன்வரச்செய்வாயே.

சேவுகர் ஒப்பிலாமதிக்குச்சொல் விருத்தம்.

மெத்தவுந்துயரத்தோடு வேறொருதுணையில்லாமல்
இத்தனைதூரநீதா னெங்கிருந்தெங்கேபோறாய்
எத்திசையெங்கும்போற்றும் இறையவனமைச்சனுன்னை
நித்தமாய்காணவேண்டிச் சீக்கிரம்வரச்சொன்னாரே.

இஸ்தாக்கியார் ஒப்பிலாமதிக்குச்சொல் விருத்தம்.

அன்னமின்னடையிளனே அரிவையேயிந்நாள்மட்டும்
உன்னைநானிந்ததில்லை ஓதுமிவ்வுலகிலேதான்
என்னைநீயறிந்ததுண்டோ இப்பொழுதென்னைத்தேடி
உன்னியேவந்தச்சேதி ஒளித்திடாதுரைசெய்வாயே.

ஒப்பிலாமதி சொல் விருத்தம்.

தாவுமாவரிசைநீடச் சதுரங்கச்சேனைசூழ
தேவரீர்ரோமைக்கேகுஞ் சேதிநான்கேட்டுவந்தேன்
காவலாயெனையுரோமை கரைமட்டாய்கொடுபோய்விட்டால்
ஆவைமாமரியாள்பால னருளதுசெய்குவாரோ.

இஸ்தாக்கியார் சொல் தரு இராகம் வராளி அடதாளசாப்பு.

மின்னல்மொழி யன்னநடை பொன்னிதழின் வன்னமயிலாளே இங்கு
வருதிவந்தகாரணத்தை காரிழையே நீயுரைசெய்வாயே

ஒப்பிலாமதி சொல் மேற்படி தரு.

உரையுமெனவேபகர்ந்த உற்றகுல மன்னவனே கேளீர் எந்தன்
ஊரொனுமா ரோமைநகர் ஒன்டொடியாள் போவதறிவீரோ.

இஸ்தாக்கியார் சொல் மேற்படி தரு.

அறிவதென்னமடமயிலே அரிவையரே சொற்குழல்மானே அங்கே
அறிந்தவர்களாருனக்கு ஆயிழையே தேன்மொழியாளே சொல்.

ஒப்பிலாமதிசொல் மேற்படி தரு.

சொல்லுமெனவே யுரைத்த சுகிர்தகுணமதிவலனேகேளாய் அந்த
துகைவகைகளானதெல்லாம் துணிந்துரைக்கமனம் பதறுதையோ.

இஸ்தாக்கியார் சொல் மேற்படி தரு.

பதறிமனம்விதறியேதான் பாவைபரே தேம்பியழுகாதே உனது
பழயதிலெவ்வளமதனை பரிவுடனேநீ பகருவாயே.

ஒப்பிலாமதி சொல் ஷை தரு.

பகருவெனொன் வளமையதை பங்கயஞ்சேரிங்கித மன்னவனே
ரோமை, பதிதனையாளரசனிட பரிவுள்ளமந்திரி தலைவராகும்.

இஸ்தாக்கியார் சொல் ஷை தரு.

ஆகுமெனவேயுரைத்த பாகு மொழிசேர் தோகை மயிலாளேநீயும்
அருமையுடன் வாழ்ந்திருந்து வறுமையுற்ற காரணஞ்சொல்மாதே.

ஒப்பிலாமதி சொல் ஷை தரு.

வறுமையுடன் மறுநகர்க்கு வருவனகளானதைநீர்கேளீர் எங்கள்
வல்லபரன்சோதனையால் இல்லாமிழந்து வந்தோமையா.

இஸ்தாக்கியார் சொல் ஷை தரு.

இல்லாமிழந்துவந்த வல்லமைசேர் மெல்லியரே கேளாய் உனக்கு
ஈன்றபிள்ளை பாலருண்டோ எந்நிலையே தேர்ந்துரை செய்வாயே

ஒப்பிலாமதி சொல் ஷை தரு.

தேர்ந்துரையென்றேபகர்ந்த சாந்தகுணம்சேர்ந்தமலர்ப்புயனே இந்த
தேசமதில் நேசயிரு பாலரையு மீன்றெடுத்தேனையா.

இஸ்தாக்கியார் சொல் ஷை தரு.

பாலருடன் கோலமண வாளனு மெங்கே பிரிந்துபோனான் அரிய
பண்புசெறிதண்குயிலே இன்புவியிலேயுரைசெய்வாயே.

ஒப்பிலாமதி சொல் ஷை தரு.

இன்புவியிலென்பரனார் சோதனையாலேயிவரும்போது கடலிற்
சென்றதின்பின் மன்னுலகில் என்தலைவர் சேயரைபிரிந்தேனே

இஸ்தாக்கியார் சொல் ஷை தரு.

சேயருடன்நேயமுள்ள செய்யமணஞ்சூட்டியநாயகனும் திரைகடல்
சென்றதின்பின்கரையில்வந்து அன்றுபிரிந்தது வகைசொல்மாதே



ஒப்பிலாமதி சொல் ஷை தரு.

வகைபகருமென உரைத்த துரைபெருநற் சேகரனேகேளீர் அந்த
வாரிதியில் கரைசேர்ந்தோன் மதித்தெனையே துரத்திவிட்டானையா.

இஸ்தாக்கியார் சொல் ஷை தரு.

துரத்தினனென்றேபகர்ந்த கருத்துடைய மங்கையரே கேளாய் கலத்
தோன், கரைநகரையில் வந்து நேருடனே கூலிதரவிலையோ.

ஒப்பிலாமதி சொல் தரு.

கூலிகொடாததாலே அவன்சோலிசெய்து என்தலைவர்தன்னைவழிவாய்
கோட்டிசெய்து பொட்டியுடன் நாட்டிமையாய் தான்மறித்தானையா

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

நெறியுடனீதிவார்த்தை நெஞ்சினிலுணர்ந்தசந்ய
மறையினில்வளமைசொல்லா வழுத்தினீரோமைக்கேக
உறவினர்முறைகளாரோ உனக்கங்கே கருமமென்ன
அரியநானுமறியபெரும் அடைவுடனுரைசெய்வாயே.

ஒப்பிலாமதி சொல் விருத்தம்.

இப்புவிதனிலேரோமை இறையவன்திரைமான்பக்கல்
செப்பரும்புகழின்மிக்கச் சிறந்தமாமதியமைச்சன்
விற்பனன்தனதுதேவி மெல்லியாளெந்தன்பேரோ
ஒப்பிலாமதியென்றேதா னோதுவர்குலகோர்தானே.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

இருசெவிகுளிரவோரா எனக்குன்வளமையெல்லாம்
ஒருசொல்வாசகமாய்நீயுரைக்கக்கேட்டுணர்ந்துகொண்டேன்
மருமலர்குயிலேஞான வஞ்சியந்தஸகமேஉன்னை
கருதியெவதுவைபூண்ட கணவன்பேர்கழறுவாயே.

ஒப்பிலாமதிசொல் விருத்தம்.

திரைகடல்வளர்ந்திருசூழ்ந்த செகமெல்லாங்கீர்த்திகொண்ட
துரைசிகாமணியேயாதுக தோற்றமாய்சொல்லக்கேளீர்
நிறைபலபுகழிருந்து விகழ்தருமனைமெசெய்த
இறையவன்பெயரிஸ்தாக்கி யென்றுசொல்வார்களையா.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

தலைவன்பேர்சொல்லிவந்த தையலேஆதிநாதன்
தொலைவின்றிமங்குச்செய்த சோதனைதுலைந்ததோதான்

நிலையிலுன் கணவனென்றும் நீயெந்தன்மனைவியென்றும்
அலைவின்றுகண்டுகொண்டேன் அரிவையென்மனைவிநீயே.

இஸ்தாக்கியார் சொல் தரு இராகம் ஏசல்.

ஆதியந்தமில்லாத அம்பரபொருளே அன்பர்காதா அடியனுக்
கற்புதமாகவே கற்புறுந்தேவியை
ஒப்புவித்த காரணவுன் கற்பினையோயிது சுவாமி.

தேடரும்புகழ் நிறைந்த நாடில்லா செல்வத்துடனிருந்த நான்
இத்தரையில் மனநொந்து மெலிந்திட
உந்தன்செயலினால் வந்தசுகமிதோ சுவாமி

நாட்டையயாய் மாகதரை தாண்டியபின்மனைவியுமைந்தரையும்விட்டு
நானேபிரிந்திடலானேனிப்போது நீ
தானேயருள்செய்தீர் வானோர்தொழுமெம்பிரானே

கூட்டமுடனேயிருந்த குழந்தைகளை படர்வனத்திற்பிரிந்து எந்தன்
கோதைமனமிக வாதைகளாகிட
ஆதலாலிலென்ன பாதகஞ்செய்தேனோ ஸ்வாமி.

ஒப்பிலாமதி சொல் விருத்தம்.

பெருத்தபுகழ்கீர்த்திகொண்ட மன்னன்வாசல
பிறதானவமைச்சனென்று பேர்பெற்றிருக்கும்
திருத்தமுள்ளநாயகனே கேளீரென்னைத்
திரைகடலினூழிவோட்டி மறுப்பிலேதான்
இருத்திவைத்துஇல்லேழ்மைக்காரர்போலே
யான்புரிந்தகொடும்பாவத்தா லெங்கேபோனீர்
வருத்தமுடனாமீன்று வளர்த்தநேச
மைந்தரிருபாலரெங்கே வசனிப்பீரே.

இஸ்தாக்கியார் சொல் வண்ணத்தரு.

காதர்களுக்கரசே, மணமேவுமாமலரே, மயிலே, கறுங்குயிலே
இளங்கிளியே, வளம்புகழ் மாதே நீகேளாய்.

நாவையேபிரிந்தே, இருபாலரையுங் கொணர்ந்தே, யானும்
போரபோதிலோராறு வந்திட, மாதேநம்மிட, மைந்தரிருவரில்,
மூத்தவன் தன்னைவைத்து, இளையோன் தன்னையெடுக்க, யானும் போன
அப்பொழுதிருந்திடவே, பாதிபாற்றில் வருமிந்நேரம்



கானகமிருந்தே கடுவாயுமோ, நாயும்நம்ம காளையாகிய, பாலர்தங்
களை கவ்வியே எடுத் தேகினபோதினில்

நானுமனஞ்சலித்து, வரும்வேளையானதிலே, நர கானதிலுள கூனி
வந்ததனை, காப்பியே உயிர்போக்க வருகையில்

ஆதிபராபரனர், வானிலாந்த வானதுவும், அவரனுப்பினர் மனத்
திருத்தியாகவே, அரிவையே, யாரொரு செட்டிவளவினில்.

போயவரேவல்செய்து வருவேளையானதிலே, எங்கள் பிரபலன்
மறுமொழியனுப்பியே, பிரியமாயழைத்தா ரெந்தன் மாதே

தேவமரியனையுந், சேசுநாதரானவரும், எந்தன் தேவியே உன்னை
தான் விடுத்தவர், நேசமைந்தரை தான் தருவர்காண்

பாதிஇரவுதனில், கனஆவை உந்தியில், வந்த பாலனாகிய சேசு
நாதரின் பாதமேதுதித் தேற்றுவோ மாதே ஏகபரனமக்குதவிசெய்கு
வாரே.

ஒப்பிலாமதிசொல் கொச்சகம்.

மாதேயெனவுரைத்த வல்லயெந்தன்காதலனே
ஏதோவனமிருகம் யெந்தனிருபாலகரை
இதுசெய்ததாமெனவோ இன்றுமல்விட்டதுவோ
ஈதுமொழியானதெல்லாம் எனக்குரைப்பீரென்தலைவா.

இஸ்தாக்கியார் சொல் கொச்சகம்.

இன்புறுமென்தேவியரே என்னசெய்வேனருவனத்தில்
கம்புதலாய்பாலகரை நான்கூட்டிப்போம்பொழுது
வெம்புறவேஆற்றருகில் வெங்கடுவாயோநாயும்
வம்புடனேபாலகரை வந்தெடுத்துப்போனதுவே.

ஒப்பிலாமதிசொல் தாழிசை.

ஐயையொமுன்செய்தவினையிதோஎனது அருமையானஇருபாலரை
அரியகானில்வளர் மிருகமானதுஅடங்கெடுத்திடவுந்தியோ
இயலதாய்சுமந்துயீன்றெடுத்தவயிர்எரியுதேமனதுவுருகுதே

என்னசெய்குவேனென்பாலரையிழந்து எண்ணமுற்றிருந்த ஞாய
மோ, காயமாக செல்வர்தனை கடித்து வாயிற்கவ்வியே எடுத்துபோ
கையில், கலங்கியே மனது ஏங்கியே நடுங்கி கானில்நின்று அபரான
தோ, தேவமாமரிதன் பாலனாகவந்த சேசுநாத சருவேசனே ஜெகத்
தில்யான்பயின்ற செல்வரென்முனவசித்தம்வைத்தருளுங் கர்த்தனே

### இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

வான்முகிற்குழலுடைய வெனதுசேசமனைவியரே தேனுமலை யடவிவிழ்ந்த—சோறுசென்பவன்தனையே மீன்வயிற்றில் சுகமுற வே காத்தளித்த சோதிநாதன்—தானிரங்கி நமதுமைந்தர்தனையுஞ் சேர்ப்பார் தையலே உன்மனம்வாடி சலிக்கவேண்டாம்—ஆனதினு ன்மனதை தேற்றிகொள்வாய் அழுதுவிம்மி புனல்சொரிய அடை வோமரிதே—

### ஒப்பிலாமதி சொல் விருத்தம்.

அடுத்தவருக்குதவிசெய்து குறைவில்லாமல் அநாசரித்துளனே காத்த ஒளவைவீட்டில்—படுத்து விழித்துமிலுமுன்னே இருவர்கூடி பழக்கமிட்டார் வெகுநேரம் பரிவாய் காண்போய்—ஒடுக்கமுடன் அருகிருந்து கேட்டேன் தங்கள் ஊர்வளமைபானதெல்லா முரைத்தா ரன்று—இடுக்கிவளர்த்திடு நம்துமைந்தர்போலே இருக்குதவையா ளிதெல்லாம் விசாவர்கோவே—

### இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

தேடரிப்பிரங்காட்டு மதிகவிரசேனதிரேதநு மைந்தசெறிப்பா யெந்தன்—கூடவந்து இருநதனமருந்திப்போனக் குலமகவு சிங்கள ல்லோ கூறக்கேளீர்—ஏடுமுங்கட் குலமுமன்னைத் தந்தைபெரும் நயத்துடனே கெட்டதிபசுக்கிப்போது—நீடுமெந்தன் சமுகமுன் னே யொளித்திடாமல் நீங்களுமகள் வளமைதன்னை விகழ்த்துவீரே,

### ஒவலினன் சொல் விருத்தம்.

விகழ்த்துவிரோணவேகெட்ட விருபனேனின்றுவ்போற்றி
பகைத்தமாற்றலரைவெல்லும் பரிவுள்ள துரையேயாங்கள்
வகையுடனங்கள்சேதி வளமைகளானதெல்லாம்
தகையுடனுந்தனுக்கு சொல்லுவோமதிகதிடோ,

### கப்பிலன் சொல் விருத்தம்.

அகதமிகுசோனமைநகர்தன்னையாளும் அரசனருமிருக்கு மதிய மைச்சனெனதன்—தந்தையின்பேரிஸ்தாக்கி எம்மையீன்ற தாயின்பே ரொப்பில்லாமதியென்பேரோ—கந்தரஞ்சே கப்பிலனென் தம்பிபே ருஞ் சொல்லுவோ சொவ்ஷிலைன் அலகிலேதான்—இத்தரையி லாதிர தன் செப்பொனுயர் எங்களது செல்வமெல்லாம் மிழந்ததாலே



### இதுவுமது விருத்தம்.

இழந்தவுடன் அந்நகரைக்கடந்து யாங்களிடைவது மநகர்த னக்குவருகும்போது—செழிந்தகடுங்கானகத்திலாறொன்றங்கேசேர்ந்து வழிமதித்ததினால் திகைத்துவாடி—வளநதெரியாதிருக் கவங்கோர்ப டகிலேறிவந்தபின்பு கூலிதரவழியில்லாமல்—உளங்கலங்கி என்தா யை மரக்கலத்தோன் வுளாத்தபடி மறுப்பில்வைத்து ஒழிந்துவந் தோம்,

### இதுவுமது தரு கன்னிகள் இராகம் ஆனந்தபைரவி ரூபகதாளம்.

ஐயருடாரங்கள்சென்று, அருவனங்கடந்துபோனோம்
வையகந்தனிலோராறு, வந்துடன் மதித்துட மதித்துகொள்ள
இக்கரைதனில்அநத்தோரை, இருத்திவைத்தினையோன்தன்னை
அக்கரைகொடுபோய்வைத்து, ஆற்றினில்வருகும்போது
வேகமாய்கவொயோசாய், வெந்தினத்துடனேவந்து
தாகமாயெடுத்துக்கொண்டு, தருவிறைவனத்திற்செல்ல
இருண்டகானகத்தில்வாழும், இடையருமுளவர்தாமும்
விரண்டுபோய்மிருகந்தன்னை, விரட்டியேபதித்துக்கொண்டார்
மனைதனிற்கொடுபோய் தாங்கள், மக்கள்போலேவளர்த்தார்
தினமுமெங்களைகாப்பாற்றி, சிறப்புடன் வளர்த்தாரையா
அந்தமாதியுமில்லாத, ஆண்டவனருளால்பெற்ற
தந்தையும் தாயெங்கேயென்று, சற்றுமாமறியோமையா
அந்நிறத்துடனே வெம்போ, ரடைந்துவென்றிடுஞ்சேனாதி
பதியெனுமரசேயெங்கள், பழவளமை யிதுதானையா.

### இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

காட்டிலுள்ளவனமிருகம் பெருகுமாற்றங்
கரையில்வந்து பிடித்தென்றகதைகள்யாவும்
காட்டமுடன்கேட்டுமனஞ் சலித்திடாத
கன்மைசெய்யபெரும்பாவி நானேயானேன்
ரூட்டமுறுமகதகன்கன் திறக்கவைத்தச்
சோதியரன்கிருபையினால் தயாமீங்கி
வாட்டமில்லாதுவந்த வரிமையான
மைந்தர்களை துயர்நீற வருகுவீரே,

### புலம்பல் ஒப்பிலாமதி சொல் தரு இராகம் [illegible]

என்னுயிரே என்மகனே என்னருமை [illegible]
இக்கலகி லெங்களைக [illegible]

(பிள்ளைகள்)—என்னெடுத்த மாதாவே எங்களுயிராதாவே
தோள்றற்கண் ணீர்மறந்து துயரமிகவாகிரோ
(ஒப்)—துயர்வருத்தும் மரக்கயன்தான் துன்பமதனால் தவித்து
பயமுறவே இருந்துவந்த பாதகினுன் பாலகரே
(பிள்)—பாதகமா யும்மைவிட்டு பரதேசம்போம்பொழுது
இதுறமோசாய் கடுவரிய் தின்னுயிரையாருமம்மா
(ஒப்)—தின்னுமிருகம் வாய்க்குசேதமுறவோ வளர்த்தேன்
கண்ணின்மணியே காட்டில்கதறியழாதிருக்கிர்களோ
(பிள்)—கதறிபழும்போதிலம்மா கானில்வாழ்கோனுருழவர்
பதறியெழுக்தோடிவந்து பதித்தெமைகாப்பாற்றினுரே
(ஒப்)—காப்பாற்றுமுளவர்களு கானில்வாழ்கோனர்களுந்தான்
மூப்பனுர் கிருபைபெற்று முழுதுநதப்பித்திர்களப்பா
(பிள்)—முதலாதிபரன்செயலால் முழுதுநம்துயரகன்று
இதமாகவைத்தனரோ இனியழுகாதேதாயே
(ஒப்)—அழுதுதுயர் தீராதே ஐயோமனம்தேறுதே
பழுதனுகாதுநதன் தந்தை பாதகத்தைபென்னசொல்வேன்
(பிள்)—பாதகமா ஏகாதிபரன் வகுத்தபாக்கியமே
தார்தலத்திலிதைனினைந்தே தாயேநீகலங்காதே
(ஒப்)—கலங்கியென்னுலாவதென்ன கண்மணியேமைந்தர்களே
தலந்தனிலே நமையீன்ற தற்பரன்தாளேபணிவோம்
(பிள்)—தற்பரன்தாளேபணிவோம் தாயாரேஉந்தனிரு
பொற்பதத்துக்கேசரணம் புலம்பவேண்டாமென்தாயே.

ஒப்பிலாமதி சொல் விருத்தம்.

இருந் தாசாருகின்ற இறையவன் திறையாகிட மன்னன்
தருஞ்சுக பாக்கியங்கள் தனைக்கொண்டுதரணிமீது
வருநதவத்தால் பிறந்த மைந்தருந் தலைவர்தம்மை
பொருநதவொன்றுகச்சேர்த்தப் புகலரும் பொருளேபோற்றி.

கப்பிஸன் சொல் கொச்சகம்.

பொருளாதி கர்த்தருடை பொற்பதத்தை போற்றிசெயும்
திருவேந்தர் தன்குலத்திற் சிறந்த கன்னிமாமரியே
ஒருகாரியங்கள் குறை வுலநதுன்பஞ் சாராமல்
கருளாதி ஏகபரன் அடியிணையே போற்றிசெய்வோம்.

ஒப்பிலாமதி சொல் தரு புலம்பல் அடதாளம்.

பாமகத்திய ஞானவேத நீதாவேத — நீதா
பரஞ்சுடரெனவந்த சேகநாதா — சேகநாதா



மரிசுதனே யெந்தன் மைந்தர்தன்னை — மைந்தர்தன்னை
மன்னுலகினில் விட்டு வறிமையானேன் — வறுமையானேன்
மறுப்பினி லெனைவைத்து மைந்தருடனே — மைந்தருடனே
மகிசே ரெனதலைவனுர் வருகுநேரம் — வருகுநேரம்
விருப்பமாற்றருகினில்மைந்தர்களைத்தான் — மைந்தர்களைத்தான்
வெங்கடுவால் வந்து விரைந்து தூத்தி — விரைந்து தூத்தி
எடுத்தேகிபோரபோதெனதுசெல்வரோ — எனதுசெல்வரோ
எத்துயராகவே ஏங்கினுரோ — ஏங்கினுரோ
தடுக்கவேறுதவியில்லாமற்போனு — வில்லாமற்போனுல்
தாரணியிற் புதல்வரைதான் காண்பேனுதான் — காண்வேனு
மரக்கயன்மரிப்பைவிட்டேகியானும் — ஏகியானும்
மறுநகர்தனில்வந்து மனதுநொந்து — மனதுநொந்து
இறங்கமுற்றவ்வையா ரிடத்திற்சென்று — இடத்திற்சென்று
எளியவளாகினான் இருந்துவாடி — இருந்துவாடி
மலங்கியவடியவட் குதவிசெய்ய — உதவிசெய்ய
மாசிலானே உன்னை வணங்கினேனே — வணங்கினேனே

ஒப்பிலாமதி சொல் இன்னிசை.

இடையர்குடிலிற்பிறந்த ஏகவேபென்கோவே
தடவரையிலெனைபிரித்த தலைவிருபாலரையும்
இடமுனேஎந்தனுக்கு தெரிசினைசெய்துவைத்திர்
படிமிசையிலேஉமதுபதமதுக்கே தோத்திரமே.

இஸ்தாக்கியார்சொல் விருத்தம்.

இன்புடனேவல்கேட்கு மெனதுசேவுகரேகளிர்
தென்புளவிடையரோடுஞ் சிறந்திடுங்குடியாரோடும்
அன்புடனுதவிசெய்த ஒளவையார்தனையுங்கூட்டி
நம்பெருஞ்சமுகந்தன்னில் நாடியேஅழைத்துவாரீர்.

கட்டியன் சொல் விருத்தம்.

நாடியேஅழைத்திடென்ற நரபதிஅமைச்சேபோற்றி
தேடியேஒளவையாருஞ் சிறந்தவிடையரோடு
நீடியவினைசெய்யு சேசமாந்குடியாரோடு
கூடியசகலபேருங் கூட்டமாய்வந்தாரையா.

ஔவையார் இடையர்கள் குடியானோர்கள் தோற்றம் விருத்தம்.

தஞ்சமென்ற ஒப்பிலாமதியைசேர்த்து
தயவுடன்வைத்தாதரித்த ஔவையாரும்
மைந்தனாயுவிலங்கினங்களெடுத்தபோது
மாசிரியத்துடனெடுத்து வளர்த்துவைத்த
இன்சொல்பெருமுளவரோடு இடையர்தானும்
இனிதானகருணீகர் மணியக்காரர்
செஞ்சொலுயரிஸ்தாக்கி தனதுமுன்பாய்
சிறப்புடனேயெல்லோருஞ் சேர்ந்திட்டாரே.

ஔவையார் சொல் விருத்தம்.

மாதவத்தோனேரோமை மன்னவனமைச்சேபோற்றி
ஏதமற்றிடவேநாங்கள் யாவருமொன்றாய்க்கூடி
சேதமில்லாமல்நாங்கள் சிறந்திடுஞ்சமுகந்தன்னில்
ஆதரவாகவும்மை அஞ்சலென்றடுத்தோமையா.

இஸ்தாக்கியார் சொல் தரு இராகம் கருட்டி ரூபகதாளம்.

அரியவ தருமகுணமாகி வளரும் எனக்
காதரவுசெய்த ஔவையாரே நீவாரும்
உரியமகனைப்போலெந்தன் மனைவிதனக்கு நீயும்
உதவிசெய்த வகையறிந்தே னுற்றதாயாரே
கருத்துடனெனதுதேவி தவித்துவருந்த நீயுங்
கண்டு ஆதரிக்காவிட்டால் காண்பதேதம்மா
பெருத்தநல்லு நகருனக்கு வரிசையாகவே என்னை
பெற்றதாயே மானியமுனக்கு தந்தேனே
எனதுமுதலருமைமகன் நதியினருகில்
மேங்கிட்டயோனையெடுத்து யேகும்வேளையில்
சினமுற்றிய மிருகவதை செய்திடாமலே எந்தன்
சேயனை காப்பாற்றிவைத்த ஆயரே வாரும்
காவினிலோநாய் கொண்டேக கண்டெடுத்து நீர்வைத்து
காப்பாற்றிடாமற் போனாற் காண்பதேதையா
ஆவலுறுமென் பிறவியானவர்களே யானும்
அன்புடனேயுங்களுக்கு சம்பளம்வைத்தேன்
வரிசைசெரி இத்தேசியா தேசமதிலே வாழும்
மாசிரியமான தமையர்களே வாரும்
தருமநெறியோடெனது பிறப்புதல்வனை வைத்து
தற்காத்து ரட்சித்த சகாயரே வாரும்



உந்தன்மன தன்புடனே இந்தநகரில் நானும்
உள்ளகட்டமை வரிகள் தள்ளினேன் நானும்
எந்தவிதமாக பயிர்செய்தபோதிலும் நீங்கள்
ஏக்கையுடனே இருப்பீர் என்றமையரே
காவினிற் கவ்வியெடுத்தேகும்வேளையில் நீங்கள்
கண்டுபிடிப்பாமற் போனால் காண்பதேதையா
நாவினுலுமக்குச்சொன்ன நல்வரிசைகள் தன்னை
நலமுடன் வைத்தேயிருங்கள் நண்புடையோரே

ஔவையார் இஸ்தாக்கியாருக்குச் சொல் விருத்தம்.

மக்களுமனைவியோடு மகாராஜராகவேநீரும்
மிக்கசம்பத்துபெற்று மென்மேலும்வாழ்ந்திருப்பீர்
துக்கமானதுவொழிந்து ஸ்வாமியின்கிருபையாலே
திக்கெலாமதிக்கநல்ல சிரஞ்சீவியாகவாழ்வீர்.

இடையர் குடியானவர் இஸ்தாக்கியாருக்குச் சொல் விருத்தம்.

எந்தநாளுந்தழைத்து யீசனருளினாலே
மைந்தருமனைவியோடு மகிட்சியாய்வாழ்ந்திருப்பீர்
உந்தனுக்கினிமேலையா ஒருகுறைவுகளுமில்லை
சிந்தைசந்தோஷமாகவும் சிரஞ்சீவியாய்வாழ்வீர்.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

வாருமெந்தன்மனைவியே யான்சொல்லக்கேளாய்
வல்லபரன்கிருபையினால் மைந்தரோடும்
தேறுதலாய்வொன்றாகச் சேர்ந்தோமிப்போ
சிந்தையதுநீகலங்கித் தியங்கவேண்டாம்
பேர்புகழும்ரோமைநகர்க் கேகவேண்டும்
பிள்ளைகளுநாமுமொன்றாய் பிரியமாக
சீருடனேநடப்பிரோந்தன் தேவியேநீ
தேவபராபரனார் செயலிதாமே.

பொது விருத்தம்.

தாமிருந்தஇஸ்தாக்கி திரைகொடாதத்
திரியவர்மேல்படையெடுத்துச் சமர்கள்செய்து
வாமிருந்தமனைவி மைந்தருடனேகூடி
வரும்பொழுதுமன்னவனு மிதையறிந்தேபோன்
சாமிருந்துக்குலவியால் மெலிந்துவாடி
துடிதுடித்துமலைகளைமேற் சோர்வதாகி

அரமிருந்தவன்மனதில் தனக்குத்தானே
அலம்புவானஅறிவுகுன்றிப் புலம்புவானே.

இராசன் சொல் தாழிசை.

அரகராசிவனே அமரர்நாயகனே அம்பிகைபங்குடையவனேஅரனே
அதிசங்கரனே சோதிமுக்கண்ணனே அரவுடனாமணிந்தவனே
திரிபுரமெரித்த கயிலை வாசனே [illegible] தவனே
சீதரன் அயனுக் [illegible] மதியணிந்தவனே
தாணிமி லெனது [illegible] ஆதி
சங்கரா [illegible] அரனடனே
பரவியவி [illegible] பற்றியேயமர் நடைக்கிறதேத்
பூரவென் [illegible] நத்திடும் பரனே

போது விருத்தம்.

ஆதி [illegible] மின்றாகியென்போன்
அவர் [illegible] விருப்பு [illegible] ட்டி
மேதினியில் [illegible]
மென்மையுடன்அழைத்துவரும் வேளைதன்னில்
நீதிநெறிதவறு இறையானமன்னன்
[illegible] மாய்மடிந்தா னிவனென்று
யாதினாமையாரியே தோர் மந்திரிமார்கள்
அதிமயக்கியேபுலம்பி வருகின்றாரே.

(உ. ம்) மந்திரிசொல் தாழிசை.

ஆழிசூழலகமானதிலெனது அருமையான இறையாதிபன்
அதிகநேர்மையுடன் வளருமோராமைநகர் ஆண்டிலமுடைய நீதியே.
வேழ்வி நாயகனை போலிருந்தவரு மெலுவல் கடையலானதே,
மெய்மயங்கிமனஞ்சோருதே சிவனே வேதியனெழுந்திராகுமோ.
காழியொன்றிலழிவானதே ஞானவிது கானறியேனிதுநாளுமே
காதனேபுலகிலேது செய்வெனினிநாமமேற்றுயிலும்காரணை
வாழியெனரசர்குழுமே போது விம்மன்னவனினிவருவதோ
மான்மழுதரித்த சூலபாணியேவுன் வனமமானகொடு மாயமைதயோ.

(உ. ம்) மந்திரி புலம்பல் இராகம் பரசு தாளம் ஆதி.

சங்கரனேசண்முகனே சாம்போசிவநாயகனே
பொங்கரவம்பூண்டோனே புலியுடைதரித்தோனே
மங்கையொரசெஞ்சடையில் வைத்திருந்தமறைமுதனே
[illegible] மோ [illegible] தையோ.



இன்றரசன்தானிறந்ததேது விதமோவறியேன்
மன்புலகில்இனியாரும் மன்னவனைகாண்பதெப்போ
சேனைமன்னர்சூழ்ந்துனிற்க சிங்காசனமீதிலும்மை
தானினிமேற்காணபதெப்போ தயங்கிமனம்வாடுதையோ
வெகுசிறப்பும் பலபவுசும் விதவிதமாய்தானளித்த
மகிழ்குணவான மன்னவனை மறுபடியுங்காண்பதெப்போ
மானகவாயாருதற்கு மனாவருலகிலுண்டோ
ஆனசெல்வமெலழித்து ஆதரிப்பாரோசிவனே.

(ந ம்) மந்திரி சொல் தேவாரம்.

ஐயையோயிதுதானென்ன அன்னிதசதியோகானேன்
வையகந்தன்னையாண்ட மன்னவன்மடிந்திட்டாரோ
பொய்யிலாமொழியோனிந்த புண்ணியவரசன்போல
துய்யயிவ்வுலகிலெந்த துரைகளைகாண்பேனையோ.

(ந ம்) மந்திரிசொல் புலம்பல் இ ம் தன்சாரி அடதாளம் சாப்பு.

என்னசெய்வேன் சங்கரனே சங்கரனேயெனது
இறைவனிந்த தரைதனிலே மரணமென்றதாச்சரியம்
கன்னல்மதன்தனையனைய தனையனைய அரசன்
காலமுடிவானதென்ன கோலமோதான்யானறியேன்
ஏவல்பிலிகுனியமோ குனியமோமன்னவன்
ஏங்கியுயிர்நீங்கியின்று தூங்கியதோதூங்கியதோ
கோவில்பவிபூசைதனில் பூசைதனில்யென்னதான்
குறைநடன்னவறிகிலேனே வழிசிமனம்பதறுதையோ
பகைவர்செய்தகொடுவினையோ கொடுவினையோயிதென்ன
பாதகமோ ஆதியேவுன் சோதினையோயேதறியேன்
ஜெகதலத்தில்வந்தனைப்போல் வந்தனைப்போல்வேறொரு
சேனைமன்னரானவரை யானினிமேல்காண்பதெப்போ
பஞ்சிலிட்டதீயதுபோல் தீயதுபோல்மனது
பற்றுதையோ பார்த்தனை வஞ்சித்தமிதோயானறியேன்
வஞ்சகமாய்மாற்றலர்கள் மாற்றலர்கள்செய்து
வைப்பிதுவோ [illegible] யிப்புவியில்யிதுதானோயோ

(ச ம்) மந்திரிசொல் தேவாரம்.

மண்டலந்தன்னிலிந்த மன்னவன்தன்னைபோலும்
இ [illegible] மையுள்ள இரசற்குணமுள்ளோனை

கண்டதேயின்லையில்லை கர்த்தனே கயிலைவாசா
பண்டுசெய்வினையோவெந்தன் பார்த்திபன்மடிந்திட்டாரோ.

(௪ ம்) மந்திரிசொல் புலம்பல் இராகம் வராளி.

என்னகாரணமோ யிது காண்கிலேன்
ஈசனே கயிலாச வல்லாசனே
அந்நேமமரசன் மடிந்திட்டார்
ஐயோயென்ன செய்வேன் இனிவகை செய்யயானறியேன்
தேசமன்னர் திறைதரவேயிருந்
தாசையாயுல காண்டவரசனும்
காசினியிலிறந்த விதமென்ன
காரணமறியேன் யிதுவென்ன மாரணமோதெரியேன்
சந்திரவதனமுள்ள சீலனே
சாதுசற்குண னவல்லாசனே
சுந்தரமிலகுமனு கூலனே
சுத்தனேஅரனே காண்பதெப்போகர்த்தனே பரனே
வானமான திடித்ததுபோலவே
மன்னவனிகச மானிலமீதிலே
தானொருபிணியின்றி மடிந்தது
சங்கரன்செயலோ மறைமுதலைங்கரன்செயலோ
பூதநாயகனே புலித்தோலுடை
போர்த்தசங்கரனே அரனேஐயா
மாதயவுள்ள மன்னனிறந்திட
மாலவன்செயலோ செகதிவடிவேலவன்செயலோ

சேனாபதிசொல் தேவாரம்.

சீதசந்திரனைபோல திருமுகவடிவைக்கண்டால்
போதமன்மதனேயென்று புகலுவர்புவியிலுள்ளோர்
பாதகமென்னதானோ பாரினிலரசனின்று
வேதனையாகமாண்ட விபரமேதறிகிலேனே.

சேனாபதி புலம்பல் இராகம் ஆகிரி ரூபகதாளம்.

மதிமாமணிமுடிசூடிய மன்னன்திறையானும்
மடியமுன்செய்கொடிய வினைப்படியோசங்கரனே
பதியாளுமென்னரசனிந்த பாரில்மடிந்திடவும்
பரனேகெங்காதரனே யென்னபாவமிதுதானோ.



வினையாளர்கள்சதியோ ஆதிவேதன்செய்தவிதியோ
வேந்தன்மடிந்திடவும் யென்னவிபரீதமோசிவனே
எனையாளுமன்னவன்போலவும் எவரையினிகாண்பேன்
ஈசாவுமைநேசா யெந்தனிதயந்துடித்திடுதே
அலர்தாமரைமலர்போலவே அழகுமுகவொளிவும்
அவனிதனிலினிதானொரு அரசன்வருவாரோ
இலைமாமதனிகரோ வேந்தன்றிரையர்ன்மன்னவனுக்கே
ஜெகதலத்தினிலினி மன்னவன்திரும்பவருவாரோ

(௨ ம்) மந்திரி சொல் விருத்தம்.

அதிசயமிதனைபோலும் அவனியிற்கண்டதில்லை
சதியெவர்செய்திட்டாரோ தருமசற்குணத்தின்மிக்க
மதியுளவரசன்மாண்ட வாறதைவகையாய்நேர்ந்து
விதியிதுவென்றுநீங்கள் விபரமாய்விளம்புவீரோ.

(௫ ம்) மந்திரிசொல் விருத்தம்.

எப்படிவிபரமாக யிதிலுளசூட்சந்தன்னை
மெய்புடனுந்தனுக்கு வெளிப்படசொல்வோமையா
ஒப்புளபகைவர்யாரோ உபாயதந்திரத்தினாலே
சற்பினைசெய்தாரென்று ஐயமுற்றிருக்கின்றேனே.

(௪ ம்) மந்திரிசொல் விருத்தம்.

பாரினிலரசனுக்குப் பகைஞர்களாருமில்லை
வாரியுத்திரைகொடாத மன்னவருடனெதிர்த்து
சீரியபிலாகுரன்தான் சென்றவரின்னங்காணோம்
ஆரிந்தக்கபடஞ்செய்வா ரமைச்சனேவுரைசெய்வீரோ.

சேனாபதிசொல் விருத்தம்.

தெரியப்புவியிலுள்ளோர் செப்புவாருலகவாழ்க்கை
நீரின்மேற்குமிழியென்றும் நிலையிலாதழிந்துபோகும்
பாரியவரசன்தானும் பகைஞரால்மரித்தாரென்றால்
மீரியநம்மையல்லால் வேறொவர்செய்வாரையா

(௨ ம்) மந்திரி சொல் விருத்தம்.

மந்திரிமார்கள்சூழ மணிசிங்காதனத்திருந்து
இந்திரவரசன்போல இருந்தமன்னவன்தானின்று
தந்திரமில்லியெவல் சற்பினையாலேமாண்ட
அந்தரவிசேடந்தன்னை அறியவேயுரைசெய்வீரோ.

(கூ ம்) மந்திரி சொல் விருத்தம்.

மரித்திடுமரசனுக்கு மறுபடிமீளவுந்தான்
இருத்தியவுயிர்கொடுக்க எண்ணமுற்றவர்கள்போலுங
கருத்தினில்வந்ததெல்லாங் கழறினுலாவதென்ன
தெரித்திடமயானஞ்சேர்த்துச் செழுந்தணல்மூட்டுவீரே.

பிராமணர்கள் தாதர்கள் ஆண்டிகள் வருகிற

விருத்தம்.

கசஙகதிர்மவுலிபூண்டத் தென்னவன்திரையான்தானும்
இங்கிதவுலகையாண்டு இருந்திடுமந்தநாளில்
பொங்கிபகுலேநோய்கண்டு பொன்னுலகடைந்தாரென்று
சங்கையாய்த்தகனஞ்செய்யத் தாதராண்டிகள்வந்தாரே,

தரு கண்ணிகள் இராகம் கலியாணி ஆதிதாளம்

வேணபதம்பேசி தோணநாமம்பூசி
வேதியராண்டிகளுடன் தாதரும்வந்தாரே
தாணயாடைமரமும் ஆணப்பொதிமுறமும்
தானிதோயெடுத்துக்கொண்டே தாதர்கள்வந்தாரே
தப்பையுடனேமேளம் தாளமுமெக்காளம்
மெய்ப்புடனெடுத்துக்கொண்டு வேதியர்வந்தாரே,
ஒப்புடனேகோடி இப்புவியில்தேடி
நற்புடன்சபையிலிதோ நாடியேவந்தாரே.

பிராமணுள் தாதராண்டிகளுக்குச் சொல் விருத்தம்,

செப்பமாயுலகையாண்ட திரையானெம்பிரதோனுக்கு
இப்புவிதனிலேமிக்கவியினிபதோர்கடன்முடித்தோம்
நற்புடன்தீர்த்தமாடி நம்மிடமனைக்குசெல்வோம்
தப்பறையொன்றில்லாத தாதராண்டிகளேவாரீர்,

(உ ம்) மந்திரி ஆதிரியானுக்கு நிருபம் எழுதுகிற விருத்தம்.

சிறுலவுமகாராஜ ராஜஸ்ரீ செகதுகும் ஜெகமெலாங் கீர்த்திகொண்ட ஜெயவிஜயமாகதாண்ட அதிகயகுணசீல தென்ன + ஆதிரியானவர் திருவடிகளுக் கதிக சாஷ்டாங்க வந்தனஞ்செய்து யானெழுது நிருபம் திரல்கொண்ட ரோமைகர்த்தனையாளு மகராஜ திரயிரையானென்பவர் காருலவு மிப்புவியிலே தனது நாட்சென்று கயிலாசபதி

+ ஆதிரியானென்பவன் திரையானுக்கு புத்திரனெனதெரியவருகிறது.



97

மேவினர் கர்த்தனே இவவுலகையாண்டுநீ ரெங்களைக் காத்தரட்சிப் பீரெனில் மாறுதலிலாமலிக்காகிதங்கண்டுநீர் மனதிலாயாசமின்றி வரவேணுமென்றதிக வாஞ்சையோ டமிவித்தமந்திரி விண்ணப்பமிதுவே,

(உ ம்) மந்திரி சேவுகனுக்குச் சொல் விருத்தம்,

சிறந்தசேவுகனேநீதான் சீக்கிரமாகவோடி
விரைந்துஇக்கடிதங்கொண்டு வங்களநகரந்தன்னில்
உறைந்தஆதிரியான்மன்னன் ஒளிச்சமுகத்திலீந்து
அனாநதிடுமறுமொழிக்கொண் டனெடிக்குள்ளேவாராய்.

சேவுகன் (உ ம்) மந்திரிக்குச் சொல் விருத்தம்,

நிந்தையேயணுகிடாமல் கலமேலாக்கிரைகவர்ந்த
எந்தையெம்பிரதோன்வாச வினியமந்திரியேபோற்றி
அந்தவங்களதேசத்தை ஆளுமன்னவன்தனக்கு
தந்தஇந்திருபந்தன்னை தடையறச்செலுத்திவாரேன்,

(உ ம்) மந்திரி முதல்மந்திரிக்கு நிருபமெழுதுகிற விருத்தம்,

தெண்டிரைசூழ்புவிதினிலே வெருநீர்கள்வார்த்தினுல்
தீபுரமாயதிவிரர்களைக் கொடுசென்றவர்வாகையுடன்
மண்டலமும்புகழ்கொண்டரசாண்ட மகுடமுத்துவஞானனெனும்
மந்திரிபிலாகுரனதிபவே யெழுதியவாசகமானதுதான்
நன்றெனவரியல்கொண்டு செலுத்திஇந்நாளாவாகவேபான்
நவில்ரிதாயியபுகழ்பெறு ரோமையில்நகர்வனமகிழ்வதுர
மன்னுபுகழ்நதிடவென்று சிறந்திடுமாநகரான்திரையான்
மன்னவனுலகினில் யாருமறிந்திட மண்ணில்மடிந்தனரே.

(உ ம்) மந்திரி விருத்தம்.

சங்கையிலரசன்வாசல் சுமுகசேவுகனேவோய்
இங்கிதமுடையயெந்த னிறையவன்றனக்குநகத
மங்கள்ஞாண்த்தொனந்த மந்திரிபிலாகுரர்க்கு
துங்கமிக்கிக்டிதந்தந்து சுறுக்கினில்வருகுவாயே.

சேவுகன் சொல் விருத்தம்.

கொடுத்தகட்டளைதனக்குக் குறையுதுஅணுகிடாமல்
சடுத்தமாற்றலரைவென்றுக் குடவனூநினிலிருக்கும்
24

படித்தசற்குணத்தோனை பரிவுறுமுதலமைச்சன்
இடத்தினிற்கொடுத்துச்சேதி யிதுகூறனைதருவேனையா.

சேவுகன் ஓலைகொண்டுபோகிற தரு இராகம் தோடி அடதாளசாப்பு

ஓடியே நடந்துசெல்லுவேன் திருபங்கொண்டு ஓடியேநடந்து
ஓடியேமலையுங்குன்று காடுகளையுங்கடந்து
பாடியனிருபந்தன்னை தேடியே கொடுக்கவென்று (ஓடி)
ரோமைநகராளுகின்ற சேயமுடிமன்னவனும்
ஏமநூரடைந்ததாலே தாமிஷமென்னயிப்பாலே (ஓடி)
வேந்தர்களிடத்திற்சென்று தேர்ந்திடத்திரைகிவர்ந்த
எந்தலமைச்சன்தனக்கு சோர்ந்தனிருபங்கொடுக்க (ஓடி)
ரத்தினமுடிதரித்து இத்தரையையாளுமன்னன்
வெற்றியுலகையடைந்தார் அத்தனருளினாலே (ஓடி)

சேவுகன் இஸ்தாக்கியாருக்குச் சொல் விருத்தம்.

தென்னவர்பணிந்துபோற்றுந் திரனுந்திரையான்றன்பால்
முன்னின்றுமதிநலோடும் முதல்வனைசரணம்போற்றி
மன்னியஉனதுநேச மந்திரிஉமக்கிப்போது
உன்திருசமுகத்திற்கு ஓலையொன்றனுப்பினாரே

இவ்விடத்தில் (உம்) மந்திரி எழுதிய ஓலையை வாசிக்கவேண்டியது.

இஸ்தாக்கியார் புலம்பல் இராகம் ஆகிரி அடதாளம்.

அரசன் மடிந்திட்டாரோ என்ன செய்குவேன் அரசன் மடிந்திட
மறுமன்னவர்களிடம் வருந்திரைகளை வாங்கி
வாருமென்றே எனக்குத் தேறுதலுடன்சொன்ன (அரச)
சிறுபொழுதிருந்தென்னை சேயன்போலேகாத்த
அருமையாகியஏகதன் ஆதாரமான என் (அரச)
சதியோசற்பினைதானோ சருவேசுரன் அமைத்த
விதியோ அறியேனிந்த மேதினிதனை ஆண்ட (அரச)
உரிமையாகியநல்ல உபதேசத்தைபோதித்து
திருமறைத்தனிலுன்னை சேர்க்கவென்றிருந்தேனே (அரச)
கொடியவஞ்சகர்செய்த கொலையோயிதுவென்ன
அடியேனறியேனென்னை ஆதரித்த ஏகதன் (அரச)

இஸ்தாக்கியார் சொல் விருத்தம் தேவாரம்.

வரிசைபெற்றிலகுரோமை மன்னவன்தன்னைபோலும்
இருநிலநன்னிலைந்த இறையவன்தனைகாண்பேனோ
பொருமியென் னிதயமெல்லாம் புண்ணதாய் விட்டதையோ
கருதரும் பொருளேஆதி கர்த்தனே என்னசெய்வேன்



# ஆதிரியான் இராசன் தோற்றம்

விருத்தம்.

கொம்புகுழல் மேளவொலிக் குமுகுமென்னக்
கூறரிய பலவிருதுங் குறையற் றோங்கி
சம்பிரம மாகமணி மகுடம்பூண்டு
சாற்றரும்ரோமா புரிக்குத்தலைமையான
அம்புவியில்தினையாளும் மடிந்ததாலே
அரசியல்புசெலுத்திட ஆதிரியான்தானும்
எம்பிரதோன் திருநாமந்தனைகையேற்று
எழில்மணிசிம்மாதனத் திற்கிதோவந்தானே.

தரு கன்னிகள் இராகம் நாட்டை ஜம்பைதாளம்.

சென்னிதனில் நவரத்னமணிமுடி
சிறந்தபருதிபோல் திறைகதாலங்கிட
பொன்னின்பணுதிகள் மின்ன ஆதிரியான்
மன்னன்கொலுவினில் தோன்றினானே மன்னன்கொ
ஆனைபரி இருபுறமும் நெருங்கிட
அதிகாரனுவம் அதிரசதுரங்க
சேனைகாவலர் தானைகள்சூழ்ந்திட
சிறந்தகொலுவினில் தோன்றினானேசிறந்தகொலுவி
பூவையர்களிரு புறமுஞ்சாமரை
போடமந்திரி மாதர்கள்சூழவே
காவலனாதிரியான் மன்னவன்
கனக்கொலுவினில் தோன்றினானேகனக்கொலு

ஆதிரியான் சொல் போற்றிக்கவி.

சந்திரசடாதரனே சிவனேபோற்றி
சாம்பசிவநாயகனே சரணம்போற்றி
மந்திரமாதவர்துதிக்கு மரனேபோற்றி
வரமளிக்குமீஸ்வரனே மலர்த்தாள்போற்றி
கந்தனைமாமுகனை யளித்தவனேபோற்றி
காளியுடனுறைய கங்காளாபோற்றி
எந்தனையாண்டருள் புரியுமீசா உந்தன்
எழிலடியைஎக்காளும் இறைஞ்சினேனே.

(உம்) மந்திரி சொல் விருத்தம்.

பலவிருதுகளினோடு பகாருங்கீர்த்திகொண்ட
மலர்மணிகொலுவின்மேவு மன்னர்மன்னவனேபோற்றி

வுலகினிலளவிலாத வஜிரவுத்தண்டனுசி
கலமுடனெம்மையாளும் ராதிபாபோற்றிபோற்றி,

(௩ம்) மந்திரிசொல் விருத்தம்,

சோதிமாமகுடம்பூண்டு துலங்கியச்செங்கோலேந்தி
நீதியுநெறியும்நல்ல நிலமையுந்திகிரில்லாத
பாதிரமெல்லாராலும் வலிமையில்மிருக்கவீர
ஆதிரியானேஎங்க ளண்ணலேசரணம்போற்றி.

(௪ம்) மந்திரி சொல் விருத்தம்.

சுருதிமாதவத்தோர்போற்றுக் துலங்கியரோமைநாட்டிற்
பருதிபோல்மவுலிபூண்ட பார்த்திபன்றிரையானுக்கு
குருதியவொளிவின்மிக்க குலசிகாமணியாய்வந்த
விருதுஆதிரியானென்னும் வேந்தனேபோற்றிபோற்றி,

சேனாபதி சொல் விருத்தம்,

பொருந்தியவரசர்போற்றப் பிகலரும்புகழின்மிக்க
திருந்தியரோமைநாட்டின் திரையான்மன்னவன்றனக்கு
விருந்தமாகதன்குலத்தை விளங்கவந்தவதரித்த
சிறந்தஆதிரியானென்னுஞ் செம்மலேபோற்றிபோற்றி.

இராசன் தேசவிசாரணை விருத்தம் ஆசிரியம்,

தேசத்திலுள மற்மன்னர்கப்பனுந்
செலுத்தி வருகின்றார்களா ?

(௨ம்) மந்திரிசொல் விடை.

செலுத்தாம லட்டிசெய்தா லவர்களிப்போது
சிவனேடிருப்பார்களா.

இராசன் சொல் வினா.

தேவாலயங்களது பூசைதவராமலே
செய்து வருகின்றார்களா ?

(௩ம்) மந்திரி சொல் விடை,

திரிகாலபூசை பலியானதுக்குறைவின்றி
செய்துவாரார்ராசனே.

இராசன் சொல் வினா,

வாசமிருநம்து நாட்டினில் மாதமும்மாரி
மாறாமல் பெய்துவருகுதா ?



(௪ம்) மந்திரி சொல் விடை.

மணிமகுடவேந்தனே மும்மாரிமாதத்தில்
வருஷித்துவருகுதையா,

இராஜன் சொல் வினா.

மாநகரில்வாழ்குடிக ளாறிலோர்கடமையது
வழங்கிவருகின்றார்களா ?

சேனாபதி சொல் விடை.

மன்னவர்கள்மன்னனே ஆறிலோர்கடமையுன்
மனமகிழவே தருகிறார்,

இராசன் சொல் வினா.

தேசமிகு மாயுதச்சாலைத லுண்டான
நிறையிலொரு குறைகளுண்டா ?

(௨ம்) மந்திரி சொல் விடை.

நிருபனே குறைவின்றி படைவீரராஜுக்கள்
நிறையாயிருக்கின்றதே.

இராசன் சொல் வினா.

நிலைகெட்டுமறுசமய மார்க்கத்தைபோதிக்கும்
நீசாளுகிலுண்டா ?

(௨ம்) மந்திரி சொல் விடை.

நேசமாகசொல்லுவேனதனை யென்கனவிலும்
நிகழ்ந்திடக் கேட்டதில்லை,

இராசன் சொல் வினா.

ஆசையுளநமதுதெய்வங்களைப் பழிக்கின்ற
அசடாளுகி லுண்டா ?

(௪ம்) மந்திரி சொல் விடை.

அண்ணலேவுண்மையாய் சொல்லுவேனிப்புவியி
லதனையான கேட்டதில்லை.

இராசன் சொல் வினா.

அடல்கொண்ட மறுமன்னருடன் பொரவிடப்போன
அமைச்சனது சேதியுண்டா ?

சேனாபதி சொல் விடை.

அனேகருடனே பொருதிதிரைகொண்டு வருகிறார்
அடுத்து கம்பதிராடியே.

இராசன் சொல் விருத்தம்.

சீர்பெறுசீங்கனிபோ செய்பவளையாவும்
பேர்சிறந்திடயான்கேட்டுப் பிரியமுற்றகங்குளிர்ந்தேன
ஊர்குடிபடைகள்யாவும் ஒருகுறைகளுமில்லாமல்
கேருடனிருந்துவாழ்வீர் நீடூழிகாலந்தானே,

மோகினிதேவி இராசனிடத்தில் வருகிற விருத்தம்.

குழியெனும்சிறிவில்வீழ்ந்தக் கூளிதன்னுருவமெல்லாம்
அழிவுறமறைத்துக்காட்டி அரிவைபோ லுருவங்கொண்டு
செழியுமாதரியாரென்ன ஐக திருசமுகத்தைநாடி,
பழிமுடித்திடுவேனென்று பாவைமோகினிவந்தாளே,

தரு கண்ணிகள் இராகம் பந்துவராளி ஆதிதாளம்.

செங்கயற்குலமுங்கொண்டு சித்திரப்பணிகள்பூண்டு
துங்கனுதிரியானமுன்னே தூர்த்தியும்வந்தாளே
எங்களைமறந்துமறு ஏசுமதத்திற்புகுந்தோர்
தங்களை வதைப்பேனென்று சாமளைவந்தாளே.

பூசைபலியைவெறுத்து ஏசுமதத்திற்புகுந்த
நீசரைவதைப்பேனென்று நீலியும்வந்தாளே
ஆசையுடனேயிறுமா ரைகவேபணிந்துவந்த
நேசனமறைபொழிப்படுத்தனவேதெட்டகாலம்

திக்கமாயாசனுக்குச் சேதிகளெல்லாமுரைக்க
மூர்க்கமுடனேசபையில் மோகினிவந்தாளே
பார்க்குள்ளேஙமைவெறுத்து பஞ்சைமதத்தைபணிய
ஏக்குமோஇதென்று சொல்லிசண்டிவந்தாளே.

மோகினி இராசனுக்குச் சொல் விருத்தம்.

விசையராயர்சூழ மணிசிங்காதனத்திருந்து
பரிசனத்துடனேரோமைப்பட்டினத்தன்னைநாளும்
அரசுசெலுத்திவாழும் அன்பனேஆசீர்வாதம்
தரிசனத்துடனுனக்கோர் சங்கதிசாற்றவந்தேன்.



மோகினி சொல் மேற்படி தரு கண்ணிகள்.

அன்புடனுமக்கொருசேதி அறிவிக்கவந்தேனப்பா இப்போ
து, என்சொற்படி நடவாதகுலமன்ன ராட்சியமானதுண்டோசொல்

இராசன் சொல் மேற்படி தரு கண்ணிகள். (வாயே

ராட்சியமானதெனக்கு அநுகூலமாக சொல்லவந்தவுந்தன்
பேச்சையும்பிவுலகில் வெகுபலிபூசைகள்செய்துவந்தேனென்தாயே

இராசன் சொல் ஷை தரு கண்ணிகள்.

போவென்றனுப்புவென்தாயே உமதிடபொற்பதமேசரணம் எனது
பேச்சைமறுதலித்தாலவன்தன்னை பிளந்துஎறிந்திடுவேனிப்போது

மோகினி சொல் ஷை தரு கண்ணிகள். (க்கு

போவென்றுசொல்லவும் பேதகமாகப்புறப்படமாட்டேனொரு ஒரு
கோபமிகுத்தங்கள்வேணுமென்றால்கொஞ்சங்கூட்டியனுப்புகிறேன்

இராசன் சொல் ஷை தரு கண்ணிகள். (விடாதே

கூட்டிஅனுப்பினால் காட்டிஅவனிட மேட்டிமையானதெல்லாமென
தாயே, நாட்டிகமாயுனல்கூட்டியவர்களை போட்டுவதைத்திடுவேன்
(தாயே

மோகினி இராசனுக்கு சொல் விருத்தம்.

வேறொருகவலையில்லை வேந்தனேஉன்சொல்லுக்கு
நாலுமாறுகளைப்பேசித் தடுத்தவனைப்பானாகில்
சீறியேவாளால்வெட்டிச் சிதைத்தநரிகளுக்கு
தேறியளித்துசெய்தால் தீருமென்கோபந்தானே,

இராசன் மோகினிக்கு சொல் விருத்தம்.

ஆவலோடெனக்கிப்போது அறிவித்தசேதியாவும்
தேவிகங்காளிஎன்தன் சிந்தையிலறிந்துகொண்டேன்
பாவமாம்புதுமார்க்கத்தை பாருமிஸ்தாக்கிதன்னை
சிவனைவாட்டிப்பூசை செய்திடஅனுப்புவேனே.

அஞ்சற்காரன் (உம்) மந்திரிக்குச் சொல் விருத்தம்,

நவமணிமகுடம்பூண்ட நரபதிசமுகந்தன்னில்
அகமகிழ்ந்திருக்குமெந்தன் அரசன்மந்திரியேபோற்றி
புவியினில்இரைகள்வாழ்ந்தப் போனதோர்கிலாசுவென்போர்
தவிர்த்துமாதுபரத்தொடு தானிருந்தாராரையா.

(உம்) மந்திரி இராஜனுக்குச் சொல் விருத்தம்.

செப்பபொற் கொலுவினுகந்தவீற்றிருக்குஞ் செம்மலேகேளு முன்திரையான்—வையமீதவர்தன் வாசலில் முதலாமந்திரி பிலாகுர னென்போன்—வெய்யமாற் றலர்களுடன்சமர்ப் பொருதிமிகுந்தமா யத் திரைகளிங்கவர்ந்து—ஐயமற்றெழுந்தேவருகிறுரென்றே அரச னே இன்றுகேட்டறிந்தேன்.

இராசன் சொல் விருத்தம்.

அதிகதகாரியங்களெனக்குரைக்கின்ற அமைச்சனே பிலாகுரன் றனையே—சிறக்குமுன் னெதிர்போ யழைத்திடவேண்டிச் சிந்தை யில் மிக மகிழ்வாமெனன்—அறக்திகழெனது ராணுவத்துடனே ஆன தேர்வரிசைமெடுத்து—பிரக்கிடாதெழுந்துபிரியமாயழைக்கபுறப் படும் மந்திரிமாரே.

தரு இராகம் தோடி அடதாளசாப்பு.

பல்லவி.

அரசன் உரைத்தபடி அமைச்சன் பிலாகுரனை
அழைத்து வருவோம் வாருங்கள்

அநுபல்லவி.

பரிசனத்துடன்சென்று பகைத்தமன்னரைவென்று
பருதிகப்பணக்கொணடு பாரில்வாரதைக்கண்டு
பச்சைரத்னமணி உச்சிதப்பரிசுடனே
நச்சிதபொற்றட்டிலெலி மிச்சைகற்கனியுடனே (அரச)

சரணம்.

அவனிமுழுதும் வெற்றிகொண்டு புகழ்நிறைந்தோன்—
அடங்கா மாற்றலர்களை அடக்கி திரை கவர்ந்தோன்
அலைகட லுலகினி லிலகிய பலகலை
நிலைகல குறமுள சிலைமதனை யனைய
அழகிய முகவசி காகளைவரிசையுடன்
அலவகிழ் பெருபடை அடவிகிடுகிடென
ஆலைபரிசேனைதள
வாஹனங்களுக்கதிக்க
திகைரணவீரகுர
மகவல்களுக்குதிக்க



இஸ்தாக்கியார் சொல் இன்னிசை.

முரசிசெனுவிதான் முழங்கமுன்னடந்து எங்களைத்தான்
அரசே சீர்வந்தழைக்க அத்தனைக்கும் பாத்திரனே
விருதுபலசேனையோடு மேவியெனை காண்பதற்கு
கருதிவந்தவேந்தவுன் கமலபதம்போற்றினனே,

இராசன் இஸ்தாக்கியாருக்குச் சொல் விருத்தம்.

தெரிவுறுபிலாகுவேகேள் திரைகவர்ந்திடவென்றேதான்
தரியலர்பதியிற்சென்று தயங்கிகொந்தினைத்தாய்நீயும்
சொரிகுழலுனதுதேவி சுந்திரப்புதல்வீராடும்
வரிசையாய்ரோமைக்கேக வருகுவாய்மதிவல்லோனே.

இஸ்தாக்கியார் சொல் இன்னிசை.

சிந்தைமகிழ்வாகவென்னை திரைவாங்கிவெற்றிகொண்டு
எந்தன்முன்னேவாருமென்று எனையனுப்பும் மன்னவனே
உந்தனையான்காணுமுன்னே வுயிரொழிந்துவிட்டேரே
தந்தையைபோலெனைகாத்த தாதாவைகாண்பதெப்போ

இராசன் இஸ்தாக்கியாருக்குச்சொல் விருத்தம்.

சாற்றரியபிலாகுரனே திரையானென்னுந்
தார்வேந்தன் றனைநினைத்துச்சலிக்கவேண்டாம்
பாற்றிபன்தானளித்த சங்கையத்தைபார்க்க
பத்திரெட்டியா னளிப்பேன்பயப்படாதே
ஏற்றரியகம்துரொ ஆ சமுகந்தன்னில்
இனியமந்திமந்திரியா என்றும்போலே
காற்றிசையுமதிய எந்தன் படையைக்கூட்டி
கடந்துனக்குஅதிரசங்கை நான்செல்வேனே.

இராசன் (உம்) மந்திரிக்குச் சொல் விருத்தம்.

எந்தன் துரத்னசிம்மா ஸனமுன்னுக
இருக்குமதிமந்திரிகளே இயம்பக்கேளாய்
அந்தமுறுமெனது முதலமைச்சனை
அறிவுனிறைபிலாகுரன் கற்பனைமீறாமல்
இந்நகர்ச்சேனைபரி வாரமெல்லாம்
இசைந்தவன்கட்டளைப்படியே இனங்கிவேதான்
தொந்தமுறநம துகுடி படைகட்கெல்லாம்
சொலவுவரப்பிதிப்புடன் கடக்கத்தானே



1/6804

(உ ம்) மந்திரி சொல் விருத்தம்.

சொல்லுதற்குச் சம்சயமொன்றில்லைவேந்தே
சுந்தரனேயுந்தன்மொழிச் சிரமேற்கொண்டேன்
வெல்லுமுதலமைச்சன்மொழி தனைமீறாமல்
மேன்மையுடனேநடக்க விளம்புவேனே.

(ங ம்) ங. மந்திரிக்குச் சொல் விருத்தம்.

வில்லம்புகரத்திலேந்தும் வீரசேனைகளுக்கெல்லாம்
அல்லலில்லாமற்காக்கு மடற்சேனாபதியேகேளாய்
வல்லவன்முதலமைச்சன் வார்த்தையைமறுத்திடாமல்
ஒல்லையில்நடந்துகொள்ள உரைத்தனர்அரசன்தானே.

(ங ம்) மந்திரி சொல் விருத்தம்.

வகுத்துரைத்தமன்னவனுர் மொழிமீறாமல்
வாகுடையமுதலமைச்சன் வார்த்தைகேட்டு
மிகுத்துவரும்படைகளெல்லாம் நடக்கச்செய்வேன்
வீரமிகுமந்திரியே வெளியாய்தானே
பகைத்தவர்களுயிர்க்கவர்ந்து விஜயங்கொண்ட
பருதிபத்திரனேயான் பகரக்கேளாய்
தொகுத்தமன்னனுரைத்தபடி முதலாமந்திரி
சொல்லுமொழி தனக்கடங்கித்துதிசெய்வீரே.

(ச ம்) மந்திரி சொல் விருத்தம்.

செய்திடுவேன்செயசேனாபதியேநான்
செப்பியதோர்க்கட்டளையைச் சிரமேற்கொண்டேன்
செய்யமனமுதலமைச்சன் வார்த்தைக்கேட்டு
திட்டமுடனேநடக்கச் சாற்றுவேனே
ஐயமென்னசேனாதிபதியேகேளாய்
அரசனருளியமொழிக்கோர் ழுறிவில்லாமல்
துய்யகுணமுதலமைச்சன் வார்த்தைகேட்டு
தொல்லுலகிலே அடங்கிநடந்திடுவீரே.

சேனாபதி சொல் விருத்தம்.

திட்டமறவாதபடி செய்வோமையா
திறமிகுமன்னன் மொழிக்குத் திதில்லாமல்
இட்டமுறுபிலாசு முதலமைச்சன்வார்த்தைக்
செதிர்த்துமொழிபேசாம லிணங்குவோமே
பட்டணத்திலுள்ள குடிபடைகளெல்லாம்
பார்த்திபனுர்மொழிதனக்கோர் பழுதில்லாமல்
கட்டளையைக் கைபிடித்திடப்பிராலுல்
காலநலமுடைய வழிகாட்டுவேனே.



இராசன் இஸ்தாக்கியாருக்குச் சொல் விருத்தம்.

இணங்குமணிவாசல்தனி லிருந்தேயெந்நாளும்
இலகுமுதல்மந்திரியே இயம்பக்கேளாய்
மணங்கமழு வரிசையிளவாழைவாச
மாங்கனியுந்தேங்கிளநீர் வடிபால்நெய்யும்
பணிபொருந்பொற்றட்டில் வைத்தேசினி
பாருதடவாளமெல்லாம் பரிவாய்கொண்டு
வணங்கிநம்தேவர்கட்கு பூசைசெய்து
வைத்துநல்ல விடைவாங்கிவருகுவாயே.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

வாங்கிவருவாயென்ற மன்னவாவொருவிண்ணப்பம்
ஏங்குதலில்லாதின்ன மென்னசொன்னாலுஞ்செய்வேன்
நீங்குறீங்கள்போற்றுந் தெய்வஆராதனைக்கு
நீங்குதலானஎன்னை நினைப்பதுநன்றோமன்னா.

இராசன் சொல் விருத்தம்.

நன்றோபோவெனமுனிந்து நீதான்சொல்ல
நல்லறிவுகெட்டு மதிராசமாச்சோ
குன்றும்மதிதுாளாய்த் தொழுதுவந்த
குலதெய்வந்தனைத் துதிக்கக் கூடாதோதான்
என்றுமென்மொழியைமறுத்திடாதோ
இருநிலத்திலிருப்பதுநீ இல்லைமெய்தான்
சென்றுமந்திரிகுலமென்னிமாரி
திருபலிபூசையை நடத்திடங்கொள்வாயே.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

புவிதனிற்பூசைசெய்யப் போமெனுஞ்சேதியாவும்
செவிதனிற்கேட்டியோங்கள் சேவிக்கவறியோமய்யா
கவிலுரற்கரியசேசு நாதனைத் துதிப்போமல்லால்
அவியுறுநரகில்வீழ்ந்த அலகையைபூசிப்போமோ.

(உ ம்) மந்திரி சொல் விருத்தம்.

பூசைதன்செய்யெனன்று புகலஉன்தலையிரும்போ
வாசமாயிதுநாள்வரை வணங்கிவந்திடுந்தெய்வத்தை
தூஷணித்திடவென்னத்தான் துன்மதியடுத்ததையா
நாசகாலந்தான்வந்து நாடியதுனக்குத்தானோ

(௩ம்) மந்திரி சொல் விருத்தம்.

தானதாயிதுராளில்லா சஸ்டகல்விகளைக்கற்று
மானமில்லாதநீச மடையர்களுடனேசேர்ந்து
ஈனமாம்புதுமார்க்கத்தி லிச்சைவைத்தினியில்லாத
நானெனுங்கெருவங்கொண்டு நடப்பதுஞாயந்தானோ.

(௪ம்) மந்திரி சொல் விருத்தம்.

நடத்தையிலுன்னைப்போலும் நல்லவனில்லையென்று
நடத்தினிலுள்ளோரெல்லாஞ் சந்தோஷமாகவுன்னை
அடுத்தனதேவல்கேட்டோ ரனைவரும்பழிப்பதற்கோ
கடுத்திடுமறுமார்க்கத்தை கைப்பற்றிக்கொண்டாயா.

சேனாபதி சொல் விருத்தம்.

ஐயமில்லாமலிந்நா ளநுசரித்தேற்றிவந்த
துய்யதெய்வங்களெல்லாந் துஷ்டகூளிகளென்றேநீ
வையவர்பட்டபோதே வந்ததுஅழிவுகாலம்
வெய்யவேபத்தனைப்பசைத்து வீணிலேமடியலாமோ.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம்.

இரும்பதைபழுக்கக்காச்சி இருசெவிதனில்விட்டாற்போல்
பெரும்புகழுடையேசுங்கள் பிடாரிதேவருக்குப்பூசை
தரும்படியெனக்குநீங்கள் சாற்றியதுகித்திடாது
அரும்புகழ்பரனையல்லால் அலகையைவணங்கிடேனே.

இராசன இஸ்தாக்கியாருக்குச் சொல் விருத்தம்.

ஐயமுற்றெனதுமுன்னே அகந்தைகள்மிகவேபேச
வையகந்தனிலேமெத்த மனத்துணிவுடையநீயோ
கைகுவித்திடநான்சொன்ன கடவுளைமறுத்தையானுல்
பொய்புரைத்திடுவாய்இப் போடுவேன்புவியின்மீதே.

இஸ்தாக்கியார் இராசனுக்குச் சொல் இன்னிசை.

செத்தாலும் ஆதி திருப்பாதத்தை யான்மறவேன
பித்தோபிடித்துப் பினத்துகிறீர் மன்னவனே
நத்திபோநீங்கள்தொழும் நாக்தலகையானதற்கு
உத்தபலிபூசை செய்யேன் உண்மையிது கண்டீரே.

இராசன் சொல் விருத்தம் நெடில்.

வங்கமுங்கொங்கமுங்கு வளர்கொச்சி யீழமும்
மலையாளமற்றுமுள்ள



மன்னவர்கள்யாவரும் என்னுடையக்கட்டளை
மறுத்திடவுமொருவரில்லை
இங்கெனது வார்த்தையைச் சங்கைக்கேடாகவே
இகழ்ந்திடக்காலமாச்சோ
இடர்புரியு மறுமறையை திருதியெனவே கொண்டு
என்றுமேவணங்கிவந்த
சங்கைசெரி தேவரைப்பங்க மொழிபேசவுந்
தானென்றமதமானதோ
தலைகெட்டுபோனதோ மனதுற்றவயிரமோ
தரையுற்றபேர்களறிய
பங்கமுடனே வுனது அங்கமது சிதறிடப்
பருவாளி னலறிந்து
பாயுநரிநாய்களும் பேயுமுனையுண்ணவே
பண்ணுவேன் அறிகுவாயே.

இஸ்தாக்கியார் சொல் விருத்தம் நெடில்.

வட்டமிட்டுக்கு மறியலைகடற்கவரினும்
மகமேரு தூளாகினும்
யானிலம்பிறைபொடு வளர்சந்திரசூரியன்
வடக்கு தெற்காகி வரினும்
கட்டுவிட்டுச்சோதி பிசகினும்நாளொன்று
கடிகைநாறாகினும்
கங்கைப்பெருகலாகினுங் கங்கையெனபாய்கின்ற
காவேரிமாறுபடினும்
இட்டசட்டமதாக ஏகமறைதன்னையே
இரஞ்சுவேனலமன்றி
எரிகனலில் வீழ்கின்ற அலகையைவணங்கிடேன்
என்னதுய ராம்புரிகினும்
பட்டமாமரியக் கட்டையுடலானதைப்
பாழாகவேவெட்டினும்
பாரில்நரிநாய்களுந் இரையாகவிடினுமென்
பரனைமறவேன் அறிகுவீர்

இராசன் புலம்பல் ஆகிரி திரிபுடைதாளம்.

பல்லவி.

ஏதுசெய்குவேன். ஆலமுண்டவனே அரசங்கரா சிவ
எந்திழைந்தலமீ தணிந்தவனே

அநுபல்லவி.

சாதுசற்குண ஞானமூர்த்திய தாலசத்திய மானதைத்தொழ
சண்டமாருகமண்டிடும்படி தொண்டு என்னுடனின்றுவைகிறான்

சரணங்கள்.

பிரபலதனுடனெனது முன்வசை பேசுரான் எங்கள்
பிரிய தேவனை நிரகபேயென ஏசுரான்
சருவபொருளவ ஜெருவனே யெனவிசுரான்
சாம்பவசங்கர மாலையுந்தொழ கூசுரான்

அறிவுகுன்றியே காணமாகுது
அந்தரத்தினில் வந்தெனக்கொரு
முரணைசொல்லவு மொருவரில்லையே
மூர்த்தியே எனை காத்தருளியும் (ஏதுசெய்கு

பூசைபடை பலியானதிலென குறைகளோ
புட்ப வர்ச்சனைசெய் வதிற்புறை நிறைகளோ
மாசபுது மதமான தைத்தொழ முறைகளோ
மானமுற்றவ ராசரித்திடு மறைகளோ

ஈசனே கைலாச வாசனே
என்னசெய்குவே னிந்த வேளையில்
வாசதேவனே வன்னிநாதனே
வந்தெனக்கொரு வார்த்தை சொல்லுவீ (ஏதுசெ

தாறுமாறுகளாக பேசவுங் கூடுமோ
சட்டமானது விட்டொழிந்தினி யோடுமோ
தேறியவனினி புங்களைந்தொழ நாடுமோ
தேசமுழுதிலும் புதியமறைவினை யாடுமோ

சீரணித்திடு மாதிசாம்பவி
சிவிபைரவி குமிசங்கரி
ஆறுதற்சொல்வாரு மில்லையே
அரகரா சிவமுருக மூர்த்தியே

இராசன் ஒப்பிலாமதிக்குச் சொல் வெண்பா.

எண்டிசையுந்தான்மதிக்கும் இஸ்தாக்கிமனைவியேகேள்
கண்டேஎங்கள்தேவர்களை கைதொழுதுதெண்டமிட்டால்



நகைமிகசெய்வேன் தடுத்தாலென்னகவானாலே
ங்கம்தைசதைப்பேன் அறி.

ஒப்பிலாமதி சொல் நேரிசைவெண்பா.

அறியென்றுசொன்ன அரசனேயெங்களிட
குறிகண்டகுற்றமுண்டேல் கொன்றுவிடும்வெறிகொண்ட
கூளிகளைகையெடுத்து கும்பிடோம்யேசுதன்னை
ஊழியுள்ள காலமறவோம்.

இராசன் ஒப்பிலாமதிக்குச் சொல் விருத்தம்.

வாதுகொண்டு மறுசமயந் தனையாசித்த
மந்திரிபிலாசுரன்றன் மனைவியே கேள்
சாதுரிய மாதவேயான் சொல்லும்பேச்சைத்
தடுக்காமலே கடந்தால் தரணிமீது
இதனுக்கா தொருகாருங்குறை வில்லாதென்
தேவர்களை யநுசரித்து சீராய்வாழ்ந்து
கோதரவே இருப்பதற்கு மனதுண்டானால்
கூசாமல் வாய்திறந்து கூறுவாயே.

ஒப்பிலாமதி இராசனுக்குச்சொல் விருத்தம்.

கூறுதற்குயாங்கள் செய்பிழைதானென்னக்
கொற்றவனே உமது குவலயத்திலேதான்
வேறரசர் தனையழைக்க மனங்கொண்டோமோ
மேன்மைகுடிகளைக்கெடுத்து வினைச்செய்தோமோ
சேறொழித்தப்பானரி மறையைநாடித்
திசைபெற்றே மல்லாமற்றீதாயாங்கள்
வேறுபிழைசெய்ததுண்டோ அடியோர்பேரில்
வெஞ்சினங்கொண்டிருப்பதென்ன வேந்தர்வேந்தே.

இராசனுக்கும் ஒப்பிலாமதிக்கும் தர்க்கம் ஏசல்.

தன்மொழியைமறுத்து வீணில்மடியாதே மடமாதே எங்கள்
ந்தமுள்ளாசுரனை சய்கையுடனே பணிந்துவாராய்.

ஒப்பிலாமதி சொல் கை தரு தாளம்.

ருமென வெயுரைத்த மன்னனோ நகைசன்றனிமீது இரு
ங்கையரை தான்அமந்து வையமதி லய்யமிரந்தானே

இராசன் சொல் ண தரு தாளம்.

ஐயமிரந்தானென்றுநீ அரிவையரோ தேவரை சொல்லாதேயெங்கள்
அரிராமன்பாதமதை அன்புடன் தொழுவரிசை ஈவேன்

ஒப்பிலாமதி சொல் ஷை தரு தாளம்.

வரிசையில்லா வும்முடைய மாயனதுசெதியறியாயோ ஆயர்
மனைதனில் வெண்ணையை திருடி உரலுடனிற் கட்டி அடியுண்டான்

இராசன் சொல் ஷை தரு தாளம்.

